மக்கள் சிந்தனைப் பேரவை வழங்கும்

பயன்மிகு 10 ஆம் ஆண்டு

# ஈரோடு புத்தகத் திருவிழா 2014




**ஆகஸ்ட் 1 முதல் 12 வரை**

**வ.உ.சி மைதானம், ஈரோடு.**

தினமும் காலை 11 மணிமுதல் இரவு 9 மணி வரை

230 க்கும் மேற்பட்ட அரங்குகள், உலக அளவில் புகழ்மிக்க ஆங்கில புத்தக நிறுவனங்கள், பிரசித்தி பெற்ற தமிழ் புத்தக பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் பங்கேற்கின்றனர்.

**நுழைவுக் கட்டணம் இல்லை**

**தினமும் மாலை 6 மணிக்கு சிந்தனைக் கருத்தரங்கம் நடைபெறும்.**


பல்லவி பதிப்பகம்

ISSN : 2278-7550


# ஆய்த எழுத்து

காலாண்டிதழ்



ஏப்ரல் - 2014


AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES
ISSN : 2278 - 7550

# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

**ISSN : 2278-7550**

INTERNATIONAL JOURNAL FOR TAMIL STUDIES

மலர் : 2 விலை: ரூ.150/- ஏப்ரல் - 2014 இதழ் : 1



**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் அ. அறிவுநம்பி**
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

**சிறப்பாசிரியர்**

**முனைவர் சொ. சுப்பையா**
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

**ஆசிரியர்**

**முனைவர் சி. தியாகராசன்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**இணை ஆசிரியர்**

**முனைவர் க. இரமேஷ்**
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர்.

**துணை ஆசிரியர்கள்**

**முனைவர் போ. சத்தியமூர்த்தி**
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,மதுரை

**முனைவர் தா.க. அனுராதா**

PPMC பல்லவி

**பதிப்பாசிரியர்**

**நல். நடராசன்**
தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.



## பல்லவி பதிப்பகம்

194, கண்ணா காம்ளக்ஸ், 2 -வது தளம்,
மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் அருகில்,
ஈரோடு - 638 011.
தொலைபேசி எண்: 0424 - 2263197
மின்னஞ்சல்: ayithaezhuthu@gmail.com
pallavipublications@gmail.com



**ஆசிரியர் குழு**

**முனைவர் மு.குருவம்மாள்**
காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம், திண்டுக்கல்.

**முனைவர் உ. அலிபாவா**
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

**முனைவர் ப.சு. மூவேந்தன்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**முனைவர் ஓ. பாலகிருஷ்ணன்**
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

**முனைவர் கோ. பாலசுப்ரமணியன்**
திராவிடப்பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திரபிரதேசம்.

**மன்னர் மன்னன் மருதை**
மலாயாப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர், மலேசியா.

**முனைவர் சீதாலட்சுமி**
நன்னியாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.

**முனைவர் ஐ. சாமிக்கண்ணு ஜெபமணி**
சுல்தான் ஐடிரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.

**முனைவர் துரை முத்து சுப்ரமணியன்**
அம்பவுன் அஃப்ஜான்ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, மலேசியா.

**முனைவர் இரா. விஜயராணி**
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி.

**முனைவர் ரெ. முத்துராஜன்**
அண்ணாமலைப்பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**முனைவர் பா. ஆரோக்கியதாஸ்**
போப் ஜான் பால் கல்வியியல் கல்லூரி, புதுச்சேரி.

**கவிஞர் தங்கம் மூர்த்தி**
சாகித்திய அகாதெமி உறுப்பினர், புதுக்கோட்டை.

**திரு. பா. கு. சண்முகம்**
உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், மலேசியா.

**முனைவர் ஷே. நாகூர்கனி**
ஜமால் முகமது கல்லூரி, திருச்சி.

**வெ.ச.சீனிவாசன்**
நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.

**இரா. சந்திரசேகரன்**
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.

**முனைவர் க.தமிழ்ச் செல்வன்**
வி.ஐ.டி பல்கலைக்கழகம், வேலூர்.

**முனைவர் இ.ஆர். இரவிச்சந்திரன்**
உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சி.

**Dr. P.T.Kingston**
Fakulti Bahasadan Komunikasi University
Pendidikam, Sultan Idris, Malaysia.

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - *காலாண்டிதழ் தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். இவ்விதழ் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் வெளியாகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற எவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.*

*கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.*

ஆய்த எழுத்து - தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். 2013 ம் ஆண்டு முதல் காலாண்டிதழாக ஆண்டுதோறும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் இவ்விதழ் வெளியாகிறது. கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற பலரும் இவ்விதழில் ஆய்வு கட்டுரை எழுதி வருகின்றனர். இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

**1. பொருள்:** சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

**2. அளவு:** எம்.எஸ். வேர்டில் (MS Word), ல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில்(Lining Space), 12 புள்ளி எழுத்தளவில் மூன்று முதல் ஆறு பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

**3. முகவரி:** கட்டுரை தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரை முடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெற வேண்டும்.

**4. கட்டுரை அனுப்பும் முறை:** கட்டுரையை pallavipublications@gmail.com (Or) ayidhaezhuthu @gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

**5. சந்தா:** தனி இதழ் விலை ரூ. 150/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 4 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | |
|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | ரூ. 600/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம்/ கல்வி நிறுவனங்கள்/ சங்கங்கள் மற்றும் பிற...) | ரூ. 800/- |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 5000/- |
| புரவலர் கட்டணம் | ரூ. 10, 000/- |

**6. கட்டணம் செலுத்தும் முறை:** உறுப்பினர் (சந்தா)/ கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக**(DD)** ஈரோட்டில் மாற்றிக்கொள்ளத்தக்க வகையில் **(Payable at ERODE)** அனுப்பலாம். இணையவழி, **(Net Banking),** அலைபேசி **(Mobile Banking)** வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம். **A/C Name: PALLAVI PATHIPPAKAM. A/C Type: CA, A/C No : 33679969977. Bank: STATE BANK OF INDIA, Sathy Road, Erode -638 011. IFSC : SBIN0016100.**

**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையதளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.


## பல்லவி பதிப்பகம்

194, கண்ணா காம்ப்ளக்ஸ், இரண்டாவது தளம்,
மேட்டூர் சாலை, ஈரோடு - 638 011.
பேசி: 0424-2251545, 94422 51549, 97919 51549.
மின்னஞ்சல்: ayidhaezhuthu@gmail.com
pallavipublications@gmail.com

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | திருக்குறள் புலப்படுத்தும் மேலாண்மைச் சிந்தனைகள் | – முனைவர் தி.சுமதி | 5 |
| 2. | நாமக்கல் வட்டார நாட்டுப்புற மக்கள் மற்றும் மருதமலை வாழ் இருளர்களின் மருத்துவ முறைகள் | – முனைவர் க. இரமேஷ் | 12 |
| 3. | பிரிவும், பரிவும் | – பி. வசுந்தராதேவி | 15 |
| 4. | கவிஞர் வைரமுத்து கவிதைகளில் பொதுவுடமை | – சா. தென்றல் | 17 |
| 5. | புறநானூற்றில் மேலாண்மைச் சிந்தனைகள் | – முனைவர் ச. மரகதமணி | 20 |
| 6. | புறநானூற்றில் நம்பிக்கைகள் | – க. அகல்யா | 26 |
| 7. | வேற்றுமையில் வேற்றுமை | – முனைவர் பா.சங்கரேஸ்வரி | 29 |
| 8. | சங்ககால ஆடற்கலைஞர்கள் | – செல்வி. மைதிலி அருளையா | 33 |
| 9. | "சங்க இலக்கியமும், தேம்பாவணியும் புதலியியல் ஒப்பீடு" (சண்பக மலரும் – கன்னி மரியாளும்) | – முனைவர் பா. ஆரோக்கியதாஸ் | 36 |
| 10. | வைரமுத்து கவிதைகள் வெளிப்படுத்தும் சமுதாய உணர்வுகள் | – மு. கவிதா | 42 |
| 11. | திராவிட இயக்கம் – ஒரு மறுவாசிப்பு | – முனைவர் ப. கமலக்கண்ணன் | 45 |
| 12. | புதுக்கவிதை வளர்ச்சியில் வானம்பாடி இயக்கத்தின் பங்கு | – முனைவர் ப.சு.மூவேந்தன் | 48 |
| 13. | சவ்வாது மலைவாழ் பழங்குடி மக்களின் வேளாண்மை மரபு அறிவு | – முனைவர் க. இரமேஷ்<br>– பொ. இரவீந்திரன் | 52 |
| 14. | ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளின் வாழ்வியலும் படைப்புகளும் | – முனைவர் க. இரமேஷ்<br>– சு. கணேசன் | 55 |
| 15. | நற்றிணையில் இறைச்சி | – முனைவர் க. இரமேஷ்<br>– க. கோவிந்தராஜி | 58 |
| 16. | திருத்தொண்டர் காப்பியத்தில் மணவினை | – முனைவர் க. இரமேஷ்<br>– தா. வனிதா | 62 |
| 17. | புறநானூற்றில் சமுதாய அறங்கள் | – முனைவர் ப. திலீப்குமார் | 66 |
| 18. | பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் மொழிபெயர்ப்புகள் | – முனைவர் செ. அகிலாண்டேஸ்வரி | 72 |
| 19. | தொல்காப்பிய மரபில் தொன்னூல் விளக்கம் | –முனைவர் தி.நெல்லையப்பன் | 76 |
| 20. | சிலப்பதிகாரம் காட்டும் இந்திரவிழா | - முனைவர் ச.செந்தில்குமார் | 80 |
| 21. | தங்க.செந்தில்குமார் கவிதைகளில் பெண்ணீயம் | - முனைவர் அரங்க.அன்பில்நாதன் | 84 |

# திருக்குறள் புலப்படுத்தும் மேலாண்மைச் சிந்தனைகள்

***முனைவர் தி.சுமதி***
*உதவிப்பேராசிரியர்*
*தமிழாய்வுத் துறை*
*பாரதிதாசன் பல்கலைக் கழக*
*உறுப்புக் கல்லூரி*
*குரும்பலூர், பெரம்பலூர்.*

தமிழ்ச் செவ்வியல் நூல்கள் என செம்மொழி ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள 41 நூல்களில், நீதி நூல்களுக்கெல்லாம் முன் மாதிரியாகவும், கருத்துப்பெட்டகமாகவும் தமிழ் வரலாற்றில் சிறந்த படைப்பாகவும், மனித இனத்திற்கு வழிகாட்டியாகவும் விளங்கும் திருக்குறள் உலக மொழிகள் பலவற்றிலும் மொழி பெயர்க்கப்பட்ட பெருமைக்குரியதாகும். எக்காலத்திற்கும், எந்நாட்டவராகவோ, எம்மதத்தினராகவோ இருந்தாலும், அவர்களுக்கு பொருத்தமுடையதாக இருக்கும் காரணத்தினால்தான் உலகத்தார், 'உலகப்பொதுமறை' என திருக்குறளைப் போற்றுகின்றனர்.

**திருக்குறளின் சிறப்புகள்**

திருக்குறளினை ஆங்கிலத்தில் ஜி.யு.போப், வ.வே.சு. ஐயர், இராஜாஜி முதலானோரால் மொழிபெயர்க்கப்பட்ட இந்நூலின் பெருமை குறித்து அறிஞர்கள் பாராட்டியுள்ளனர்.

*'வள்ளுவர் செய் திருக்குறளை மறவற நன் குணர்ந்தோர்கள்*
*உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி'*

என்று பேராசிரியர். சுந்தரம் பிள்ளையும்,

*வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து*
*வான்புகழ் கொண்ட தமிழ்நாடு*

என்று பாரதிதாசனும் போற்றியுள்ளனர். இரண்டு அடிகள், ஏழு சொற்களில் உலக கருத்துக்கள் அனைத்தையும் கூறியுள்ள விதத்தைப் பாராட்டும் போது,

*'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்*
*குறுகத் தரித்த குறள்'*

என்கிறார் ஔவையார்.

மனித வாழ்வோடு இயைந்த பல்வேறு துறைகளுக்கு இந்நூல் வழிகாட்டியாகத் திகழ்கின்றது. அந்தந்த துறைகளில் ஏற்படுகின்ற சிக்கல்களுக்குத் தீர்வு கூறக்கூடிய ஒரு கருத்தும் பேழையாகும். இதனால்தான் இந்நூலினைப் பற்றி,

*எல்லாப் பொருளும் இதன் பாலுள விதன்பா*
*லில்லாத வெப்பொருளும் இல்லையால்*

என மதுரைத் தமிழ் நாகனார் கூறுகின்றார்.

இந்நூலினுள் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், மருத்துவம், மேலாண்மை போன்ற பல்வேறு துறை சார்ந்த கருத்துக்கள் அடங்கியுள்ளன. இவ்வாறாகச் சிறப்புப் பெற்றுள்ள இந்நூலின் பொருட்பாலில் பொதிந்துள்ள மேலாண்மைச் சிந்தனைகளைப் பற்றியும், அவை எவ்வாறெல்லாம் நிறுவனங்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளில் பயன்படுத்தப்படுகிறது என்ற பாங்கு பற்றியும், இந்த ஆய்வுக் கட்டுரையானது விளக்க முற்படுகின்றது. இக்கட்டுரையில் முதலில் திருக்குறளில் பயின்று வரும் மேலாண்மைச் சிந்தனைகளை ஆராயும் முன் மேலாண்மையைப் பற்றி பொதுவாக அறிந்து கொள்வது அவசியமாகும்.

### மேலாண்மை

மேலாண்மை என்பது பணியாளர்களைச் சுறுசுறுப்பாக்கும் ஒரு கலையாகும். நோக்கங்களை எங்கு சிறப்பாக அமைத்து கூட்டு முயற்சியின் மூலம் அடைய வேண்டிய இலக்கை அடையாளம் காட்டவும், வழிகாட்டவும், ஒருங்கிணைக்கவும், திட்டமிடவும் மிகவும் இன்றியமையாதாகின்றது. மேலாண்மை குறித்து, 'ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தல், அதற்கு நிதியிடல், அனைத்து முக்கிய திட்டங்களையும் உருவாக்குதல், தேவையான கருவிகளை அளித்தல், முக்கிய திட்டங்களையும் உருவாக்குதல், தேவையான கருவிகளை அளித்தல், முக்கிய அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல் போன்றவை தொடர்பான பணிகள், கடமைகளை உள்ளடக்கியதே மேலாண்மை' என்று 'மேலாண்மைத் தத்துவங்கள்' எனும் நூலில் கிம்பல் எனும் அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

### திருக்குறளில் – பிறதுறை கருத்துக்கள்

தமிழ்த்துறையில் மட்டுமல்லாமல் அனைத்து துறை சார்ந்தவர்களும் தம்தம் துறை சார்ந்த நூல் என்று பறை சாற்றிக் கொள்ளும் அளவிற்கு தனித்தன்மை வாய்ந்த நூலாகும். மொழி, இலக்கிய அறிஞர்கள் மட்டுமில்லாமல் சட்ட வல்லுநர், மருத்துவர், அறிவியலாளர், ஆன்மிகவாதிகள், பொறியாளர்கள் என பிறதுறை சார்ந்த அனைவருக்கும் இன்றைய சிக்கல்களைத் தீர்த்து வைக்கும் களஞ்சியமாகத் திகழ்கின்றது.

திருக்குறளில் இயற்கையோடு இயைந்த வாழ்வு எனும் தத்துவம் நிலைபெற்றுள்ளது. ஒரு முழுமையான நீரியல் சுழற்சி (Hydrological Cycle) எவ்வாறு இருக்கும், இருக்க வேண்டும் என 737-வது குறளிலும், மருத்துவத் துறையிலுள்ளோர் தம்மை நாடி வரும் நோயாளிகளின் முகத்தையும், மனநுட்பத்தையும் தெரிந்து மருத்துவம் அளிக்கும் போது நோயின் முழுக் காரணம் அறியமுடியும் என்பதை 708-வது குறளிலும் கூறியுள்ளார். அதே போன்று, அறிவியல் சார்ந்த சிந்தனைகள் மிகுந்து காணப்படுகிறது. இயந்தரவியல் கோட்பாட்டினை 475, 667 எனும் இரண்டு குறள்களின் மூலம் அறிவியல் உண்மையை விளக்குகின்றார்.

### திருக்குறளில் மேலாண்மைக் கூறுகள் (Management Elements in Thirukkural)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சங்க காலத்திலேயே தமிழன் மேலாண்மை சிந்தனைகளைக் கொண்டிருந்தான் என்பதை உறுதி செய்ய வள்ளுவம் துணை நிற்கிறது. பன்னாட்டு நிறுவனங்கள் இன்று கையாளக்கூடிய மேலாண்மைத் திறன்கள், தத்துவங்கள், கொள்கைகள் அனைத்தும் குறளில் விரவியிருப்பதைக் காணும் போது வள்ளுவத்தின் பெருமையும், சிறப்பும் வியக்க வைக்கிறது.

மேலாண்மைச் சிந்தனைகள் மற்றும் செயல்முறைகள் பற்றிய கருத்தினை உலகிற்கு முதன்முதலாக அறிமுகப்படுத்திய பெருமை மேலை நாட்டு அறிஞர்களையே சேரும். அவர்களுள் ஹென்றி போயஸ், கூன்ஸ் ஓடோன்ஸ், பீட்டர் டிரக்கர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். மேலாண்மைப் பற்றி ஆய்வு செய்த அறிஞர் கூன்ஸ் ஓடோன்ஸ் 'செய்து முடிக்க வேண்டிய எப்பணியும் அவற்றிற்குரிய பணியாளர்கள் மூலமாகச் செய்து முடிப்பதே மேலாண்மை'[1] எனக் கூறியிருப்பதாக P.C. திருப்பதி. P.N.ரெட்டி இருவரும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மேலாண்மையின் செயல்பாடுகளாக ஹென்றி போயஸ், தினகர் பாகர் இருவரும், திட்டமிடல் (Planning), அமைப்பு (Organizing), நடுவு நிலைமை (Equity). பணியாளர் நியமித்தல் (Staffing), வழிகாட்டுதல்' (Directory), கட்டுப்படுத்துதல் (Controlling) ஒருங்கிணைத்தல் (Co-Ordination), தலைமைப்பண்பு (Leadership), முடிவெடுத்தல் (Decision - Making), நேரமேலாண்மை(Time Management), குறிக்கோள் அமைத்தல் (Goal Setting), செயல் நுணுக்கம் (Intricacies of Different Tasks) எனக் கூறுகிறார்கள். மேற்கூறிய மேலாண்மைக் கூறுகள் எங்ஙனம் திருக்குறளில் காணப்படுகின்றன என்பதை தக்கச் சான்றுகளோடு நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### திட்டமிடல்(Planning)

திட்டமிடல் என்பது, 'ஒரு குறிக்கோள் நோக்கியதாகவும் அமைய வேண்டும் குறைந்த செலவில் அதிகப் பயனைத் தரக் கூடியதாகவும் அமைய வேண்டும்' என்பதாகும். மேலும், திட்டமிடுதல் என்பது ஒரு நிர்வாகத்தின் மூச்சுக் காற்று போன்றதாகும். வள்ளுவர்,

ஒருவர் தான் செய்யப் போகும் செயல்பற்றி நன்றாக ஆராய்ந்து செய்ய வேண்டும் என்பதை,

*'எண்ணித்துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவம் என்பது இழுக்கு'*[2]

எனும் இக்குறள் மூலமாக விளக்குகிறார். அவ்வாறாக ஆராய்ந்து பார்க்காமல் தொடங்கிவிட்டு பின்னர் ஏற்படும் இடர்களை எண்ணுவது, துன்பம் சேர்க்கும் என்றும், அவ்வாறு நடக்காமலிருக்க ஒருவன் ஒரு செயலைச் செய்யத் தொடங்கும் முன் நல்லறிவு பெற்ற பெரியோரின் துணையுடன் தானும் ஆராய்ந்து அதனால் வரும் நன்மை, தீமை, வரவு செலவு ஆகியவற்றை உணர்ந்து செய்ய வேண்டும். இல்லையெனில் நிலத்தை வகைப்படுத்தாமல் நீரைப் பாய்ச்சுவது போலப் பயனற்றதாகும். என்பதனை 461-வது குறளின் மூலம் உணர்த்துகிறார். ஒரு நாட்டினுடைய வருவாய்க் கேற்றபடி திட்டமிட்டு பொருளைச் சேர்த்து, பாதுகாத்து மக்களுக்குப் பயன்படும்படி பங்கிட்டுக் கொடுப்பவனே சிறந்த அரசனாவான் என்றும், (385) அவ்வாறெல்லாம் திட்டமிடுகின்ற போது கையிலுள்ள பொருளை இழந்துவிடக் கூடிய அறிவற்ற செயலைச் செய்ய ஊக்கம் தராமல் தடுப்பவர்களே செயல் திறன் மிக்கவர்கள் (463) என்றும் கூறுகிறார். மேலும் கொள்கையுடன் குறிக்கோளினை அடைவதற்கு நல்ல திட்டங்கள் தேவை என்பதனை,

*'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்*
*திண்ணியர் ஆகப் பெறின்'*[3]

என்று திட்டமிடுதலின் முக்கியத்துவத்தையும், வினைத்திட்பம் ஒருவனின் மனத்திட்பம் எனவும் கூறியுள்ளார். இதே போன்று தான் சிறந்த நிர்வாகத்தை கருத்தில் கொண்டு செயல்படும் நிறுவனங்கள் திட்டமிடுவதற்கென்றே ஒரு குழுவை (Planning Committee) நியமிப்பதையும், அதற்கென்று நிர்வாகத்திறமை கொண்ட ஒருவரை ஆலோசகராக (Advisor) நியமிப்பதையும் இங்கு குறிபபிட்டுக் காட்டுவது பொருந்தும்.

### அமைத்தல்

திட்டமிடுதலைப் போன்றே அமைத்தலும் முக்கியமானதாகும். அமைப்பு என்பது 'ஒன்றுக்கும் மேற்பட்டோரின் நடவடிக்கைகளைத் தன்னறிவோடு ஒருங்கிணைப்பதாகும்' என்று **செஸ்டர் பர்னார்டு** எனும் அறிஞர் கூறியுள்ளதாக 'திருக்குறளில் நிர்வாகம்' எனும் நூலில் வெங்கிடசுப்பிரமணியம் குறிப்பிட்டிருக்கிறார். இதையே வள்ளுவர் வினை செயல்வகை என்ற அதிகாரத்தில்,

*'செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை*
*உள்ளறிவான் உள்ளங் கொளல்'*

எனக்குறிப்பிடுகிறார். மேலும், அமைப்பு என்பது, 'அந்நிறுவனத்தின் நோக்கங்களை உரிய முறையில் நிறைவு செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் அதிகாரம், உறவு முறை, வேலை, பணியாள், பணியிடம் ஆகியவற்றைப் பொறுத்தே அயையும்'[5] என G.R.டெர்ரி(Terry) வலியுறுத்திக் கூறுகிறார்.

### நடுவுநிலைமை(Equity)

அரசு சார்ந்த அல்லது அரசு சாரா நிறுவனமாக இருந்தாலும், அங்குள்ள மேலாளர் நடுவுநிலைமையுடன் செயல்பட வேண்டும். ஏதேனும் ஒரு பக்கம் சாராமல் இரு தரப்பினரிடமும் நடுவுநிலைமையுடன் செயல்பட வேண்டும். நண்பர், பகைவர், நொதுமலர் என்று சொல்லக் கூடிய மூவரிடமும் பழக நேரிடும் போது நடுவுநிலைமை தவறாமல் நடந்து கொள்ள வேண்டும் என்பதை வள்ளுவர்,

*'சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்*
*கோடாமை சான்றோர்க் கனி'*

எனும் குறளுக்கேற்றார் போல், மேலாளர் நாணயமான தராசு முள் போன்று இருந்து உண்மையான நடுவுநிலைமையுடன் செயல்பட வேண்டும் என்கிறார்.

### பணியாளர்களை நியமித்தல்(Staffing)

ஒரு நிறுவனத்தின் வெற்றிக்கும், வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருப்பவர்கள் பணியாளர்கள். அத்தகைய பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதன் நோக்கம் ஒருவரே அனைத்துப் பணிகளையும் செய்ய இயலாது என்பதால் தான், மிக்க திறமுடைய, தகுதியான, செயல்திறன் மிகுந்த பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் சிறப்பாகப் பணிபுரிய நல்ல சூழ்நிலைகளை உருவாக்கித் தர வேண்டியது ஒரு நிர்வாகத்தின் கடமை. இதனைப் பற்றி வள்ளுவர் தெரிந்து தெளிதல், தெரிந்து

வினையாடல் ஆகிய அதிகாரங்களில் தேர்வு செய்யும் முறை, வேலை வாங்கும் முறை குறித்து தீர்மானமாகக் கூறியுள்ளார்.

எதனை? எப்படி? எதன் மூலம்? யார் மூலம்? ஒரு செயலைச் செம்மையாக, நிறைவு செய்யலாம் என ஆராய்ந்து செய்ய வேண்டும் என்பதனை,

*'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாயிந்து*
*அதனை அவன்கண் விடல்'*[7]

எனும் இக்குறள் மூலம் குறிப்பிடுகிறார். இதே போன்று, பணியாளர்களை நியமிக்கும் போது எவ்வாறு நியமிக்க வேண்டும் என்பதனை, பெஞ்சமின்(Benjamin) எனும் மேலாண்மையறிஞர், 'சரியான நபரைத் தேர்ந்தெடுத்தல், உறுதிப்படுத்துதல், மதிப்பீடு செய்தல், நெறிப்படுத்துதல், பணியமர்த்தல்'[8] போன்ற திறன்களை சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். அப்போது தான் அந்நிறுவனம் வெற்றியடையும் என்கிறார்.

### இயக்குதல்(Directing)

இயக்குவித்தல் என்பது துணைப் பணியாளர்களுக்கு வழிகாட்டுதலையும், இரு துறைகளுக்குரிய உறவினை வலுப்படுத்தவும், சிறந்த அனுபவம், முதிர்ச்சி பெற்ற மேலாண்மை வல்லுநர்களைக் (Management Experts) கொண்டு செயலாற்றி, நிறுவனத்தில் உண்டாகும் குறைபாடுகளைத் தீர்த்து, அதனைத் தடுக்கும் தீர்வையும், அறிவுரையையும் வழங்கக் கூடிய நல்ல தலைவரைக் கொண்டு செயலாற்ற வேண்டும். என்பதனை வள்ளுவர்,

*'உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்*
*பெற்றியார்ப் பேணிக் கொளல்'*[9]

என்று இக்குறள் மூலம் உணர்த்துகிறார்.

### கட்டுப்படுத்துதல்(Controlling)

ஒரு நிறுவனத்தினுடைய செயல்பாடுகள் திட்டமிட்டபடி செம்மையாக நடைபெறுகின்றதா? என்பதை கண்காணிக்க கட்டுப்படுத்தல் மிக அவசியமாகிறது. பணியாளர்கள் தவறு செய்வதைத் தடுத்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல், மனவேற்றுமையின்றி நீக்கி ஒற்றுமையுடன் செயல்படல், மற்றும் பல்வேறு வகையான இடையூறுகள் களைந்து அந்நிறுவனம் செம்மையாகச் செயல்பட கட்டுப்படுத்தல் அவசியமாகிறது. ஒருவனை நன்றாக ஆராயாமல் ஒரு செயலைச் செய்யத் தேர்ந்தெடுத்துவிட்டு அதன் பின்னர் ஐயம் கொள்வது தீராத துன்பத்தையும், பொருட்செலவையும் உண்டாக்கும். ஆகவே, கட்டுப்படுத்தலின் அவசியத்தை வள்ளுவர்,

*'தேரான் தெளிவம் தெளிந்தான்கண் ஐயுறவும்*
*தீரா இடும்பைத் தரும்'*[10]

எனும் குறளால் விளக்குகிறார்.

இதைத்தான் J.K.ரோஷன் (Rosen) எனும் மேலாண்மையறிஞர் கட்டுப்பாடு என்பது, 'திட்டத்தை செயல்படுத்தும் போது அதை சரியாக நடைமுறைப்படுத்துவதுடன், முழுத் திறமையையும் வெளிக் கொணர்வதாகும்'[14] எனக் குறிப்பிடுகிறார்.

### ஒருங்கிணைத்தல் (Co-Ordination)

ஐம்பொறிகள் எவ்வாறு மனிதனுக்கு மிக முக்கியமானதோ, அதே போன்று அரசன் நல்ல ஆட்சி நடத்தவும், நன்கு ஒருங்கிணைத்துச் செல்லவும், படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் எனும் ஆறு அங்கங்கள் மிக முக்கியமானதாகும். அரசன் ஆட்சி நடத்தும்போது அவனுக்கு அருகிலிருந்து ஆலோசனைகளைக் கூறும் திறமுடைய சான்றோர் குழுவினை முதலில் ஒருங்கிணைக்க வேண்டும். அதோடு மட்டுமில்லாமல், மன உறுதியோடு ஒரு வினையை மேற்கொண்டு தானே செய்வதும், தனக்கு இணையான ஒருவனைக் கொண்டு செய்வதும் முக்கியமானதாகும் என்பதனை,

*"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்*
*உடையான அரசரு ளேறு"*[12]

எனும் குறள் முலம் உணர்த்துகிறார்.

இதே போன்று, ''ஒரு நிறுவனம் தொடங்கும் முன் அதற்குத் தேவையான அனைத்துப் பொருள்களையும் தயார் செய்து, பின்னர் அந்நிறுவனம் செம்மையாக நடைபெற ஒற்றுமை, நல்ல நட்பு, பணியாளரின் குறிக்கோள், ஒருங்கிணைப்பாளரின் குறிக்கோள், நிர்வாகத்தை மேம்படுத்துவதிலேயே இருக்க வேண்டும்''[13] என்று விஜயராம்நாத் என்பவர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

### முடிவெடுத்தல்

முடிவெடுத்தல் என்பது தனிநபர் மட்டுமில்லாமல், நிர்வாகத்திற்கும் அதைச் சார்ந்துள்ளோருக்கும் மிக முக்கியமானதாகும். ஆகவே தான் மேலாண்மையின் கூறுகளில் முடிவெடுத்தல்

முக்கிய பங்காற்றுகிறது. எந்த முடிவினை எவ்வாறு, எப்படி, எப்பொழுது எடுக்க வேண்டும்? என்றும் அவ்வாறு எடுக்கப்படும் முடிவு சிறப்பானதாக இருந்தால் தான் முழுப்பயனைத் தரும் என்பதும் நிர்வாகவியலாளர் நன்கு அறிவர். முதலில் பிரச்சனை என்ன என்பதை நன்கு உணர்ந்து, ஆராய்ந்து எடுத்த முடிவில் இறுதிவரை உறுதியாய் இருக்கவேண்டும். வள்ளுவர் அமைச்சு எனும் அதிகாரத்தின் மூலமாக தெரிதல், தெளிதல், தேர்தல், கடைப்பிடித்தல் எனும் நான்கு உத்திகளும் முடிவெடுத்தலின் போது முக்கிய பங்கு வகுக்கின்றன என்பதை, 634 வது குறள் மூலம் விளக்குகிறார். மேலும், திட்டமிடுகின்ற போது முடிவினை உரிய நேரத்தில் உடனுக்குடன் எடுக்காமல் இருந்தால் செயல்பாடு குறைபாடுடையதாகவே அமையும் என்பதை,

*'முறைபடச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்*
*திறப்போடு இலாஅ தவர்'*[14]

எனும் இக்குறளால் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார். ஆராய்ந்து முடிவு எடுப்பதற்கு அறிவு ஒரு கருவியாகும் என்பதை 421 வது குறளின் மூலமாக உணர்த்துகிறார்.

### தலைமைப் பண்பு (Leadership)

சிறந்த மன்னனைப் பெற்ற நாடும், மக்களும் புகழ் பெற்று விளங்கும் அத்தகைய மன்னன் வீரனாகவும், இரக்கமுடனும், நன்கு ஆராய்ந்து திட்டமிடுபவனாகவும், நிதிநிலையினைக் காப்பவனாகவும், அறிவு நுட்பமுடையவனாகவும், வறுமை நீக்கி மக்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்பவனாகவும் இருப்பதே அவன் இயல்புகளாகும். மக்களும், தெய்வமும் காப்பாற்றத் தவறினாலும், மன்னன் கைவிட மாட்டான் என்பதை வள்ளுவர்,

*''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறையென்று வைக்கப் படும்'*[15]

என்று, அவன் மனிதனாக இருந்தாலும், அவனை தெய்வமாக மக்கள் போற்றிய பாங்கினைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தலைமைப்பண்பு பெற்றிருப்பவனிடம் அன்பு, அறிவு, திறமை என இம்மூன்றும் (513) இருக்கண் வேண்டும் என்கிறார். அதே போன்று, அச்சமில்லாமலும், பிறருக்கு கொடுக்கும் அறமும், அறிவுடைமை, நன்மை செய்வதில் ஊக்கம் என்னும் இவை நான்கும் நாட்டினை ஆளுகின்ற தலைமைப் பண்பாளனுக்கு இருக்க வேண்டியவை எனவும், ஆட்சி செய்வதற்கேற்ற விழப்புணர்வு, ஏற்றகல்வி, துணிந்து செயலாற்றுதல் ஆகிய இம்மூன்றும் குறைவு படாமல் அவனிடத்தில் இருக்க வேண்டும் என்பதனையும் 382, 383 எனும் குறள்களின் வாயிலாக உணர்த்துகிறார். மேலும், தலைமைப் பண்புள்ளவன் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் மகிழ்ச்சியோடு வாழவைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நன்மை செய்து வாழ்ந்தால் அவனை இவ்வுலகம் பாராட்டி மகிழும் என்பதை வள்ளுவர்,

*''நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*
*பண்புபா ராட்டும் உலகு''*[16]

என தலைமைப் பண்பாளனின் ஆளுமையைக் குறிப்பிடுகிறார். இதே கருத்தை வலியுறுத்த **பீட்டர்டிரக்கர் (Peter Drucker)** எனும் அறிஞர் ''தலைமைப் பண்பு என்பது ஒரு நபரின் தொலை நோக்குப் பார்வையை உயர்த்த உதவுவது, தன்னுடைய திறமையை உயர்நிலை வளர்க்க உதவுகிறது. ஒரு மனிதனுடைய ஆளுமைத்திறனை சாதாரண நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்குச் செல்ல தலைமைப் பண்பு அவசியமாகிறது''[17] எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக திருக்குறளில் அரசன் சார்ந்த கருத்துக்கள், சமகால தலைமைப் பண்பை மையப்படுத்துவதாகவும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

### நேரமேலாண்மை (Time Management)

அரசன் செய்யக் கூடிய எத்தகைய செயலாக இருந்தாலும், திட்டமிட்டு, ஆராய்ந்து செய்தாலும் தகுந்த இடத்தில், தகுந்த காலத்தில் செய்தால் மட்டுமே அச்செயலானது வெற்றி பெறும். இதை வள்ளுவர்,

*''ஞாலம் கருதினும் கைகூடும் காலம்*
*கருதி இடத்தால் செயின்''*[18]

என்கிறார். இதையே பீட்டர் டிரக்கர் ''காலம் என்பது கிடைத்தற்கரிய ஒன்று அதை நிர்விக்க இயலாவிட்டால் வேறு எதையும் நிர்வகிக்க இயலாது எனக் கூறுகிறார்''[19] அதைப் போல அரசன் தக்க காலம் அறிந்து செயல்புரிந்தால் எத்தகைய பகைவரையும் வெல்ல முடியும் எவ்வாறெனில், காக்கையானது தன்னை விட வலிமையுள்ள கோட்டானைப் பகல் நேரத்தில் வெல்வதைப் போல (481) எனக் கூறி காலத்தின் முக்கியத்துவத்தைக் கூறுகிறார்.

**குறிக்கோள் அமைத்தல் (Goal Setting)**

ஒருவன் ஒரு செயலைச் செய்கின்ற போது மனம் தளராமல், இடைவிடாது திறம்பட, செயல்பட மனதினை உற்சாகப்படுத்துவது தான் ஊக்கமுடமை. இப்பண்பானது ஒவ்வொருவரிடமும் இருந்தால் தான் குறிக்கோளினைச் சிறப்பாக அமைக்க முடியும். மன உறுதியுடன் ஊக்கத்தை, நிலையான செல்வமாக பெற்றவரிடம் மற்ற எல்லாச் செல்வங்களும் தானே வந்து சேரும் என்று,

*“ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா*
*ஊக்கம் உடையான் உழை*

எனும் இக்குறளின் மூலம் கவனப்படுத்துகிறார். போர்க்களத்தில் யானை தன் உடலில் அம்பு தைத்திருந்த போதும் மனம் தளராமல் போரிடும். அதுபோல ஊக்கமுடன் தனக்கு எத்துணை துன்பங்கள் நேர்ந்தாலும் செயல்படுவர். அவ்வாறு செயல்பட்டால்தான், தான் கருதிய குறிக்கோளினை அடைய முடியும் என்பதனை வள்ளுவர், 597 வது குறள் வாயிலாக விளக்குகின்றார்.

**செயல்நுணுக்கம்**
**(Intricacies of Different Tasks)**

ஒரு நிறுவனத்தில் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகளை நன்கு ஆராய்ந்து, அந்த செயலிலுள்ள நுணுக்கங்களைக் கண்டறிந்து, அதன்பின்னர் அச்செயலில் ஈடுபடவேண்டும். இதனை வள்ளுவர், **‘தெரிந்து செயல்வகை’** எனும் அதிகாரத்தின் மூலமாக ஒரு தலைவன் அல்லது அரசன் என்பவன் தான் மேற்கொள்ளக் கூடிய செயல் பற்றி நன்றாக ஆராய்ந்து, நல்ல நெறியில் நின்று செயலாற்றக் கூடிய செயல் நுணுக்கத்தினை, பெற்றவனாக இருக்க வேண்டும். இதனைத்தான்,

*“தெரிந்த இனத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வோர்க்கு*
*அரும்பொருள் யாதொன்றும் இல்”*[21]

எனும் குறள் மூலம் தெளிவுபடுத்தும் வள்ளுவர், சான்றான்மையுடன் இருக்கக் கூடியவரோடு ஆராய்ந்து பின், ஒரு செயலினைத் துவங்குபவருக்கு செய்ய முடியாத தொழில் என ஒன்றுமில்லை எனக்குறிப்பிடுகிறார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளுவர் சிறந்த மேலாண்மை வல்லுநராகத் திகழ்ந்துள்ளார். திருக்குறளில் காணப்படும் மேலாண்மைச் சிந்தனைகள் திருக்குறளை வெறும் நீதி நூலாக அணுகாமல் நம் கால தொழில் நுட்ப யுகத்தின் தேவையையும் நிறைவேற்றும் நூலாகப் பார்க்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. மேலும், இந்நூலில் மனிதனுக்குத் தேவையான அனைத்து வாழ்வாதாரங்களைப் பற்றியும், மொழி, இனம், நாடு, மதம் என அனைத்தையும் கடந்து தனித்து நிற்கும் பெருமையினையும் பறை சாற்றுகின்ற ஒரு அறிவுக் களஞ்சியம் எனில் மிகையாகாது. திருவள்ளுவர் மன்னனையும், அரசையும் கவனத்தில் கொண்டு எழுதிய குறள்கள்யாவும் இன்றைய ஜனநாயக நாட்டிற்குப் பொருந்துவதோடு, பன்னாட்டு நிறுவனங்களின் நிர்வாகத்திற்குப் பயன்படும் வகையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**சான்றெண் விளக்கம்**


1. P.C.Tripathi, P.N.Reddy - Principles of Management - P.10

2. குறள் 467

3. குறள் 666

4. குறள் 677

5. G.R. டெரி (Terry)- மேலாண்மைத் தத்துவங்கள் ப.145

6. கலைஞர் உரை, குறள் 118

7. குறள் 517

8. பெஞ்சமின்(Benjamin) - Principles of Management - P.180

9. குறள் 442

10. குறள் 510

11. J.K. ரோஷன் - Principles of Management - P.270

13. விஜயராம்நாத் - மேலாண்மைத் தத்துவங்கள் - ப.7

14. குறள் 640

15. பரிமேலழகர் உரை – குறள் 388

16. புலவர் குழந்தை உரை – குறள் 994

17. பீட்டர் டிரக்கர் (Peter Drucker) - Principles of Management - 09

18. குறள் 484

19. பீட்டர் டிரக்கர் (Peter Drucker) - Time Management - p.222

20. குறள் 594

21. குறள் 462

**துணைநூற் பட்டியல்**


1. முனைவர் கோ.சுரேஷ், ‘வள்ளுவரும் வாழ்வியலும்’ சென்னை – 98. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், ஆகஸ்ட் 2008.

2. புலவர் த.சுந்தரராசன், **‘திருக்குறள் தேசிய நூல்’** சிதம்பரம் மெய்யப்பன் பதிப்பகம், ஏப்ரல் 2007.

3. டாக்டர் கி.வெங்கடசுப்ரமணியன், திருக்குறளில் நிர்வாகம் சென்னை – 24. இலக்கியபீடம் வெளியீடு, 1998.

4. புலவர் குழந்தை, ‘திருக்குறள்’ சென்னை – 14 சாரதா பதிப்பகம், ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு, ஆகஸ்ட் 2009.

6. கலைஞர் உரை, ‘திருக்குறள்’ சென்னை – 17, திருமகள் நிலையம், 35, வெங்கட் நாரயணா சாலை, பிப்ரவரி, 2009.

7. Benjamin, ‘Principles of Management’, Mumbai Himalaya Publishing House Pvt.Ltd., 2003.

8. Ramnath B. Vijaya, ‘Principles of Management’, Chennai - 17, Eswar Press, Archana Arcade, 2004.

9. Ray Reuben ‘Time Management’, Mumbai Himalaya Publishing House Pvt.Ltd., 2002.

10. Reddy. P.N.,Tripathi.P.R., ‘Principles of Management’, New Delhi Tata McGraw - Hill Education Pvt Ltd., 2008.

# நாமக்கல் வட்டார நாட்டுப்புற மக்கள் மற்றும் மருதமலை வாழ் இருளர்களின் மருத்துவ முறைகள்

***முனைவர் க. இரமேஷ்***
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,*
*சேர்க்காடு, வேலூர் - 632 115.*
*மின்னஞ்சல்:*
*grameshtu@gmail.com*

மருந்து என்ற சொல்லுக்கு மனிதனிடத்திலும் பிற உயிரினங்களிடத்தும் உள்ள நோய்களை கண்டறியவும், நோய்கள் வராமல் தடுக்கவும் மற்றும் நோய்களைக் குணப்படுத்தவும் பயன்படுத்தப்படும் பொருள் ஆகும். இம்மருத்துவம் நாட்டுப்புற மருத்துவம், ஹோமியோபதி மருத்துவம், அலோபதி மருத்துவம், யூனானி மருத்துவம் எனப் பல பிரிவுகளைக் கொண்டுள்ளது அவ்வகையில் நாமக்கல்லிலும் மாவட்டத்தில் நாட்டுப்புற மக்களிடையே வழக்கத்தில் உள்ள நாட்டுப்புற மருத்துவத்தையும் கோவை மாவட்டத்தில் உள்ள மருதமலை வாழ் இருளர்களிடம் வழக்கத்தில் உள்ள நாட்டுப்புற மருத்துவத்தையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

ஒரு நாட்டின் தட்ப வெட்ப நிலைக்கேற்ப மக்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு அந்தந்த நாட்டில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு, அங்கு வாழும் பாமர மக்கள் தமது பட்டறவால் செய்து வரும் மருத்துவ முறையை நாட்டுப்புற மருத்துவம் எனலாம். இம் மக்கள் பயன்படுத்தும் மருத்துவ முறைகளை நான்கு வகைகளாக பிரிக்கலாம்.

பொது மருத்துவம்
குழந்தைகள் மருத்துவம்
மகளீர் மருத்துவம்
ஆடவர் மருத்துவம்

**பொது மருத்துவம்**

**கம்பிலி பிசின் மருத்துவம்**

கம்பிலி பிசின் என்பது கம்பிலி மரத்தின் இரண்டு இலைகளுக்கு நடுவில் உள்ள பிசினாகும். இம்மரம் மருதமலையில் காணப்படுகிறது. இக்கம்பிலி பிசினை அங்கு வாழும் இருளர்கள் மருந்தாகப் பயன்படுத்துகிறார்கள். கம்பிலி பிசினை அம்மியில் வைத்து அரைத்து, கம்பிலி இவையில் மடித்துக் கொள்ள வேண்டும். தேங்காய் எண்ணெய்யை காய்த்து, அதில் கடுகளவு பிசின், இரண்டு கருவேப்பிலை, இரண்டு பல் பூண்டை போட்டு இளஞ் சூட்டில் இருக்குமாறு வைத்துக் கொள்ளவேண்டும்.

**கம்பிலி பிசின் மருந்தால் குணமாகும் நோய்கள்**

கம்பிலி பிசின் மருந்து இளஞ் சூடாக இருக்கும் பொழுது தலை மற்றும் உடம்பு முழுவதும் பூசி கொள்ள வேண்டும். அப்படி பூசிக்கொண்டால் கை, கால்

குடைச்சல், இரத்தக் கட்டு, மூச்சடைப்பு, சளி ஆகியவை குணமாகும். தலைவலிக்கு மட்டும் நெற்றியில் பூசினால் போதும்.

### தீராத வயிற்று வலி

சிறியா நங்கை, அடிப்பாகத்தை அம்மியில் அரைத்து பவுடர் செய்து பதப்படுத்தி ஈரமில்லாத பாட்டிலில் பாதுகாத்து வைக்க வேண்டும். ஒரு டீஸ்பூன் பதப்படுத்தப்பட்ட சிறியா நங்கை பவுடர், பால் ஆகியவற்றை வெந்நீரில் கலந்து சாப்பிட்டால் தீராத வயிற்று வலி நீங்கும் இந்த மருந்தை நாற்பது நாட்கள் சாப்பிட வேண்டும். சாதரண வயிற்று வலிக்கு வெற்றிலையில் உப்பு வைத்து மென்று தின்றால் வயிற்று வலி நீங்கும்.

### அஜீரணம்

அருகம்புல்லை சுத்தப்படுத்தி அரைத்தோ அல்லது மென்றோ உண்டால் அஜீரணம் குணமாகும்.

### பாம்பு கடி

பாம்பு தீண்டியவுடன் வாழை மரப்பட்டையை முறுக்கி அதன் சாற்றை அருந்த வேண்டும். பாம்பு கடித்த இடத்தில் சிறியா நங்கை சாற்றை விட வேண்டும். விஷம் உடலில் பரவாமல் இருக்க பாம்பு கடித்த இடத்திற்கு மேலே மூன்று இடங்களில் சிறு இடைவெளி விட்டு கயிற்றை இறுக கட்டவேண்டும்.

### காய்ச்சல்

வல்லாரை கீரை, மிளகு தக்காளி கீரை ஆகிய இரண்டையும் உணவில் சேர்த்து சாப்பிட்டால் காய்ச்சல் குணமாகும்.

### வெட்டுக்காயம்

முள்ளுஞ் செடி அல்லது தச்சாங் கன்னி கீரையை அரைத்து கட்டினால் மூன்று அல்லது நான்கு நாட்களில் காயம் குணமாகும்.

### கண்கட்டி

குளிர்ந்த நீரில் மஞ்சளைக் கரைத்து கண்களில் உண்டான கட்டி மீது பூசினால் கண் கட்டி குணமாகும்.

### காது வலி

கல் உப்பு, பூண்டு ஆகியவற்றை தேங்காய் எண்ணெயில் காய்ச்சி இளஞ்சூட்டில் காதில் ஊற்றினால் வலி நீங்கும்.

### பல் வலி

புகையிலை, மிளகு ஆகியவற்றை ஒரு குச்சியில் குத்தி நெருப்பில் சூடு செய்து சொத்தைப் பல்லில் வைத்தால் பல் வலி குறையும். நாயுருவிச் செடியுன் வேரினில் பல் துலக்கி வந்தால் பல் கரை நீங்கும்.

## குழந்தைகள் மருத்துவம்

### வயிற்றோட்டம்

குழந்தைகளுக்கு வயிற்றோட்டம் போகும் பொழுது நாய் துளசியை அரைத்து, அதன் சாறுடன், எழுமிச்சை சாற்றையும் சேர்த்து கொடுத்தால் வயிற்றோட்டம் நிற்கும்.

### வாந்தி

குழந்தைகள் வாந்தி எடுத்தால், மஞ்சள், வசம்பு ஆகியவற்றை அரைத்து அதன் சாற்றை குழந்தையின் நாக்கில் இரண்டு அல்லது மூன்று சொட்டு தேய்த்தால் வாந்தி நிற்கும்.

### சளி

கருந்துளசி சாற்றை அரை சங்கடை அளவு கொடுத்து வந்தால் குழந்தைகளுக்கு சளி நீங்கும். வெங்காயம் மஞ்சள் ஆகியவற்றை அரைத்து விளக்கெண்ணெயில் வதக்கி குழந்தையின் உச்சந் தலையில் தடவிவர சளி நீங்கும்.

## மகளீர் மருத்துவம்

### பூப்பெய்தாமை

இளம் பெண்கள் பூப்பெய்த வேண்டிய காலகட்டடத்தில் பூப்பெய்துவது தள்ளி போனால், பனைவெள்ளம், கொள்ளுப்பருப்பு ஆகியவற்றை உணவோடு சேர்த்து உண்டு வந்தால் விரைவில் பூப்பெய்துவார்கள்.

### பிரசவ வலி

பிரசவ காலத்தில் சூட்டின் காரணமாக வலி ஏற்பட்டால் பனை வெள்ளத்துடன் சீரகத்தைச் சேர்த்து தண்ணீரில் கொதிக்க வைத்து அதைப் பருகினால் வலி நீங்கும்.

### தாய்பால் பெருகுதல்

தண்ணீருட்டாங் கிழங்கின் தோலை நீக்கி சாப்பிட்டு வந்தால் தாய்பால் பெருகும். குத்துப் பாலை, கொடிபாலை, பச்சை மஞ்சள் ஆகியவற்றை சேர்த்து நன்றாக அரைத்து உணவுடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் தாய்பால் பெருகும்.

கூடுகை பச்சையாக அரைத்து, அதில் பனங் கருப்பட்டியை சேர்த்து சாப்பிட்டு வந்தால் கருக்கலையும், அன்னாசி பழத்தை சாப்பிட்டாலும் கருக்கலையும்.

**மலடு நீங்க**

பெண் மலடு நீங்க பிச்சங்க மரப்பட்டையை நன்றாக அரைத்து காலை, மாலை இரு வேளைகளும் ஒரு முட்டை அளவு உண்டு வந்தால் மலட்டுத் தன்மை நீங்கும்.

**கர்பம் தரிக்க**

பிரண்டை சாற்றில் சக்கரை கலந்து காலை, மாலை பருகி வந்தால் கர்பம் தரிக்கின்ற வாய்ப்பு உள்ளது.

**ஆடவர் மருத்துவம்**

**சிறுநீரில் கல் அடைப்பு**

வாழ மரத்தின் குருத்தில் சுரக்கும் நீரை பருகிட கல் அடைப்பு நீங்கும். வாழை.

**சிறுநீர் எரிச்சல்**

எருக்கன் பாலை, கால் பெருவிரலில் வைக்க எரிச்சல் நீங்கும்.

கரிசலாங்கன்னி கீரையை அரைத்து அதன் சாற்றை பருக எரிச்சல் நீங்கும்.

**நிறைவாக**

மருத மலை வாழ் இருளர்கள் கம்பிலி பிசின் என்ற ஒரு மருந்தையே பல நோய்களுக்கு பயன்படுத்துகின்றனர். மருத்துவத் துறை எவ்வளவு முன்னேறியிருந்தபோதும் காய்க்கசல், தலைவலி என்றால் மருத்துவரை அணுகுவதோ, மருந்து மாத்திரைகளை பயன்படுத்துவதில்லை. மரபு வழியாக தமது முன்னோர்கள் பயன்படுத்திய மருத்துவ முறையைதான் பயன்படுத்துகின்றனர். நாமக்கல்லில் வசிக்கும் நாட்டுப்புற மக்கள் பெரும்பாலும் மருத்துவரை அணுகிறார்கள். ஒரு சிலர் மட்டுமே நாட்டுப்புற மருத்துவத்தை பயன்படுத்துகின்றனர். நகர மயமாக்கலில் பெரும்பாலும் குடியிருப்புகளுக்கு அருகிலேயே மருத்துவமனைகள் இருப்பதாலும், சில மூலிகைகள் கிடைக்காததாலும் முறையாக மருத்துவ முறைகளை அறியாததாலும் நாட்டுப்புற மருத்துவத்தை மக்கள் பயன்படுத்துவது அருகிவருகிறது.

# பிரிவும், பரிவும்

*பி. வசுந்தராதேவி*
*தென்பாதி*
*சீர்காழி.*

**முன்னுரை:**

பிரிவு என்பத ஒரு நோக்கத்தின் காரணமாக ஏற்படுத்தப்பட்டு ஒரு அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு அளவாக பகுக்கப்பட்டு அமைவது ஆகும். ஒருவர் ஒருவரையோ, தமரையோ, சுற்றத்தையோ பிரிந்திருப்பதை குறிக்கும் சொல் பிரிவு ஆகும். இப்பிரிவுக்கானக் காரணங்களையும், பிரிவிற்குரியவர்களையும், பரிவிறகு ஆகும் காலத்தினையும, பிரிவிடைப் பரிவுடையோரையும் பரிவிற்குரியோரையும் தொல்காப்பியர் முறைப்படுத்தி விளக்கியுள்ளார். அவற்றை இவண் காண்போம்.

**பிரிவின் ஏதுக்கள்:**

பிரிவிற்குச் சிறப்புக் காரணங்களாக ஓதுதல், பகை, தூது முதலியவற்றைக் குறிப்பிடுகின்றார். அதுவன்றி தேவரது பூசை முதலாயினவும், அறம் நிலை நிறுத்துதல் காரணமாகவும், பொருளீட்டுதல் காரணமாகவும் பிரிவு ஏற்படும் என வரையறை செய்துள்ளார். பரத்தைமை ஒழுக்கமும், பிரிவிற்கு ஏதுவான ஒன்றாகும்.

**பிரிவின் வகைகள்:**

தலைமகளைப் பிரிதலும், தலைமகளை உடன் கொண்டு தமரைப் பிரிதலும் எனப் பிரிவு இரு வகைப்படும். இவ்விருவகைப் பிரிவினையும் காலிற்பிரிதல், காலத்திற்பிரிதல் என வரையறுப்பார் நச்சர். இவற்றுள் தமரைப் பிரிதல் உடன்போக்கினைக் குறிப்பதாகும். பகைப்பிரிவு தனிவினைப்பிரிவு, வேந்தர்க்குற்றுழிப்பிரிவு என இருவகைப்படும். அதுவன்றி தலைவன் தன் மனையின் அயலிடத்துப் பிரியினும் அதுவும் பிரிவின்பாற்படும். அதனைப் பரத்தையிற்பிரிவு என்பார் இளம்பூரணர்.

**பிரிவிற்குரியோர்:**

ஓதுதல் காரணமாகவும் தூது செல்லுதல் காரணமாகவும் ஏற்படும் பிரிவுகள் சமுதாயத்தில் உயர்ந்தோராய்க் கருத்தப்படும் மக்கட்கு உரியதாகக் கூறுவர். ஓதுதல் சிறப்பாலும், தூதுத்திறம் கொண்ட சிறப்பாலும் உயர்ந்து விளங்குபவரே அதற்கு உரியோராய் அமைவர். இதனையே தொல்காப்பியர்.

> *"அவற்றுள்*
> *ஓதுதலும் தூதும் உயர்ந்தோர் மேன"*

என்றார். இதனை இளம்பூரணர் நால்வருணத்தாருள் உயர்ந்தோராகிய அரசர்க்கும், அந்தணர்க்கும் உரியதாகக் குறிப்பிடுகின்றார்.

“உயர்ந்தோர்க்குரிய ஒத்தினான” என்றதனால் ஓதுதல் வணிகர்க்கும் உரியதாமென்பர்.

பகைப்பிரிவு அரசர்களுக்குரியதாகும், இவர்தானே படைநடத்திச் செல்லுதலும் உண்டு தன்னைச் சார்ந்தவரை அனுப்புதலும் உண்டு தேவரது பூசை முதலான காரணங்களால் நிகழும் பிரிவு நான்கு வருணத்தார்க்கும் உரியது. மக்களை அறவழியில் நிலைநிறுத்தவும், பொருள்தேடவும், தூது காரணமாகவும் அமையும் பிரிவு வணிகருக்கும், வேளாளருக்கும் உரியதாகும். பொருள்வேண்டிப்பிரிதல் அந்தணர்க்கு ஒழுக்கத்தின் காரணமாக அமையும். காலிற்பிரிதல் அன்றி கலத்திற்பிரிதல் தலைமகற்கு அமைவதில்லை.

**பிரிவிற்குரிய காலங்கள்:**

பெரும் பொழுதில் இளவேனில், முதுவேனில், பின்பனி ஆகிய முப்பருவமும், சிறுபொழுதில் நண்பகலும், பிரிவொழுக்கத்திற்கானன் காலங்கள் என தொல்காப்பியனார் குறிப்பிடுகின்றார்.

**பரிவு:**

பரிவு என்பது அன்பு, இரக்கம், துன்பம், குற்றம், இன்பம், சுகம், பக்குவம் எனும் பொருள்களைத் தந்து நிற்கும் அற்புதப் பதம் ஆகும். பிரிவு எனும் குற்றம் நிகழ்ந்து துன்பம் அடைந்த உள்ளத்தினை பக்குவப்பட்டவர்கள் இரக்க குணத்துடன் அன்பு மொழிகள் பேசி இன்பம் கொள்ளத் தோற்றுவிப்பதே பரிவுகாட்டும் சுகமான நிலை ஆகும். பரிவுடையோர் மற்றும் பரிவுடையோர் பற்றியும், பரிந்து நிற்றல் பற்றியும் தொல்காப்பியர் வழிக் காண்போம்.

**பரிவிற்கு உரியவர்கள்:**

ஓதுதல், பகை, தூது, தேவர் பூசை, பொருளீட்டல் அறவழிப்படுத்துதல் போன்ற காரணங்களால் பிரிந்து வாடும் நால்வகை வருணத்தாரும். களவொழுக்கத்தின்கண் உழுகி மீண்ட தலைவனும், தலைவியும், கற்பை மேற்கொண்டு உடன் போகிய வழி தலைவன், தலைவி ஆகியோருடன் தமரும், சுற்றத்தாரும் துன்பமடைவர். பிரிவில் வாடும் இவ்வகை நெஞ்சுடையவர்களே பரிவிற்கு உரியவர்கள் ஆகின்றனர்.

**பரிவுடையவர்கள்:**

நற்றாய், செவிலித்தாய், தோழி, கண்டோர், தலைமகன், தலைமகள், பாங்கர், பார்ப்பர், பாணர் கூத்தர், உழையோர் ஆகியோர் பிரிவுடைப்பரிவுடன் பேசி நிற்பவர்கள் ஆவர். இவர்கள் பரிவாற்றாதோரை ஆற்றுவிப்போரையும், ஊடிப்பிரிந்தோரிடை சந்து செய்விப்போராயும் அமைவர்.

**முடிவுரை:**

பிரிவு ஏற்படும் காரணங்கள், பிரிவின் வகைகள், பிரிவுக்கான இடங்கள், காலங்கள் பிரிவிற்குரியவர்கள், பிரிவிடை வருந்துபவர்கள், வருந்திக்கூறும் சொற்கள், பரிந்து வருத்தம் களைபவர்கள், பரிந்து கூறும் சொற்கள் என வகை தொகை செய்வித்த காப்பியனார் தம் சொற்பொருளமைதி இன்றும் என்றும் ஏற்புடமையாக அமைந்திருப்பது நினைந்து போற்றி மகிழ்தற்குரியதாகும்.

ஃஃ

# கவிஞர் வைரமுத்து கவிதைகளில் பொதுவுடைமை

*சா. தென்றல்*
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*(பகுதி நேரம்)*
*தமிழியல்துறை*
*மனோன்மணியம் சுந்தரனார்*
*பல்கலைக்கழகம்*
*அபிசேகப்பட்டி, திருநெல்வேலி.*

**கவிஞர் பார்வையில் சமூகம்**

“ஒரு நூலில் இடம்பெறும் எந்தக் கதைமாந்தரும் தனித்து இருப்பதில்லை. அவன் தான் வாழும் சமூகத்தில் ஒரு தனி கூறாகவே அமைகிறான். சமூகத்தின் வளர்ச்சியிலும், மாற்றத்திலும் அவன் தன் பங்கினைச் செய்கின்றான். சமூகம் அவனைப் பாதித்து அவன் வளர்ச்சியில் தன் பங்கினைச் செய்கிறது. எனவே, ஒரு நூலில் இடம்பெறும் சமுதாயப் படைப்புப் பற்றி ஆராய்வது நூலின் இன்றியமையாத ஆய்வாக மதிக்கப்படுகிறது.” என விளக்கம் தருகிறார் இரா. தண்டாயுதம்.

இக்கூற்றிற்கேற்ப “ரத்ததானம்” என்னும் கவிதைத் தொகுப்பின் சமுதாய உணர்வுகளையும் கவிஞரின் சமுதாய அக்கறை மதிப்பீடு செய்யப்படுகின்றன. இன்றைய சமூகத்தை நெறியப்படுத்த உதவும் நோக்கில் கவிஞர்கள் போராடும் சமயத்தில் இக்கவிஞரின் சிந்தனை சமுதாயத்திற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளன.

**சமூகநிலை**

மனிதன் கூடி வாழும் இயல்பைப் பெய்யவன். மற்ற உயிர்களிடமிருந்து வேறுபட்ட மனிதன் ஒரு சமூக விலங்காகவே வாழ்கின்றான். உணவுக்காகவும், உடமைக்காகவும் மனிதனை மனிதன் வேட்டையாடும் அவலநிலை. பிற தேவைகளுக்காக இடம் பெயரவேண்டிய சூழலில் இருக்கின்றான். இன்றைய சமூகம் நெறி இழந்து தவிக்கின்றது. மனிதர்கள் பெயரளவில் இருந்து மனிதவாழ்வில் கூடிவாழும் தன்மை இழப்பு, கருத்தொற்றுமை இகழ்ந்து இருக்கின்றனர்.

*“உணவின்றி உடையுமின்றி பலர் தவிக்கவோ? – அந்த*
*ஓட்டைக் குடிசை சாலையோரம் அவர்கள் வாழவோ?*
*பணம்படைத்த சீமான்கள் பவனி வருவதோ? – அவர்கள்*
*பால் பழங்கள் பாதம்கீர் உண்டு களிப்பதோ?”* *(வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள், ப.58)*

உணவு இல்லாதவன் முன் பால், பழம் சாப்பிடுவதும் இருக்க இடமில்லாமல் தவிப்பவர்முன் மாளிகைகள், வறுமையால் வாடுபவர்முன் உல்லாச உலாவருதல் என்பது தான் இன்றைய சமூகநிலை என்று உணர்த்துகிறார் கவிஞர் வைரமுத்து.

**வேலையில்லாத் திண்டாட்டம்**

இந்தியாவில் எழுத்தறிவு எழுபத்தியெட்டு சதவிகிதம் உள்ளது. ஆனால், எழுத்தறிவு பெற்ற அனைவருக்குமே வேலைவாய்ப்பு உண்டா என்றால் இல்லை என்று தான் சொல்லவேண்டும். வறுமைக்கு முக்கியக் காரணம் வேலையில்லாத் திண்டாட்டம் அமைகின்றது. தனிநபர் வருமானம் இல்லாமல் இருக்கும்போது அங்கே பசியும் பட்டினியும் தாண்டவமாடுவது இயல்பு.

*“சிரசாலே நடந்தும் வேலை*
*சீக்கிரம் கிடைக்கா தென்றே*
*அறிவுக்குத் தெரியும், ஆனால்*
*அட்டையைப் புதுப்பிக்கின்றேன்”*
*(வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள், ப.6)*

என்ற கவிதை வரிகள் வேலை கிடைக்காததால் இன்றைய இளைஞன் புலம்புவதைக் குறிப்பிடுகின்றார்.

வேலை இன்மைக்கு இன்றைய இளைஞர்களும் ஒரு காரணமாகவே அமைந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது எனலாம். “இத்தகைய மாந்தர்களின் நிலைப்பாட்டினை,

*“எழுந்துநான் அமர்ந்தால் மட்டும்*
*என்னதான் நடக்கும்? பேப்பர்*
*விழுந்துநான் படித்துமென்ன*
*வேலையா கிடைக்கும்?*
*என்னடா வாழ்க்கை என்றே*
*இருதயம் நொருங்கிப்போனேன்*
*என்னையே மௌனச்சேற்றில்*
*இறங்கினேன்.......”*
*(வைரமுத்து, ரத்த தானம், ப.34)*

என்னும் கவிதைவரிகள் தன்னம்பிக்கையில்லாத வேலையில்லாத பட்டதாரிகளின் மனநிலையைத் தெளிவுபடுத்துகின்றது.

**வறுமை**

ஒரு மனிதனுக்கு அடிப்படைத் தேவைகளாவன உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்னும் மூன்றும் ஆகும். இத்தேவைகளை நிறைவேற்ற முடியாதவர்கள் வறுமைக்கோட்டுக் கீழ் உள்ளவர்கள். உலகில் எவ்வளவு கொடுமைகள் இருந்தாலும் “கொடிது கொடிது வறுமை கொடிது என்னும் முதுமொழியை எண்ணிப் பார்க்க வேண்டும்.

சமுதாயத்தில் காணப்படும் மிகப்பெரிய அவலம் வறுமையாகும். இயற்கைக்கு மாறான இழிவான செயலுக்கு வறுமையே காரணமாக அமைந்திருக்கின்றது எனலாம்.

*“வறுமையின் நெருஞ்சிக்காட்டில்*
*வாழும் என் மக்கள்! நாளும்*
*வெறுமையை அளந்து பார்க்கும்*
*வேதனைச் சிக்கல் பாவம்*
*குருவிபோல் வாழும் அந்தக்*
*கூட்டத்தில் தானே வாழ்வின்*
*அருமையை உணர்ந்தேன்; எந்தன்*
*ஆன்மாவை வளர்த்துக் கொண்டேன்”*
*(வைரமுத்து, ரத்த தானம், ப.40)*

என்னும் தொட்டில் கனவுகள் என்னும் கவிதைகயில் வறுமையின் நிலையை எடுத்துக்காட்டுகின்றார் கவிஞர் வைரமுத்து அவர்கள்.

மேலும், வறுமையினை ஒழிக்க அனைவரும் முனைய வேண்டும் என்பதையும் “வேறென்ன வேண்டும்” என்னும் கவிதையினில் எடுத்துரைக்கின்றார்.

*“பொய்சொன்னால் சுடுகின்ற நாவும் வேண்டும்*
*போராடி வெல்கின்ற புலமை வேண்டும்*
*கையிரண்டும் உழைக்கத்தான் கவனம் வேண்டும்*
*காலத்தின் மாற்றத்தை மதிக்க வேண்டும்*
*மெய்யிந்த வாழ்வென்று நம்பவேண்டும்*
*மேகம்போல் பொழிந்துவிட்டுக் கலைய வேண்டும்”*
*(வைரமுத்து, ரத்த தானம், ப.47)*
என்று பாடுகின்றார்.

மக்கள் வறுமையால் அல்லல்படுகின்றனர். பொருளாதாரக் குறைவினால் வாழ்வில் மேடுபள்ளம் தோன்றுகின்றது. இது மனிதனைப் பிரிக்கின்றது. பாட்டாளி மக்கள் ஒன்றுதிரண்டு உழைத்தால் வறுமை நாட்டைவிட்டு ஓடிவிடும். அவர்கள் வாழ்க்கைத்தரம் உயரும். இதனால் சமத்துவம் ஏற்படும் என்று பாடுகின்றார்.

**உழைப்பாளர்**

உழைப்பாளர்கள் சமுதாயத்தின் உயிர்நாடி போன்றவர்கள். இவர்களின் நேர்மையான உழைப்பும், ஒற்றுமையும் சமுதாய முன்னேற்றத்திற்குப் படிக்கற்களாகும். இதனால் இத்தொழிலாளவர்க்கத்தின் வாழ்க்கைநிலை நன்முறையில் அமையவேண்டியது இன்றியமையாததாகின்றது.

நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுபவர்கள் உழைப்பாளிகளே. எனவே, அவர்களை நாட்டின் முதுகெலும்பு என்று சித்தரிக்கின்றோம். ஆனால், அவர்களின் வாழ்க்கை அப்படி ஒன்றும் இல்லை. மிகவும் வறுமையாகவே உள்ளது.

கவிஞர் வைரமுத்து தனது ரத்ததானக்கவிதைத் தொகுப்பினில் மேதினம் பற்றிய கவிதையொன்றினைத் தொழிலாளத் தோழர்களுக்காகப் படைத்துள்ளார். மே தினம் என்பது தொழிலாளர்களுக்கான தினம். உலகத்தொழிலாளர்கள் ஒன்றுபடவேண்டும் என்றும், சர்வதேச அரங்கில் ஏகாதிபத்திய சக்திகளைக் கண்டனம் செய்தும், விடுதலை இயக்கங்களை ஆதரித்தும் முழக்கமிடுவதே மேதினத்தினத்தின் குறிக்கோளாகவும் அமைந்துள்ளது.

தொழிலாளர்களின் அவல நிலைக்கு அவர்களின் முதலாளிகளும் ஒரு காரணமாக அமைந்திருக்கின்றனர். முதலாளி தொழிலாளியை வளமான வாழ்க்கை வாழ வழி செய்யாமல் தான் மட்டும் பயன்பெற்று வருவதை அண்மைக் காலகட்ட இலக்கியப் படைப்பாளர்களும் சுட்டிச் சென்றுள்ளனர். கவிஞர் வைரமுத்து அவர்களும் அம்முதலாளிகளை நோக்கி, தொழிலாளர்களை வாழவழிசெய்யவில்லை என்றாலும் சாகடிக்காமலாவது விட்டுவிடுங்கள் என்று வருத்தம் மேலிட முதலாளிமார்களைப் பார்த்துக் கேட்கின்றார்.

*"உலகமென்று தொடங்குகின்ற செய்யுள் போதும்*
*உழைப்பென்று தொடங்குகின்ற கவிதை வேண்டும்*
*நிலவுகொண்ட கறைகூட எங்கள் கைகள்*
*நீளுவதால் அழிந்துவிடும் என்னும் கொள்கைத்*
*திலகங்கள் பொற்காலம் படைப்பர்; ஆனால்*
*திராவகத்தீ நெஞ்சுடையார் உழைப்பவர்க்கு*
*மலர்மாலை சூட்டவில்லை எனினும்கூட*
*மலர்வளையம் வைக்காமல் இருந்தால் போதும்"*
*(வைரமுத்து, ரத்த தானம், ப.51)*

இயற்கையாய் இயங்கும் உலகம்கூட உழைப்பவன்பின்னே இருக்கும் நாட்டினை வளரச்செய்யவும் தாழ்ந்துபோகச் செய்யும் செழிப்பாக நாடு விளங்கவும் உழைப்பாளனால் உருவாக்க முடியும் என்பதை இக்கவிதை சுட்டுகின்றது.

**உழைப்பாளர் தினம்**

சமுதாயத்தை மேம்படுத்த முனைந்து முழுநேரம் அதற்காகவே உழைக்கின்ற உன்னதத் தொழிலாளர்களை முதலாளிவர்க்கம் வெறித்தனமாக அடிமைப்படுத்துவதோடு நீண்டநேர உழைப்பையும் வருமானத்தையும் சுரண்டி வாழுகின்றது. இதற்குக் காரணம் சமுதாயத்தின் அடித்தளமாக விளங்கிக் கொண்டிருக்கும் உழைப்பாளர்களை நலிவடையச் செய்யவும் முதலாளிகள், உழைப்பைச் சுரண்டி கொழுக்கவும் செய்தான்.

உழைப்பாளர்களை அடிமைப்படுத்தி இருந்த காலத்தில் அமெரிக்காவில் 19ஆம் நூற்றாண்டில் தொழிலாளர்களுக்கான சலுகைகள், தகுதிக்கேற்ற வேலை, உழைப்புக்கு ஏற்ற ஊதியம், எட்டுமணிநேரம் வேலை போன்றவற்றை மே முதல் தேதியில் சட்டமாக்கி அமுல்படுத்தியது. அத்தினமே மேதினத்தை உழைப்பாளர் அல்லது தொழிலாளர் தினமாகக் கொண்டாடி வருகிறோம்.

இந்திய விடுதலைப் போராட்டக் காலங்களில் மேதினம் ஒரு பொருள்பொதிந்த வீரத்திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. ஆனால், தற்காலங்களில் மேதினம் ஒரு சம்பிரதாயச் சடங்காக மாறிவிட்டது. கவிஞர் வைரமுத்து அவர்கள் மேதினி நாள் என்ற கவிதையின் மூலம் மேதினத்தின் சிறப்புக்களை எடுத்துரைக்கின்றார்.

*"வையத்தின் அழுக்குகளை வேர்வை ஆற்றில்*
*வாருங்கள் வலவை செய்வோம் என்று பாடி*
*வெய்யிலுக்கு முன்னாலே விழிக்கும் எங்கள்*
*வீரர்களைச் சிறப்பிக்கும் திருநாள் மேநாள்*
*கையெழுத்தை இடுவதற்குக்கூட இன்னும்*
*கற்காத கைகள் தாம் இந்த மண்ணின்*
*மெய்யெழுத்துச் சரித்திரத்தை எழுதிச் செல்லும்*
*மேதினமும் இதையே தான் திருப்பிச் சொல்லும்"*
*(வைரமுத்து, ரத்த தானம், ப.56)*

என்னும் கவிதையில் மே தினத்திற்கான பொருளையும் மண்ணின் உண்மையான சரித்திரத்தை எழுதிய கைகள் தொழிலாளர்களின் கைகளே என்பதையும் எடுத்துரைக்கின்றார்.

தொழிலாளர்களின் தினமான மேதினம் ஒவ்வொரு உழைப்பாளியின் வெற்றித்தினமாகும் என்பதைக் கவிஞர் நினைவூட்டுகின்றார்.

**ஆய்வு முடிவுகள்**

வாழ்வியல் முறைகளையும் சமூக நிகழ்வுகளையும் உள்ளடக்கிச் சமுதாயத்திற்குத் தேவையான கருத்துக்களை இலக்கியம் எடுத்தியம்புகிறது. இதில் சமூக அக்கறை கொண்ட கவிஞர் சமூகத்தின் வளர்ச்சிக்குத் தங்களின் கருத்தைக் கவிதையில் பதிவு செய்துள்ளார்.

# புறநானூற்றில் மேலாண்மைச் சிந்தனைகள்

*முனைவர் ச. மரகதமணி*
*தமிழ்த்துறைப் பேராசிரியர்*
*பி.கே.ஆர் மகளிர் கல்லூரி*
*கோபிசெட்டிபாளையம்*

காதலும் வீரமும் தமிழர்களின் இரு கண்களாகப் போற்றப்பட்டு வந்தது. எனவே இது அகம், புறம் என்று பிரிக்கப்பட்டது. அகம் அன்பின் வெளிப்பாடாகவும், புறம் வீரத்தின் வெளிப்பாடாகவும் அமையப்பெறும். புறத்திணை நூலான புறநானூறு மன்னர்களின் போர் திறம், கொடை, அரசாட்சி என அனைத்தும் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை உணர்த்துகிறது. மக்களை வழிநடத்தும் மன்னனின் ஆட்சி இவ்வாறு அமைதல் வேண்டும். இவ்வாறு அமைதல் கூடாது என்று அறிவுரை கூறி மன்னனை வழிநடத்தும் பெரும் பேற்றினைப் புலவர்கள் பெற்று இருந்தனர் என்பதற்கு சங்கப் பாடல்கள் சிறந்த உதாரணங்களாகும். அதுமட்டுமல்லாமல் அவர்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் காணமுடிகிறது.

நவீன காலத்தில் மேலாண்மைக் குறித்த பல்வேறு கருத்துக்களும் கோட்பாடுகளும் பேசப்பட்டாலும் தகவல் தொடர்பு அற்ற அக்காலத்திலேயே நிர்வாகம் குறித்த நம் பழந் தமிழர்களின் பார்வை நம்மை வியப்படையவே செய்கிறது. மன்னர்கள் மனிதநேயம் மிக்கவர்களாக ஏற்றத்தாழ்வு இல்லாது பழகுகின்ற சுமூக உறவுகளைக் கொண்டவர்களாகவும் ஒருவரைப் பாராட்டும் (Appreciation skill) மனதோடும் இருந்துள்ளனர். காலத்தின் முக்கியத்துவம் (Time management), தனிமனிதத் தொடர்புகள் (Interpersonal), ஒழுங்கு நடவடிக்கை (Disciplinary action) , முடிவெடுக்கும் தன்மை (Decision making skill) போன்ற மேலாண்மைச் சிந்தனைகளை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றின் வழிநின்று விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

### சுமூக உறவு (Human relationship)

அரசர்கள் புலவர்களை மிகுந்த அன்போடும் மரியாதையோடும் தமக்கு நிகரானவர்களாகவே மதித்தனர். அவர்களுக்குள் உயர்வு, தாழ்வு என்ற சிந்தனை மோலோங்கவில்லை. அதிமானும் ஔவையாரும் கொண்ட நட்பு நல்ல உதாரணமாகச் சொல்லலாம். நெல்லிக் கனியை உண்ட மகிழ்வில் ஔவையார் அதியமானைப் பாராட்டிப் பாடுவதாக உள்ளது இப்பாடல்.

*வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்.*
*களம்படக் கடந்த கழல்தொடி தடக்கை*
*ஆர்கலி நறவின் அதியர் கோமான்*
……………
*பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி*

*நீல மணிமிடற்று ஒருவன் போல*
*மன்னுக பெரும நீயே தென்னிலைப்*
*..................... (புறநானூறு - 91)*

அரசன் ஆண்டி, உயர்ந்தவன் தாழ்ந்தவன், ஆண் பெண் என்ற எந்தவிதமான வேறுபாடுகளும் இன்றி நட்பு பாராட்டியுள்ளனர். அவ்வாறு கொண்ட நட்பினால் தான் அதியமான் அதிசய நெல்லிக்கனியை தான் உண்ணாது ஔவையாருக்கு அருளினார்.

### நேர மேலாண்மை (Time management)

தலைமைப் பதவியில் இருப்பவர் எவராக இருப்பினும் காலத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவராக இருத்தல் வேண்டும் அவ்வாறு காலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காது போனால் நாம் சிலவற்றை இழக்க நேரிடலாம். எனவே நிர்வாகத்திறனில் நேர மேலாண்மை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அதியமான் நெடுமான் அஞ்சி ஔவையாருக்கு பரிசில் பொருள் கொடுக்காது கால நீட்டிப்புக்கு உள்ளாக்குகிறான். இதனைக் கண்டித்து ஔவையார் பாடிய இப்பாடல் நேரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதைப் புலப்படுகிறது.

*“வாயிலோயே வாயிலோயே*
*வள்ளியார் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்*
*.................*
*தன்அறி யலன் கொல் என்னறி யலன்கொல்*
*அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென*
*............................................*
*எத்திசைச் செல்லினும் அத்திசை சோறே”*
*(புறநானூறு – 206)*

என்ற பாடலில் வாயில் காப்பவனிடம் சினந்து, அதியமானின் தரமும் என் தரமும் அறியாதவனோ? கல்வி அறிவு உடையவர்களுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பே என்று கூறி அவ்விடத்தைவிட்டு சினத்துடன் அவையிலிருந்து வெளியேறுகிறார்.

### ஊக்குவிப்பு உத்தி (Appreciation skill)

பாராட்டினை விரும்பாத ஏற்காத மனிதர்களே இல்லை எனலாம். ஏனெனில் பாராட்டு என்பது மனிதனை ஊக்குவிக்கும் சக்திகளில் ஒன்றாகும். தலைமைப் பதவியில் இருப்பவர்களிடமிருந்து அவர்களின் கீழ் பணிபுரியக் கூடியவர்கள் பாராட்டினைப் பெறும் பொழுது, அவர்களுக்கு வேலை மீதான உந்து சக்தி அதிகமாகிறது. இது தனிமனிதனையும் நிர்வாகத்தையும் மேன்மையடையச் செய்யும். Increment, Bonus, Promotion என்று தற்பொழுது நாம் கையாளக்கூடிய நிர்வாக உத்திகள் அனைத்தும் நம் அரசர்கள் கையாண்டதே ஆகும்.

போர்களில் சிறப்பான முறையில் வழிநடத்திச் சென்றவர்களுக்கு ஏனாதி என்ற பட்டம் வழங்கப்பட்டது. ஏனாதி மோதிரமும் அரசரால் வழங்கப்பட்டது. மலையமான் திருமுடிக்காரியின் வழி வந்தவன் மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன். முள்ளூர் மலையை உடையவன். சோழ மன்னர்களுக்கு போரில் உதவி செய்தவன். சோழ நாட்டு தலைவன் இன்றி பகைவரிடம் துயர்பட்டுக் கிடக்கையில் முள்ளூர் தில்லையில் திங்கள் கொடியை உயர்த்தி பகைவரை வென்று சோழ நாட்டைக் காத்தான். ஆதலால் ஏனாதி என்ற பட்டத்தைப் பெற்றான். எனவே மலையமான் சோழிய ஏனாதி திருக்கள்ளி என்று அழைக்கப்பட்டான். மறோகத்து நப்பசலையாரின் பாடல் இதனை விளக்குகிறது.

*அணங்குடை அவுணர் கணம் கொண்டு ஒளித்தெனச்*
*சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது*
*இருள்கண் கெடுத்த பருதி ஞாலத்து*
*இடும்பைகொள் பருவரல் தீரக் கடுந்திறல்*
*அஞ்சன உருவன் தந்து நிறுத்தாங்கு*
*அரசிழந்து இருந்த அல்லற் காலை*
*.........................*
*எள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை*
*அருவழி இருந்த பெருவிறல் வளவன்*
*.......................*
*கல்கண் பொடியக் கானம் வெம்ப*
*மலகு நீர் வரைப்பில் கயம்பல உணங்கச்*
*............... (புறநானூறு – 174)*

சேனாதிபதிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்பெற்றது. அவற்றுள் ஏனாதி என்பது ஒன்று. அப்பட்டத்துக்குரிய மோதிரம் ஏனாதி மோதிரமென்று வழங்கப்பெறும்.

*“போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக்*
*கார் கடல் பெற்ற கரையன்றோ போர்க் கெல்லாம்*
*தானாதியாகிய தார் வேந்தன் மோதிரஞ்சேர்*
*ஏனாதிப் பட்டத்திவன்”*

என்ற பாடலின் மூலம் அறியமுடிகிறது. இவ்வாறு மன்னன் போர்படைத்தலைவர்களுக்கு வழங்கப்பட்ட

பட்டங்களால், தன் அரசாட்சியில் பல நல்ல போர் வீரர்களை உருவாக்க முடிந்தது. மேலும் மன்னனின் போர்திறன் குன்றாது, வலிமையுடனும் புகழுடனும் விளங்குவதற்கு இப்பட்டங்கள் காரணமாக அமைந்தது.

## தனி மனித தொடர்பு (Interpersonal communication)

நிர்வாகத்தில் தங்களுக்குள்ளாகவே சண்டையிட்டுக் கொள்ளுதல் நன்மையைத் தராது. ஒருவரை ஒருவர் புரிந்து செயலாற்றும் போதுதான் நிறுவனம் வளர்ச்சியடையும். ஒரே இனத்தைச் சர்ேந்த மன்னர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும் பொழுது, அவர்களின் உறவுகளுக்குள் பகை ஏற்படாமல் இருக்க புலவர்கள் பாதுகாத்தனர். இதனால் தனிமனித உறவுகள் பேணி பாதுகாக்கப்பட்டது. அரசாட்சியும் சிறப்புடன் விளங்கியது.

சோழர்களின் ஆட்சிக் காலத்தில் தந்தையும் மகனுமே தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டார்கள். போர் கொடுயைமானது இதனால் சோழ அரசாட்சிக்கு கேடு விளையும் என்று எண்ணி அவர்களுக்குள் எழும் சண்டையை புல்லாற்று எயிற்றினார் எனும் புலவர் சமாதானம் செய்வதை இப்பாடல் குறிப்பிடுகிறது.

*மண்டுஅமர் அட்ட மதனுடைய நோன்தாள்*
*வெண்குடை விளக்கும் விறல்கெழு வேந்தே*
*பொங்கு நீர் உடுத்தஇம் மலர்தலை உலகத்து*
*.................*
*ஒழித்த தாயம் அவர்க்கு உரித்து அன்றே*
*அதனால் அன்னது ஆதலும் அறிவோய் நன்றும்*
*................................ (புறநானூறு – 213)*

வெண்குடையை உடைய அரசனே ஆழி சூழ் இவ்வுலகில் உன்னோடு போரிடுபவன் உன் மகன். பகை வேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் அல்லர். நீயும் அவர்களுக்கு பகைவன் அல்ல. உனக்குப்பின் ஆட்சி அமைக்கும் முறையை உடையவன். போரில் நின் மக்கள் தோற்றலால் அது உனக்குத்தான் பழி ஆதலால் உன்னுடைய கோபத்தை தணித்துக்கொள் என்று கூறுகிறார்.

சோழன் நலங்கிள்ளி மற்றும் நெடுங்கிள்ளி சகோதரர்கள் தம்முள் போரிட முனைந்த பொழுது அதனைத் தவறு எனச் சுட்டிக்காட்டுகிறார். கோவூர் கிழார்.

*இரும்பினை வெண்தோடு மலைந்தோன் அல்லன்*
*கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்*
*நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே நின்னொடு*
*பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே*
*ஒருவீர் தோற்பினும் தோற்பதும் குடியே*
*இருவீர் வேறல் இயற்கையும் அன்றே அதனால்*
*குடிப் பொரு என்று நும் செய்தி கொடித்தேர்*
*.......................................*
*மெய்ம் மலி உவகை செய்யும் இவ்விகலே.*
*(புறநானூறு – 45)*

சோழர் குடியில் பிறந்த சகோதரர்கள் இருவரும் தம்முள் பகை கொள்ளுதல் கூடாது. இருவரும் வேறு குலம் அல்ல, இருவர் ஈடும் பூவும் வேறுபாடு கொண்டது அல்ல எனவே நீங்கள் சண்டையிட்டுக் கொள்வது உங்களின் குடிப் பெருமைக்கு அழகல்ல என்று கடிந்துரைக்கிறார்.

## ஒழுங்கு நடவடிக்கை (Disciplinary action)

Skill - arning Managerial

எந்தவொரு செயலைச் செய்யும் பொழுதும் ஒழுங்கும் திட்டமிடுதலும் முக்கியமானதாகும். அப்பொழுதுதான் அச்செயல் வெற்றியடையும். பண்டைய தமிழர்கள் ஒழுங்கு என்பதை தனிமனித வாழ்க்கையில் மட்டும் பின்பற்றாமல் அதனை அறமாகவே கருதி வாழ்ந்து வந்தனர். நவீன காலத்தில் போர் என்பது மனித உயிர்களை பழிவாங்கும் நோக்கம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. ஆனால் பண்டைய தமிழ் மன்னர்களின் போரில் நியதித் தண்மையொடு கூடிய ஒழுக்கத்தையும் காணமுடிகிறது. அதுமட்டுமில்லாமல் போரிலும் இரக்கவுணர்ச்சியே மேம்பட்டிருப்பதைக் கீழ்க்காணும் பாடல் உணர்த்துகிறது.

போர் தொடுப்பதற்கு முன்பு பகைவர்களின் நாட்டிலுள்ள பசுநிரையும், அந்தணரும், பெண்டிரும், பிணியாளரும், புதல்வன் இல்லாதவர்களும் சென்று விடுமாறு பாண்டியன் பறையறைவிப்பதை (எச்சரிப்பதை) இப்பாடல் உணர்த்துகிறது.

*“ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்*
*பெண்டிரும், பிணியுடைய யீரும் பேணித்*
*தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்*
*..................*
*எம்அம்பு கடிவிடுதும், நும்மரண் சேர்மின்என*
*அறத்தாறு நுவரும் பூட்கை மரத்தின்*
*...............*

*நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே"*

*(புறநானூறு - 9)*

**நடத்தை விதி – Code of Contact**

துறை சார்ந்த செயல்பாடுகளைக் தெரிந்து கொள்வதற்கு பயன்படுத்தப்படுவது Code of Contact ஆகும். இந்த நடைமுறையினை அன்றே நம் மன்னர்கள் செயல்படுத்தியுள்ளனர். நவீன காலத்தில் ஒருவரைத் தனித்து அடையாளப்படுத்திக் காட்டுதல் என்பது அவசியமான ஒன்றாகும். குறிப்பாக நிறுவனங்கள், கல்லூரிகள், தனித்த அமைப்புக்கள், கட்சிகள், சங்கம் என அனைத்திற்கும் ஆடை குறியீடு (Dress Code - Uniform, Batch) முக்கிய அங்கம் வகிக்கிறது. நம் தமிழர்கள் அக்காலக்கட்டத்திலேயே இத்தகு குறியீட்டினைக் கையாண்டுள்ளனர் என்பது அவர்களின் மேலாண்மைக் காட்டுகிறது.

நிரைகவர்தல் போர் செய்யப் புறப்படுதல், மதிலை வளைத்தல், வெற்றியுறுதல் என்று போரில் பல பெரும் பிரிவுகள் வகுக்கப்பட்டுள்ளன. அவற்றை வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, காஞ்சி, நொச்சி, தும்பை, வாகைப் பூக்களை சூடியிருந்தால் இந்தப் பிரிவினைச் சேர்ந்தவன் என்பதை எளிதில் அடையாளம் காட்டக் கூடியதாக இது அமைந்திருந்தது. இதன் மூலம் போர் வீரர்கள் எந்தப் பிரிவினைச் சேர்ந்தவர்கள் என்று எளிதில் அடையாளம் காணமுடியும். இப்பிரிவுகள் அனைத்தும் புறத்திணை இலக்கணங்களாகவே பிரித்துள்ளனர்.

*"வெட்சி நிரை கவர்தல் மீட்டல் கரந்தையாம்*
*வட்கார் மேல் செல்வது வஞ்சி உட்காது எதிர் ஊன்றல் காஞ்சி*
*எயில் காத்தல் நொச்சிஅது வளைத்தல் ஆகும் உழிஞை அதிரப் பொருவது*
*தும்பையாம் போர்க்களத்து மிக்கோர் செரு வென்றது வாகையாம்"*

புறத்திணைகளின் செய்திகளைக் கூறும் பழம்பாடல் இத்திணையை அழகாக விளக்குகிறது.

வெட்சி – பசுக்கூட்டங்களை கவர்ந்து வருதல்,
கரந்தை – கவர்ந்து சென்ற பசுக்களை மீட்டு வருதல்
வஞ்சி – நாட்டினைக் கைப்பற்றச் செல்லும் பொழுது சூடுதல்
காஞ்சி – பகைவர்கள் நாட்டுக்குள் புகாதவாறு தடுத்தல்
உழிஞை – பகைவர்களின் மதிலை வளைத்தல்,
நொச்சி – மதிலுக்குள் புகாதவாறு தடுத்தல்,
தும்பை – பகை அரசர்கள் எதிர் எதிர் நின்று போரிடுதல்,
வாகை – வெற்றி பெற்ற அரசன் வாகைப் பூ சூடுதல்.

**நிலை அறிந்து வரி விதித்தல்**
**(Income tax Based on financial status)**

மன்னன் அனைவருக்கும் ஒரே மாதிரியான வரியினை விதித்தல் கூடாது. மக்களின் திறம் அறிந்து வரியினை விதிக்க வேண்டும் என்பதை கீழ் காணும் பாடல் உணர்த்துகிறது.

*"பகடு புறந்தருநர் பாரம் ஓம்பி;, குடிபுறந்தருகவை யாயின்,*
*அடிபுறந் தருகவ ரடங்காதோரே"*

என்ற அரசனுக்கு புலவர் அறிவுறுத்துகிறார். படை வலிமையுடன் இருப்பதற்கும் வெற்றிக்கும் காரணமாக நிற்பது உணவுதான். ஆதலின் அவ்வுணவை விளைவிப்பதில் உழவர்கள் சிறப்பானவர்கள். உழுதொழில் புரியும் குடிமக்களைப் பேணி பாதுகாத்தல் நம் கடமையாகும். எனவே உழுதொழில் செய்யும் வேளாளர்களிடம் நெறியறிந்து அவர்களின் திறம் அறிந்து வரி விதித்தல் வேண்டும்.

**முகம் அறிந்து செயல்படல்(Facial Expression)**

அரசன் தன் மக்களின் முகக்குறிப்பை அறிந்து அதற்கு ஏற்றபடி முறையாக ஆட்சி செய்பவனாகவே இருக்க வேண்டும் என்று புலவர் இரும்பிடர்த்தலையார் பாண்டியன் கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதிக்கு அறிவுரை பகர்வதாக இப்பாடல் அமைகிறது.

*"உவவுமதி உருவின் ஓங்கல் வெண்குடை*
*நிலவுக்கடல் வரைப்பின் மண்ணகம் நிழற்ற*
*..............................*
*உன்ன மரத்த துன்னருங் கவலை*
*நின்னசை வேட்கையின் இரவலர் வருவர் அது*
*முன்னம் முகத்தின் உணர்ந்து அவர்*
*இன்மை தீர்த்தல் வன்மை யானே"*

*(புறநானூறு - 3)*

கடுமையான வழியைக் கடந்து மன்னனைக் காண வருபவர் புலவர்கள். அவர்களின் மனத்தை முகக் குறிப்பால் அறிந்து வேண்டியதைத் தரவேண்டும்.

**அறம் கூறும் அவை – குறை தீர்க்கும் அவை**

அரசன் நீதி வழங்குவதில் நடுநிலை தவறாது இருக்க வேண்டியவன். பிறர் கூறுவதைக் கேட்டு ஆராயாமல் முடிவு செய்தல் தவறு. இதன் பொருட்டு தமிழ்

மன்னர்கள் அறம் கூறும் அவையொற்றினை நிறுவினார். சான்றோர் பெருமக்களை அவைக்கு தலைவர்களாக்கி மக்களின் குறைகளைப் போக்கினர். குறிப்பாக உறையூரில் இருந்த அறம் கூறும் அவை சிறப்பானதாக இருந்தது.

*பயங்கெழு மாமழை பொயயாது மாறிக்*
*கயங்களி முளியும் கோடை ஆயினும்*
*புழற்கால் ஆம்பல் அகலடை நீழல்*
*கதிர்க் கோட்டு நந்தின் சுரிமுக ஏற்றை*
*...................................*
*ஆசாகு என்னும் பூசல்போல*
*வல்லே களைமதி அத்தை உள்ளிய*
*...............................* (புறநானூறு - 266)

மக்களின் குறைகளை களைவதற்கு இது போன்ற எளிய வழிகளையும் மன்னர்கள் கையாண்டுள்ளனர். நாட்டு மக்களின் மேல் அவர்கள் வைத்துள்ள பற்றினையே இது காட்டுகிறது.

**முடிவெடுக்கும் திறன் (Decision making skill)**

தலைமைப் பதவியில் இருப்பவர்கள் யாரையும் சார்ந்து இருத்தல் கூடாது. பொதுவான மனநிலையோடும், நன்றாகப் புரிந்து கொள்பவராகவும் (Perceiving skill), பிறரின் கருத்துக்களை கூர்ந்து கவனிப்பவராகவும் (Listening skill), இலகு தன்மையுடனும் (Flexibility skill) இருத்தல் வேண்டும். மன்னனின் ஆட்சி நிர்வாகம் ஒருதலைப் பட்சமாக இருத்தல் கூடாது. பொது நிலையோடு இருத்தல் வேண்டும். தன் சுற்றத்தவர் என்று பிறரின் பேச்சை கேட்கக் கூடாது என்பதை, பாண்டியன் அறிவுடை நம்பிக்கு பிசிராந்தையார் கூறும் பாடல் சான்றாகிறது.

*“காண் நெல்லறுத்துக் கவளம் கொளினே*
*மாநிறைவு இல்லதும் பன்னாட்டு ஆகும்*
*நூறு செறு ஆயினும் தமிழ்துப்புக்கு உணினே*
*வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்*
*அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே*
*கோடி யாத்து நாடுபெரிது நந்தும்*
*............................*
*தானும் உண்ணான், உலகமும் கெடுமே”*
(புறநானூறு - 184)

குறைந்த நிலமாக இருப்பினும் அதனை விளைவித்து உண்டான நெல்லை கவளம் கவளமாக யானைக்கு ஊட்டினால் அது பல நாட்களுக்கு வரும். அதிகமான நிலமாயினும் யானை தன் போக்கில் சென்று உணவு உண்டால் அது உண்ட நெல்லை விட அதிகமான நெல் கால்பட்டு அழிந்து விடும். வேந்தன் முறைப்படி குடி மக்களிடம் வரியை வாங்கினால் நாடு மேன்மையடையும் அறிவில்லாதவன் ஆள, அவனுடன் தலையாட்டும் மந்திரிகளும் சேர்ந்து கொண்டால் யானை புகந்த வயலைப் போல் நாடு நலிவடையும். அறிவுடைய அரசனங அறநெறியில் வாழ்ந்து பொறிநிலைத் தன்மையோடு அவனும் இன்புற்று நாட்டு மக்களையும் இன்புறச் செய்தல் வேண்டும்.

திறன் அறிந்து அவர்களுக்கான வேலையை ஒப்படைத்தல் என்பது நிர்வாகவியலின் சிறப்புத் தரத்தைக் காட்டும் இதைத்தான் வள்ளுவர்,

*“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்”* (517)
என்கிறார்.

புலவர் கழாத்தலையார் அரசன் படை வீரனைத் தேர்ந்தெடுக்கும் பொழுது தரம் அறிந்து செயல்பட வேண்டும் என்பதை புறநானூறு பாடல் விளங்குகிறது.

*ஈரச் செவ்வி உதவின ஆயினும்*
*பல்எருத் துள்ளும் நல்எருது நோக்கி*
*வீறுவீறு ஆயும் உழவன் போலப்*
*பீடுபெறு தொல்குடிப் பாடுபல தாங்கிய*
*மூதி லாளர் உள்ளும், காதலின்*
*தனக்கு முகந்து ஏந்திய பசும்பொன் மண்டை*
*இவற்கு ஈக என்னும் அதுவும்அன் றிசினே*
*கேட்டியோ வாழி பணை பாசறைப்*
*பூக்கோள் இன்று என்று அறையும்*
*மடிவாய்த் தண்ணுமை இழிசினன் குரலே”*
(புறநானூறு - 289)

நிலத்தை உழ உழவன் பல எருதுகளுள் நல்ல எருதினைத் தேர்ந்தெடுப்பான். ஆவ்வுழவனைப் போல மன்னன் மறக்குடியில் தோன்றிய ஒருவனைத் தேர்ந்தெடுத்து அவனுக்குக் கள் வழங்குமாறு கூறினான் என்பதாகும். அரசன் செயல் செய்வதற்குரியரைத் தேர்ந்தெடுப்பதை இப்பாடல் புலப்படுத்துகிறது.

ASK Based Quality
Attitude - மனப்பாங்கு, Skill - திறமை, Knowledge - அறிவு.

மன்னன் என்பவன் எல்லா ஒழுக்க நியதிகளையும் உடையவனாய் வாழ்வதல் வேண்டும்.

பிறரின் மனஓட்டத்தை கண்டறியும் இயல்பு, திறமையுடன் செல்படுதல், தன் அறிவினால் உண்மையைத் தெரிந்து கொள்ளுதல் இவை அனைத்தையும் ஒருங்கே பெற்றவனாக தலைவன் இருக்க வேண்டும். ஏனெனில் அப்பொழுதுதான் அவன் தலைமையில் இயங்கும் நாடு வளம் பெறும். எனவே தலைமைப் பதவியில் இருப்பவர்கள் எத்தகு உயர்சிந்தனைகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனை உவமையாக்கிக் காட்டுகிறார் முரஞ்சியூர் முடிநாகனார்,

*“மண்திணிந்த நிலமும்*
*நிலம் ஏந்திய விசும்பும்*
*விசும்பு மைவரு வளியும்*
*வளித் தலைஇய தீயும்*
*தீமுரணிய நீரும் என்றாங்கு*
*ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்*
*போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்...........*
*பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்*
*பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்*
*நாஇல் வேத நெறி திரியினும்*
*திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி*
.............................
*போற்கோட்டு இமயமு பொதியமும் போன்றே”*
*(புறநானூறு - 2)*

வான், நிலம், காற்று, , தீ, நீர் இந்த ஐந்து வகையான பூதங்களின் தன்மையைப் போல தலைவன் செயல்பட வேண்டும். பகைவர் பிழையைச் செய்தால் அதை பொறுத்துக் கொள்ளும் பொழுது நிலம் போலவும், அந்தப் பிழை பொறுத்துக் கொள்ளத்தக்கது அன்று எனில் பகைவரை அழிப்பதில் தீ போலவும், காற்று போலவும் செயல்பட வேண்டும். ஆரசனை வணங்குபவர்களுக்கும், சான்றோர்களுக்கும் அருளக் கூடிய நீர் போலவும் மன்னன் இருக்க வேண்டும்.

புலவர் கூறுகின்ற கருத்தை அரசர் நன்றாகப் புரிந்து கொள்பவராகவும் (Preceiving skill), புலவர் என்று எண்ணாமலை சான்றோரின் பேச்சைக் கேட்பவராகவும் (Listening skill), சான்றோரின் மொழியால் இலகு தன்மையுடனும் (Flexibility skill) செயல்பட்டிருத்தலை புறநானூற்றுப்பாடல் உணர்த்துகிறது. தலைமைப் பண்புகள் அனைத்தையும் பெற்றவர்களாக புறநானூற்றுப்பாடல் உணர்த்துகிறது. தலைமைப் பண்புகள் அனைத்தையும் பெற்றவர்களாக நிர்வாகத்திறன் உள்ளவர்களாக அரசர்கள் இருந்துள்ளனர். மேலும் புலவர்கள் கூறுகின்ற நல் மொழிகளைக் கேட்டு நடப்பவர்களாகவும் அரசர்கள் இருந்துள்ளனர். இதனால் நாடும் நாட்டு மக்களும் சிறப்புற்று விளங்கினர். நாம் இப்பொழுது பயன்படுத்தும் நிர்வாகக் கோட்பாடுகள் அனைத்தையும் நம் முன்னோர்கள் கையாண்ட உத்திகளே ஆகும். நம் அரசர்கள் ஒவ்வொரு துறையிலும் தலைசிறந்த அறிவியல் பார்வையோடு பிரச்சனைகளை அணுகியிருக்கிறார்கள். இன்றைய Management துறை நிபுணர்கள் கூட எண்ணி வியக்கும் அளவிற்கு அவர்கள் அறிவில் சிறந்து விளங்கியுள்ளனர்.

**பார்வை நூல்கள்**


1. ப. மருதநாயகம், புதுப்பார்வையில் புறநானூறு, காவ்யா பதிப்பகம்.

2. நைசி, கரிகாலன் (தொகுப்பாசிரியர்), புறநானூற்று ஆய்வுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

3. முனைவர் உ.வே.சாமிநாத ஐயர் உரை.

# புறநானூற்றில் நம்பிக்கைகள்

**க. அகல்யா,**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*காவேரி மகளிர் கல்லூரி,*
*அண்ணாமலை நகர்,*
*திருச்சிராப்பள்ளி – 17.*

தங்களுடைய செயல்பாடுகளின் வெற்றி தோல்விக்கு இயற்கை, பறவை, விலங்கு போன்ற அஃறிணையுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது மனித இயல்பு சமூகத்தின் தேவைகள், குறிக்கோள்கள் போன்றவற்றின் அடிப்படையில் நம்பிக்கைகைள் தோன்றுவன எனலாம். மனிதனின் தன்னல உணர்வும், சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. அவை காலங் காலமாகத் தொடர்ந்து பயின்று வரக் காண்கிறோம். இவ்வாறு பயின்று வரும் நம்பிக்கைகளில் இருந்து மக்களின் பண்பாடுகள் வெளிப்படுகின்றன. என்பது நம்பிக்கை குறித்த செ.பழனிச்சாமியின் கூற்றாகும்.

மனிதனின் பயவுணர்வே நம்பிக்கையின் தோற்றமாகக் கொள்ளலாம். நன்மை நடக்க வேண்டும் என்ற எண்ணமும், தீயவற்றிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள வேண்டும் என்ற முன்னெச்சரிக்கையுமே நம்பிக்கை தோன்ற காரணமாக இருக்கலாம். இதுவே ஆய்விற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாக இருக்கிறது. நம்பிக்கை மக்களிடம் பரவும் பொழுது மனித மனம் அதை ஏற்றுக் கொள்கிறது. சமுதாயத்திலும் நிலைபெறுகிறது.

நம்பிக்கைகள் வழக்கில் மிகுதியாகவும், இலக்கியங்களில் குறைந்தும் காணப்படுகின்றன. இலக்கியங்களில் இருக்கக்கூடிய நம்பிக்கைகள் அவ்விலக்கியம் தோன்றிய காலத்தில் வாழ்ந்த மக்களிடம் நிலவியதாகும். இந்த வகையில் சங்க காலத்தில் இருந்த நம்பிக்கைகளை புறப்பாடல் வழி நின்று இங்கு பார்ப்போம்.

**விரிச்சி கேட்டல்**

சங்க கால மக்களிடம் விரிச்சி எனும் நற்சொல் கேட்கும் வழக்கம் இருந்தது என்பதை சங்க நூல்கள் பல இடங்களில் பதிவு செய்துள்ளன. வித்யானந்தன் தமிழர் சால்பு எனும் தம் நூலில்,

‘‘வருங்காரியத்தை விரிவாய் முன்னே தெரிவிப்பது என்றும், ஒரு செயலை மேற்கொள்ளுங்கால் அம்முயற்சி இன்னவாறு கைகூடும் என்பதனை அறிதற்கே இவ்வாறு செய்வர். செய்து ஆக்கம் பெறுவர்’’ என்று கூறியுள்ளார். விரிச்சி, அசரீரீ என்ற இரண்டும் ஒன்றா? வேறா? என்பது பற்றி பல வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. இருப்பினும் விரிச்சி என்பதற்கான பொருளை புறநானூற்றுப் பாடலடிகள் மூலமாகவே அறிந்து கொள்வது சாலப் பொருத்தமாகும்.

*‘‘நென்னீர் எறிந்து விரிச்சி யோர்க்கும்*
*செம்முது பெண்டின் சொல்லும்’’* புறம் – 280

என்ற அடிகளில் இருந்து நெல்லும் நீரும் ஊற்றி பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டனர் என்பதை அறிய முடிகின்றது. இவ்வடிகளில் செம்முது பெண்டிர் விரிச்சி கேட்டனர் என்பதை அறிய முடிகின்றது. இவ்வடிகளில் செம்முது பெண்டிர் விரிச்சி கேட்டு நிற்கும் போது அவர்கள் செவியில் விழுந்த சொற்களை நன்மையான சொற்களாக இல்லை என்பது இவ்வடியின் பொருள். புறநானூற்றுப் பரிபாடலில் வரும் விரிச்சி பற்றிய பாடல்களைப் போல முல்லைப்பாட்டு, குறுந்தொகை, நற்றிணை போன்றவற்றிலும் காணலாம்.

*''புள்ளும் ஒரோம் விரிச்சியும் நில்லோம்''* (நற் - 40)
*''திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப''* (நற் - 40)
என்ற நற்றிணை அடிகளிலும்,

*''யாழிசை வண்டு ஆர்ப்ப நெல்லோடு*
*நாழி கொண்ட நறுவீ முல்லை*
*அரும்பவிழ் அலரி தூய்உக் கைதொழுது*
*பெருமுது பெண்டிர் விரிச்ச நிற்ப* (முல்.பாட்டு. 8-11)
என்ற முல்லைப்பாட்டு அடிகளாலும் காணலாம்.

**நன்னிமித்தம் பார்த்தல்:**

நன்னிமித்தம், தீநிமித்தம் என இருவகையான நிமித்தங்கள் உள்ளன. மனிதன் மகிழ்ச்சியை விட துயரமான நேரங்களில் தன்னை அறியாமலேயே நிமித்தங்களை நம்புகிறார்கள். இதன் மூலம் சமுதாயத்தில் நிமித்தங்களின் ஆதிக்கம் அதிகமாக இருப்பதை உணரமுடிகின்றது. ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன் நல்லநாள், நல்ல நேரம், நல்நிமித்தம் பார்த்துத் தொடங்குவது தமிழர்களின் வழக்கம். இவ்வழக்கம் இன்றும் நம்மிடையே நிலவி வருகிறது. நிமித்தம் குறித்து தொல்காப்பியரும்,

*''நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமும்*
*காலங் கண்ணிய ஓம்படை''* (தொல்.பொருள்.நூற் 36)

என்ற அடிகளில் தலைவன் நாள் நிமித்தம், புள் நிமித்தம் பிற நிமித்தங்களால் நன்மை எய்தி நீடு வாழ வேண்டும் என்று பரிசிலர் கருதுவதாய் கூறியுள்ளார். நிமித்தம் பற்றிய செய்தி தொல்காப்பியர் காலந்தொட்டே இருந்து வருகிறது.

நல்லநாள் பார்த்து விதை விதைக்கும் வழக்கத்தைப் புறநானூறு பாடல் நன்று புலப்படுத்துகிறது.

*கருங்கட் கேழ லுழுத பூமி*
*நன்னாள் வருபத நோக்கிக் குறவர்*
*உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை* (புறம். 16-18)

என்னும் அடிகள் பிட்டங் கொற்றனை குறித்து கந்துப்பிள்ளை சாத்தனார் பாடியவை.

*''கருங்கட் கேழ லுழுத பூமி*
*நன்னாள் வருபத நோக்கிக் குறவர்*
*உழாஅது வித்திய பரூஉக்குரற் சிறுதினை''* (புறம் - 16)

இவ்வாறு நிமித்தம் பார்த்து நல்லது கெட்டது செய்வது வழக்கமாக இருந்ததை புறநானூறு காட்டி நிற்கிறது.

**கூகை அலறல்:**

ஆந்தை இனப் பறவைகளில் கூகையும் ஒன்று. இவ்வினப் பறவைகள் கூகை, குரால், குடிஞை, ஊமன், ஆண்டலை என ஐவகைப்படும் என்கிறார். பி.எல்.சாமி.

கூகை மரப்பொந்தில் வாழும். இதன் இருப்பிடம் சுடுகாட்டுக்கு அருகில் வாழும் தன்மையைப் புறநானூற்றுப் பாட்டுகள் வழி அறியமுடிகிறது.

மாறோக்கத்து நப்பசலையார் பாடலில்,
*''அஞ்சுவரு குராஅல் குரலும் தூற்றும்''* (புறம் 280)

என்ற அடியில் வழக்கத்திற்கு மாறாக காட்டப்பட்டுள்ளது. அதாவது, வீட்டுக் கூரையில் இருந்து கூகை அலறுவதை குறிக்கின்றது. இது கெட்ட சகுனத்தைக் காட்டுவதாக அக்காலத்திலேயே கொள்ளப்பட்டுள்ளது.

புறநானூற்றுப் புலவர்க்கு கூகைக் கோழியார் என்ற பெயரும் அமைந்துள்ளது. அவர் தாம் பாடிய பாடலடிகளினால் இப்பெயர் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தனது பாடலில்,

*''முதுமரப் பொந்தின் கதுமென இயம்பும்*
*கூடைக் கோழி ஆனாத்*
*தாழிய பெருங்கா டெய்திய ஞான்றே''* (புறம் - 364)

என்று குறிப்பிடுகிறார். அதாவது முதுமர பொந்துகளில் இருந்து ஆந்தைகள் அலறும் என்ற செய்தியை முன்மொழிகின்றார்.

ஆய் அண்டிரன் இறந்தமையைக் குறித்து குட்டுவன் கீரனார் எனும் புலவர் பாடும் போது,

*''காலன் என்னும் கண்ணிலி உய்ப்ப*

*மேலோர் உலகம் எய்தினன் எனஅப்*
*பொத்த அறையுள் போழ்வாய் கூகை'' (புறம் 240)*

என்பதிலிருந்து கூகையின் குரல் கேட்டல் தீய சகுனம் என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

இன்றும் கூகை கத்தும் ஒலியை மக்கள் கெட்ட சகுனம் என்று தான் நினைக்கின்றனர்.

**கனவு:**

கனவுகள் நம்பிக்கையாகவும், எதிர்காலத்தை உணர்த்துவனவாகவும் மக்களால் உணரப்படுகின்றது. சிலருக்கு கனவுகள் உண்மையான நிகழ்ச்சியை உணர்த்துவனவாகவும் அமைகின்றன. அடக்கி வைக்கப்பட்ட விருப்பங்களே கனவாக உருவெடுக்கின்றன என்று உளவியலார் கூறுகின்றனர்.

எயிறு நிலத்தில் வீழ்தல், தலையில் எண்ணெய் தேய்த்திருத்தல், களிறு மேல் ஊர்தல், கட்டிய ஆடை நீங்கல், படைக்கலம் கவிழ்தல், ஆகிய கனவுகள் தீ நிமித்தங்களைக் குறிப்பனவாகப் புறநானூற்றுப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

*''திசையிரு நான்கும் உற்கம் உற்கவும்*
*பெருமரத்து இலையின் நெடுங்கோடு பற்றவும்*
*''வெங்கதிர்க் கனலி துற்றவும் பிறவும்*
*அஞ்சுவரத் தகுந புள்ளுக்குரல் இயம்பவும்*
*எயிறு நிலத்து வீழவும் எண்ணெய் ஆடவும்*
*களிறுமேல் கொள்ளவும் காழகம் நீப்பவும்*
*வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்*
*கனவின் அரியன காணா நனவின் (புறம் 41)*

என்று பாடியுள்ளார்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை எதிர்த்த பகைவர்கள் எரிகொள்ளி எரிந்து வீழ (மரங்களின் கிளைகள் இலையின்றி உலர்ந்தும், பற்கள் நிலத்தில் விழவும், படைக்கலங்கள் கட்டிலொடு கவிழவும் இத்தீய சகுனங்களைத் தம் கனவில் காண்பர் என்று கோவூர் கிழார் கூறுகிறார். கனவுகள் எதிர்காலத்தில் நிகழ இருப்பதைக் கூறுவனவாக உள்ளன. குறிப்பாக தமிழ் இலக்கியங்களில் காணப்படும் கனவுகள் தீமையைக் குறித்தே நிற்கின்றன.

**வெள்ளி காணுதல்:**

வெள்ளியின் நிலையை வைத்து நாட்டின் தாழ்வும், வாழ்வும் முன்கூட்டியே நிர்ணியித்தனர். வெள்ளி தென்திசை சென்றால் வறட்சி தோன்றும் எனப் புறப்பாடல் வழி அறியலாம்.

*''அலங்குகதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்*
*இலங்குகதிர் வெள்ளி தெள்புலம் படரினும்''*

என்பது வெள்ளைக்குடி நாகனாரின் பாடலடிகள்.

சோழன் குளமுற்றுத் துஞ்சிய கிள்ளிவளவன் நாட்டை சிறப்பித்துப் பாடுவதில் அறியமுடிகிறது. கதிரவன் நான்கு திசையில் தோன்றினாலும் வெள்ளி மீன் தென்திசையில் சென்றாலும் காவிரி வந்து பல கால்வாய்களாக பிரிந்து பாய்ந்து உன் நாடு செழிக்கும் என்று புகழ்கிறார்.

வெள்ளி தான் நிற்க வேண்டிய வடக்குத் திசையில் நின்று மழைபெய்த செய்தி பதிற்றுப்பத்தில் பேசப்படுகிறது. வெள்ளி, காலை மாலையில் மட்டுமே கண்ணுக்குத் தெரியும் வெள்ளி கிழக்குத் திசையில் தோன்றும் போது இரவு விடியும் என நம்பினர். இதனாலேயே இதற்கு விடிவெள்ளி என பெயரிட்டனர். போலும்.

தூமம் என்பது வானத்தில் மறைந்திருந்து தோன்றும் கோளாகும். இதனைத் தூமகேது என்று அழைக்கின்றனர். ''தூமகேது தோன்றும் நாளில் உலகிற்கு பெருந்துன்பம் வரும் என்கிறார்'' உ.வே.சா.

சனிமீன் புகைதல், தூமம் தோன்றுதல், தென் திசையில் வெள்ளி செல்லுதல் ஆகிய தீநிமித்தங்கள் தோன்றினாலும் பாரியின் நாட்டில் மழை தவறாது பொழியும் என்று கபிலர் பாடுகிறார்.

*''பா அல் புளிப்பினும் பகல் இருளினும்*
*நா அல் வேத நெறி திரியினும்'' (புறம் 2)*

தூமம் தோன்றுவதோடு சனிமீன் புகைதலும் தென் திசையில் வெள்ளி செல்லுதல் ஆகியவை இத்தீநிமித்தங்கள் என இப்பாட்டு வழி அறியமுடிகிறது.

நம்பிக்கை என்பது பண்பாட்டின் வெளிப்பாடாகும் சங்க காலம் தொட்டு இன்று வரை பல்வேறு நம்பிக்கைகள் நம்மிடையே நிலவி வருகிறது. நல்லது கெட்டது என அனைத்திற்கும் நம்பிக்கைகள் நம்மிடையே இருக்கின்றன. படித்தவர் படிக்காதவர் ஏழை பணக்காரர் என அனைத்து தரப்பு மக்களிடமும் நம்பிக்கை இருக்கின்றது. புறநானூற்றுப் பாடல்களில் காணப்படும் கூகை அலறல், வெள்ளி காணுதல், கனவு, விரிச்சி கேட்டல், நன்னிமித்தம் பார்த்தல் போன்ற பலவகையான நம்பிக்கை குறித்த செய்திகள் இன்றும் நம்மிடையே நிலவுகிறது.

# வேற்றுமையில் வேற்றுமை

***முனைவர் பா.சங்கரேஸ்வரி***
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழியற்புலம்*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்*
*மதுரை - 21.*

ஒரு மொழியின் அடிப்படைக் கட்டமைப்பானது ஒன்றாகத்தான் இருக்க முடியும். ஆனால் அவற்றைப் புரிந்து கொள்வதில் பல அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன. மனிதனின் சிந்தனை வளர்ச்சியால் காலம் காலமாக இலக்கண மரபிலும் பல மாறுபாடுகள் ஏற்பட்டுப் பல மரபுகள் கிளைக்க ஆரம்பித்தன. அந்த வகையில் நம் தமிழ் இலக்கண மரபில் இடம்பெறும் வேற்றுமை இலக்கணம் காலந்தோறும் எவ்வாறு மாறுபட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தொல்காப்பியம் மற்றும் சமஸ்கிருத மொழியின் இலக்கணமான அஷ்டாத்தியாயியை அடிப்படையாக் கொண்டும் வீரசோழியம் பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து போன்ற இலக்கண நூல்கள் முதலாம் வேற்றுமையை எங்ஙனம் விளக்குகின்றன என்பதனைச் சோதனையிடுவதன் மூலம் மற்ற வேற்றுமைகளையும் எங்ஙனம் கையாண்டுள்ளனர் என்பதனை நம்மால் அறியமுடியும்.

ஒரு வாக்கியத்தில் பெயர்ச்சொல்லை எழுவாய் என்பர். எழுவாய் வேற்றுமைக்குத் தனியே உருபில்லை. பெயர் தன்னியல்பில் தோன்றி அந்நிலையே எழுவாயாக நிற்கும். இதனைப் பெயர் வேற்றுமை (தொல் 548), எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை. இதனை “எழுவாய் வேற்றுமை பெயர் தோன்றும் நிலையே” (தொல். 549) என்று குறிப்பிட்டுள்ளார். பெயர் தோன்றிய துணையாய் நிற்கும் நிலைமையாவது உருபும் விளியும் ஏலாது பிறிதொன்றனோடு தொகாது நிற்கும் நிலைமை என்று சேனாவரையர் விளக்கம் தந்துள்ளார். இதற்கு மாறாகத் தெய்வச்சிலையார் பெயர் நின்று பயனிலை கொள்ளும் போது அது வேற்றுமை என விளக்கம் தருகிறார். பயனிலை கொள்ளாவிட்டாலும் இது வேற்றுமையே என்பது தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் கருத்து. மேலும் அவர் பெயர் வேற்றுமை பிற வேற்றுமைகளின்றும் அதன் பொருளால் வேறுபடுகிறது என்பார்.

சமஸ்கிருத மொழியில் முதல் வேற்றுமை

தமிழிலுள்ள உரியடிச் சொல்லைப் பாணினீய ஆசிரியர் “பிராதிபதிகம்” எனக் கூறுகிறார்.

*அர்தவத் அதாதுர் அப்ரத்ய்ய: பிராதிபதிகம் (அஷ்டா 1.2.45)*

ப்ராதிபதிகம் என்பது வேற்றுமை உருபுகளை ஏற்கும் பெயரடிச்சொல், இது ஒரு பொருளைக் குறிக்கக்கூடியது. வினையடிச் சொற்களைக் காட்டிலும் வேறுபட்டது. குறிப்பிட்ட பொருளில் வழங்கப்பெறும் இடைநிலை உருபுகளாகிய பிரத்தியங்களைக் காட்டிலும் வேறுபட்டது.

*ப்ராதிபதிகார்தலிங்க பரிமாண வசனமாத்ரே ப்ரதமா*
*(அஷ்டா 2.3.46)*

மேற்குறிப்பிட்ட பொருளையுடைய ப்ராதிபதிகத்தின் மீது முதல் வேற்றுமை உருபு சேர்க்கப்படுகிறது. இவ்விதம் முதல் வேற்றுமை உருபுடன் கூடிய ப்ராதிபதிகமே சுப்திங்ஙன்தம் பதம் என்னும் சூத்திரத்தின் விதிகளுக்குக்கேற்ப பதம் என்னும் தகுதியைப் பெறுகிறது. இம்முதல் வேற்றுமை உருபு ப்ராதிபதிகத்தைச் சொல்லாக்கிப் பொருளுடன் மொழியில் தனித்துப் பயன்படுத்தத்தக்க வகையில் அமைகிறது. ப்ராதிபதிகம் அதன்பால் விகுதிகளை ஏற்க முதல் வேற்றுமை பயன்படுகிறது. அளவீடுகளால் பொருள் குறிப்பிடப்படும்போது அளவீடும் பொருளும் வேறாகாத நிலையைக் குறிப்பிட வேற்றுமை உருபைப் பெறுகிறது. (எ.கா.) இரு மரக்கால் நெல், தனித்தியங்க இயலாத பால் விகுதிகளை வெளிப்படுத்துவதே முதல் வேற்றுமை. முதல் வேற்றுமைகளைக் குறிப்பிடக் காரண காரியம் தேவைப்படுவதில்லை. வேறு எந்த வேற்றுமைப் பொருள்களும் பயன்படுத்த இயலாத நிலையில் முதல் வேற்றுமை பயன்படுத்தப்படுகிறது. இச்சமஸ்கிருதக் கோட்பாடுகளை ஒட்டியே இம்மூன்று இலக்கண நூலாரும் தம் இலக்கணத்தை அமைக்கின்றனர்.

**வீரசோழியத்தில் முதல் வேற்றுமை**

விரசோழிய ஆசிரியர் முதல் நூற்பாவில் வேற்றுமையின் எண்ணிக்கையும், காரகத்தின் எண்ணிக்கையும், அவற்றின் பெயர்களையும் கூறுகின்றனர். ஆறாம் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் தவிர்த்த பிற ஆறும் காரகமாக வரும் என்கிறார்.

*எட்டாம் எழுவாய் முதற்பெயர் வேற்றுமை ஆறுளவாம்*
*கட்டார்க் கருத்தா முதற்காரகம் அவை கட்டுரைப்பின்*
*ஒட்டார் கருத்தா கருமம் கரணம் ஒண்கோளியோடும்*
*சிட்டார் அவதியோடு ஆதாரம் என்றறிதேமொழியே*
*(வீ.சோ.1)*

வேற்றுமை உருபைப் பெயர்கள் ஏற்கும் என்பதால் முதலில் பெயர்ச்சொற்களை எட்டு வகையாகப் பிரித்து, பின்பு எட்டு வேற்றுமையும் வந்து உறழ வேற்றுமைகள் மொத்தம் அறுபத்துநான்கு ஆகும் என்கிறார்.

சமஸ்கிருத இலக்கணத்தில் உயர்திணை, அஃறிணை என்னும் திணைப் பாகுபாடு இல்லை. ஆனால் ஆண்பால் (பும்லிங்கம்), பெண்பால் (ஸ்திரீலிங்கம்) அலிப்பால் (நபும்ஸலிங்கம்) என்று பால் மூவகைப்படும். ஒருமை (ஏகவசனம்) இருமை (த்வி வசனம்) பன்மை (பகுவசனம்) என எண் மூன்று வகைப்படும். சமஸ்கிருதத்தில் எட்டு வேற்றுமைகளுள் விளி வேற்றுமைக்கு உருபு இல்லை. எனவே அவற்றை விடுத்து விபக்தி ஏழாகும். அந்த ஏழும் பாலொடும் எண்ணொடும் வைத்துப் பெருக்க (7 ஒ 3 ஸ்ரீ 21 ஒ 3 ஸ்ரீ 63) அறுபத்து மூன்று பதங்கள் வரும் என வீரசோழிய ஆசிரியர் பின்வரும் நூற்பாவில் கூறுகிறார்.

*ஆதியவாண் பெண் அலி என்று நாட்டி அதினருகே*
*ஓதியவேற்றுமை ஏழையும் சேர்வித்து ஒருங்கதன்பின்*
*வாதியலொன்று இரண்டு பலவென வைத்து உறுழத்*
*தீதியலாத அறுபத்து மூன்றுறுந் தேர்ந்தறியே (வீ.சோ.4)*

எழுவாய் வேற்றுமைப் பெயரில் ‘‘சுவ்வும்’’ ‘‘கள்ளும்’’ ஆகிய உருபுகள் புணர்ந்து கெடும். ஆர், அர், அர்கள் பன்மைச் சொல்லின்கண் கெடாமல் நிற்கும் என்பது இவர் கூற்றாகும். ‘‘சு’’ என்னும் உருபு அழிந்து வருவதற்குத் காரணம் என்னவெனில், ‘‘வடமொழியுடையான் வாரியென்னுஞ் சொல்லை வைத்து முதல் வேற்றுமை ஏகவசனத்தைப் பொருள் விளக்குதற்பொருட்டு இவ்வண்ணம் இட்டழித்தான். இவனும் அதுபோல் ஆக்கி அழித்தாலல்லது பதமாகாதென்று இட்டழித்தான்’’ (வீ.சோ.உ.30) என்று உரையாசிரியர் விளக்கம் தருகிறார்.

தமிழில் எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை என்பதே மரபாகும். சமஸ்கிருத மொழியில் பெயரே எழுவாயாக நிற்பது. அது வெறும் பிரகிருதியாகவே நிற்கும். அதனுடன் எழுவாய் வேற்றுமை உருபு சேர்ந்தால் மட்டுமே அது எழுவாயாக நிற்கும். இவர் ‘‘சு’’ போன்றவற்றை உருபுகளாகக் கூறுவதற்குச் சமஸ்கிருத இலக்கண மரபுகளே காரணமாகும்.

*ஸ்வமோர்க பும்ஸகாத் நபும்ஸ (அஷ்டா 4.2.23)*

பெயர்ச்சொல் ஏற்கும் முதல் மற்றும் இரண்டாம் வேற்றுமை ஒருமை உருபுகள் அழிவுபடும் என வேற்றுமை உருபு இட்டழிக்கப்படுகிறது. அதுபோல் தமிழில் அனைத்து வேற்றுமைப் பதங்களுமே பால் பாகுபாடினின்றிப் பொதுத்தன்மைத்தாய் அமைவதால் முதல் வேற்றுமை உருபு இட்டழிக்கப்ட்டிருக்க வேண்டும். ஆயினும் மேற்கண்ட சூத்திரத்தின்படி அர், ஆர், அர்கள், ஆகிய பன்மை எழுவாய் வேற்றுமை உருபுகளை மொழி ஏற்றுக்கொண்டுள்ளது. மேலும் அது, அவை, இது, இவை எனப் பன்மை வேற்றுமை உருபுகள்

சொற்களுடன் சிறப்பாக ஒட்டி அமைந்துள்ளதும் மொழியில் ஏற்புடையதே. இங்குச் சமஸ்கிருதச் சொற்களுக்குச் சிறப்பாக அமையும் பால் பாகுபாடு தமிழ்மொழியில் காணப்படாததால் அனைத்துச் சொற்களையும் பொதுப் பாலாகவே கருதி முதல் வேற்றுமை ஒருமை உருபு இட்டழிக்கப்படும் என்பது ஒப்புநோக்குகையில் புலப்படுகிறது. அது என்பது அவை என்று மாறுவதும், பசு, பசுக்கள் என்று மாறுவதும் மக்கள் என்பன போன்ற நிலைத்த முதல் வேற்றுமைத் தன்மைச் சொற்கள் பயன்படுத்தப்படுவதால் முதல் வேற்றுமை உருபு ஏற்கப்பட வேண்டிய நிலையையும் அது அழிக்கப்பட்டிருக்கும் நிலையையும் தெளிவாக்குகிறது.

**பிரயோகவிவேகத்தில் முதல் வேற்றுமை**

பிரயோகவிவேக ஆசிரியர் தமிழுக்கு எழுவாய் விபத்தி திரிபில் பெயரே (பி.பி.8) ஏனைய இரண்டு முதல் ஏழு இறுதியாகிய ஆறு வேற்றுமைகளும் தாம் பெயர் பின்னர் சேர்த்து பெயரின் வடிவை மாற்றிவிடும் என்கிறார். இருப்பினும் சமஸ்கிருத இலக்கணத்தில் உள்ள வேற்றுமைச் செய்திகளை நூற்பா ஏழில் விளக்குகிறார். பெயர்ப் பகாப்பதம் ப்ராதிபதிகம் என்று வழங்கப்பெறும், அது ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்று பால் பெற்று ஏகவசனம், துவிவசனம், வெகுவசனம் ஆகிய முதல் வேற்றுமை உருபோடு சேர்த்து எழுவாய் முதல் ஏழு வேற்றுமைகளும் ஒன்று மூன்றாய் இருபத்தொன்றாக்குவர் என உரையில் கூறுகிறார்.

*அருத்தவத் தாதுரப் பிரத்தியாமாகித்*
*திருத்தக நிற்பது பிராதிபதிகம் (பி.வி.உ.7)*

ப்ராதிபதிகம் எழுவாய் ஆகாது என்றும் பின்னர் அன், அர், ஆர், கள் என்னும் பிரதமாவிபத்தியுடன் சேர்ந்தால்தான் எழுவாய் வேற்றுமையாகும் என்றும் கூறுகிறார்.

தமிழில் எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே எனினும், சமஸ்கிருத மொழியில் எழுவாய் வேற்றுமை இவ்வாறு இருக்கும் என்பதனை அறிவித்தற்கே தொல்காப்பியனார் தாமே நீயீர் என்பதனை இயற்கைச் சொல்லாகச் சொல்லதிகாரத்தில் (தொல்.659, 673) குறிப்பிட்டிருந்தும் நும் என்பதனைப் பிராதிபதிகமாக அதன் திரிபாகிய நீயிர் என்பது எழுவாய் வேற்றுமையாம் என்ற செய்தியை அல்லதன் மருங்கின் (தொல். 3260 என்ற நூற்பாவில் விளக்குவதாகத் தீட்சிதர் (பி.வி.உ.7) கூறுகிறார்.

பெயர் தோன்றி உருபும் விளியும் ஏலாது பிறிதொன்றனோடு தொடராது நிற்கும் நிலை என்ற சேனாவரையர் (தொல்.549) கூற்றே ஏற்புடையது என உரையில் தீட்சிதர் கூறுகிறார்.

**இலக்கணக் கொத்தில் முதல் வேற்றுமை**

இலக்கணக்கொத்து ஆசிரியர் தமிழ் இலக்கணத்தில் எழுவாய் வேற்றுமை உருபு பற்றி இலக்கண ஆசிரியர்களிடையே எட்டு வகை கருத்துக்கள் உள்ளன என்று கூறுகிறார்.

1. எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை
2. பெயரே எழுவாய்
3. பயனிலை கொள்ளும் தன்மை
4. வினைமுதல் ஆதல்
5. விகாரப் பெயர்
6. பெயருக்குப்பின் உருபு பெறுதல்
7. பெயருக்கு முன் உருபு பெறுதல்
8. ஆயவன், ஆனவன், ஆவான் ஆகின்றவன்போல் ஐம்பால் சொற்களும் பெயருக்குப்பின் வருதல் இவ்வெட்டு விதிகளோடு எழுந்த சூத்திரம் பிறர் மதம் கூறலேயாம். தம் துணிபு உரைத்தன்று என்று கூறுகிறார். வடமொழி இலக்கணம் தமிழில் வருதலானும், எழுவாய் உருபு வடமொழியிற்கண்டு இங்கு கொண்டு வந்தது என்று உரையில் கூறுகிறார்.

*வடமொழி எழுவாய்க்கு உருபு மூன்று அவைதாம்*
*விரியவும் தொகவும் விரும்பும் என்ப (இ.கொ.உ.26)*

தாங்கக்கும் வண்ணகக்கும் தரவாவது (யா.கா.56) என்றும், அறமாவது ஈதல் என வரும் செய்யுளாலும் அறிக என்கிறார். மேலும் ஆனவன் முதலிய சொற்கள் எழுவாய் உருபு எனப் பெயர் பெறாவிடின் பண்டுதொட்டே வழக்கத்தில் இருக்கும் சொற்களேயாம். அதனால் அவை ஏற்றுக்கொள்ளத்தக்கனவென்றும் அதற்கான காரணத்தையும் கூறுகிறார்.

*கடிசொல் இல்லை காலத்துப்படினே (தொல். 935)*

*பழையன காதலும் புதியன புகுதலும்*
*வழுவல பால வகையினானே (நன்.462)*

மேற்கண்ட நூற்பாக்களின் வழியே புதிய சொற்களைப் படைத்துக் கோடாலும் ஏற்புடைத்தாகின்றது என்கிறார். இலக்கணக்கொத்து ஆசிரியர், வடமொழியில் எழுவாய் உருபு இருப்பது கொண்டு தமிழிலும் வடமொழி இலக்கணம் கலந்து வருதலின் தமிழுக்கும் எழுவாய் உருபு கொள்ளுதலும் அமையும் எனச் சுவாமிநாத தேசிகர் கூறுகிறார். மேலும் வடமொழியில் எழுவாய்க்கு ஒருமை, இருமை, பன்மை என்று மூவகை உருபுகள் உள்ளன என்று கூறி இவ்வாசிரியர் பலர் பதங்களைத் தொகுத்துக் கூறுவாரன்றி முடிந்த முடிவாகக் கூறவில்லை.

**துணை செய்த நூல்கள்**


1. அகத்தியலிங்கம்.ச. & பால சுப்பிரமணியன்.க. (பதி.ஆ) இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், அண்ணாமலை நகர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974

2. அருள்ராஜ்.வே.சா. & ஈசுவரபிள்ளை.த அதங்கோடு நியூ விஷன் வெளியீட்டகம், தஞ்சாவூர், 2000.

3. மீனாட்சி.கு பாணினி அஷ்டாத்யாயி தமிழாக்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.

# சங்ககால ஆடற்கலைஞர்கள்

***செல்வி. மைதிலி அருளையா,***
*முதுநிலை விரிவுரையாளர்,*
*நடனத்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,*
*இலங்கை.*

**ச**ங்ககாலம் கி.மு. நான்காம் நூற்றாண்டு முதல் கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையுள்ள கால இடைவெளியைக் கொண்டதாகும்.[1] இந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் வாழ்வியலை அறிந்து கொள்வதற்கு இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், அயல்நாட்டார் குறிப்புக்கள், அகழ்வாய்வில் கிடைத்த அரும்பொருட்கள், காசுகள் ஆகியவை துணைசெய்கின்றன. இவற்றுள் சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டும், எட்டுத்தொகையுமே அக்காலத் தமிழர்தம் வாழ்க்கை முறைகளை அறிவதற்குப் பெரும் சான்றாதாரங்கள் ஆகின்றன. பாட்டும், தொகையுமான இவ்விலக்கியங்கள் இக்காலச் சமூகத்தில் கலைகள் பெற்றிருந்த வகிபாகத்தினை காட்டி நிற்கின்றன.

இயற்கையோடு இயைந்த சங்ககால மக்களின் வாழ்க்கையில் இசையும், ஆடலும் இரண்டறக் கலந்திருந்தன. சடங்குகளோடும், விழாக்களோடும் தொடர்புடையனவாகவும், இயற்கை உணர்வுகளின் வெளிப்பாடகவும் விளங்கிய இவ்விரு கலைகளும் தொழில் முறையாகவும், வழக்கில் இருந்தன. சங்ககால ஆடல்களை குழு ஆடல்கள், தனியார் ஆடல்கள் என்றும், அக ஆடல்கள், புற ஆடல்கள் என்றும், மக்கள் ஆடல்கள், தொழிற்கலைஞர் ஆடல்கள் என்றும் முவ்வேறு வகையாக வகைப்படுத்தலாம்.[2] பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் தமக்குள் ஆடிப்பாடிக் களித்திருந்த காட்சிகளைச் சித்தரித்துக் காட்டும் இலக்கியங்கள், தொழில் முறைக் கலைஞர்களாகப் பாணர், பாடினியர், கோடியர், வயிரியர், விறலியர் போன்றோரையும் குறிப்பிடத் தவறவில்லை. இவர்களுள் பாணரும், பாடினியரும் பாட்டில் வல்ல கலைஞர்களாய் இருந்தனர். பாணர்கள் யாழிசைப்பதில் திறமை கொண்டிருந்தனர். கோடியரும் வயரியருமான ஆடற்கலைஞர்கள் ஆடுவதில் மட்டும் வல்லவராய் இல்லாது கருவிகளை இயக்குவதிலும், மிட்டற்றிசை பாடுவதிலும் திறமை கொண்டவர்களாக விளங்கினர். விறலியர் என்றழைக்கப்படும் இவர்தம் பெண்டிர் பல்கலை வல்லுனர்களாய் திகழ்ந்தனர்.

**கோடியர்:**

பொருநரென்றும் அறியப்பட்ட கோடியர் ஓரிடத்துத் தங்காது ஊர் ஊராய்ச் சென்று கலைநிகழ்ச்சிகள் நடத்தி வாழ்க்கை வளர்த்த கலைஞர்கள் ஆவார்கள். சங்கப் பாடல்கள் கோடியரைப் பல் ஊர்பெயர்வனராகவும், சுரம், சொல் கோடியராகவும் குறிப்பிடுகின்றன. பெரும் சுற்றத்தோடு இவர்கள் விளங்கியதால் இரும்பேர் ஒக்கல் கோடியர் என்றழைக்கப்பட்டனர். பல்வேறு இசைக்கருவிகளை வாசிக்கும் ஆற்றல் பெற்றிருந்த இக்குழுவினர், அக்கருவிகளை எல்லாம் பெரிய பையொன்றில் இட்டு ஒன்றுசேரக்கட்டித் தூக்கிச் சென்றமையால், கலப்பையர் என்றழைக்கப்பட்டனர் என்பதை

“தலைப்புணர்த்து அசைத்த பல்தொகைக் கலப்பையர்[3] ” எனவரும் அகநானூற்றுப் பாடலடி விளக்கி நிற்கின்றது.

கோடியரது கலப்பையில் முழவு, ஆகுளி, கஞ்சதாளம், கொம்பு, நெடுவங்கியம், குறுந்தூம்பு, குழல், தட்டை, எல்லரி, பதலை முதலிய இசைக்கருவிகள் இருந்தன. அதனால் பல்லியக் கோடியர் என்றும், இவர்கள் அழைக்கப்பட்டனர். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் ஏழ் நரம்பிற்கும் உரிமை உடையவர்களாகிய கோடியர் பல்லிசைக் கலைஞர்களாக விளங்கினாலும் குறிப்பாகப் பறையிலும், குழலிலும் மிகுந்த திறமை கொண்டிருந்தனர். கொடும்பறைக் கோடியர், கடும்பறைக் கோடியர் என்று அழைக்கப்பட்ட இவர்கள், பிறர் உள்ளக் கருத்துக்களைக் குறிப்பால் அறியும் வல்லமை கொண்டிருந்தமையால், ஊடல் தீர்க்கும் வாயில்களாகவும் செயற்பட்டனர் என அறிந்து கொள்ளலாம்.[4]

வள்ளல்களிடம் சென்று ஆடிப்பாடிப் பெற்றுக் கொள்ளும் பரிசுப் பொருட்களைச் சேமிக்காது சுற்றத்தோடு உண்டு மகிழ்வதால், ஊர் ஊராகச் சென்று மீண்டும் மீண்டும் பொருளீட்ட வேண்டிய தேவை இக்கலைஞர்களுக்கு இருந்தது. இவர்கள் ஒவ்வோர் ஊருக்கும் செல்லும்போதும் வெயில் துன்பம்தீர மரத்தடியில் உட்கார்ந்து பாடல்களைப் பாடி இசைக்கூட்டி மகிழ்ந்தனர். இதனை,

*“பார்வை வேட்டுவன் படுவலை வெரீஇ*
*நெடுங்கால் கணந்துள் அம் புலம்பு கொள் தெள் விளி*
*சுரம் சொல் கோடியர் கதுமென இசைக்கும்*
*நரம்பொடு கொள்ளும் சுத்தத்து ஆங்கள்”* [5]

எனவரும் நற்றிணைப் பாடலடிகள் விளக்கி நிற்கின்றன.

ஊர்களைச் சென்றடைந்ததும் பறை ஒலிக்க வங்கியங்களின் ஒலியோடு முழவின் ஒலியும் பொருந்தி ஒலிக்குமாறு தாளம் அமைத்து ஆடல்களை நிகழ்த்தினர். ஆடல் தொடங்குவதற்கு முன்னர் களத்தில் அரிய பூக்களைத் தூவித் தெய்வம் பரவும் வழக்கமும் இவர்களிடத்தே காணப்பட்டது.

**வயிரியர்:**

தொழிலால் ஆடற்கலைஞர்களேயான வயிரியர் விழாக்களம், ஊர்மன்றுகள், அரசசபை எனப் பல இடங்களில் ஆடல் நிகழ்த்தினர். தம்மால் இசைக்கப்பட்ட இசைக்கருவிகளையெல்லாம் விழா முடிந்தவுடன் பையிலிட்டுக்கட்டி கழையில் தொங்கவிட்டு எடுத்துச் சென்றமையால் இவர்களும் “கலப்பையர்”[6] என்றே அழைக்கப்பட்டனர்.

வயிரியர் ஊர்கள் தோறும் சென்று மன்றங்களை அடைந்து தம் வரவைத் தெரியப்படுத்தும் வகையில், இசைக்கருவிகளில் இசை எழுப்பினர், பின்னர் தெருக்களில் உள்ள வீடுகளின் புறத்தே நின்று பாடி, ஆடி, உணவும், பொருளும் பெற்றனர். அவர்கள் இசைக்கும் முழவை முதுகின் பின்னே கட்டித் தூக்கியபடி பயணப்படுவதுண்டு.[7]

*அன்னி குறுக்கைப் பறந்தலை நிதியன்*
*தொல்நிலை முழுமுதல் துமியப் பண்ணி*
*புன்னை குறைத்த ஞான்றை வயிரியர்*
*இன்னி இசை ஆர்ப்பினும் பெரிதே, யானே.*[8]

எனவரும் அகநானூற்றுப் பாடலடிகளின் மூலம் ஊர்மன்றுகளில் மட்டுமின்றி போர்களத்திற்கும் சென்று பாடியாடும் வழக்கம் வயிரியரிடம் காணப்பட்டது என்பதை அறிந்து கொள்ளலாம். குறுக்கைப் போர்க்களத்தில் நிதியனின் தொன்மரமான புன்னையை அள்ளி வெட்டியபோது வயிரியர் இன்னிசை எழுப்பி வாழ்த்தினர். அரசர்கள் முன் முழுவிசைத்து ஆடிப்பாடி கடும்பசி நீங்க உணவு பெற்று, பொன்செய் புனையிழைகளும் பெற்ற இவ்வயிரியர் குற்றமற்ற நாவினையுடைய கலைஞர்களாய் வாழ்ந்தனர்.

**விறலியர்:**

மெய்ப்பாடுகள் தோன்றுமாறு விறல்பட ஆடியதால் விறலியர் என்றும், விழாக்காலங்களில் ஆடியதால் ஆடுகள் மகளிர் என்றும், ஆடுகளப் பாவையர் என்றும் அழைக்கபட்டனர். கோடியர், கண்ணுளர், பாணர் குழுக்களுடன் இணைத்துப் பேசப்படும் விறலியர் அவர்தம் பெண்டிராவர். ஆடலில் சிறந்த விறலியர் அழகிலும் சிறந்து விளங்கினர். கின்னரத்தை வெல்லும் குரல்வளம் பெற்றிருந்த விறலியர் பல்வகைப் பண்களைப் பாடவும், பல்வேறு இசைக்கருவிகளை இயக்கவும், வல்லமை பெற்றிருந்தனர். “முறையின் ஆடிய”[9] என விறலியர் ஆடல் விதந்து பேசப்படுவதால் அவர்கள் ஆடலை முறைப்படி பயின்று, முறைப்படி நிகழ்த்தினர் என்பதை அறிந்து கொள்ளலாம். இவர்களின் ஆடலுக்கு முழவு, யாழ், குழல், தாளம் எனப் பல்வேறு வாத்தியங்களும் இசை தந்தன. முழவு வாசித்தவர் விறலியர் ஆடும்போது அவர்களுக்குப் பின்னே நின்று வாசித்தனர். ஊர்விட்டு, ஊர்செல்லும்போது தம்மைச் சேர்ந்த ஆடவரை முன்செல்லவிட்டுத் தாம் பின்னே செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.[10]

விறலியர் சிலர் அரண்மனைகளில் தங்கி இருந்து ஆடல் நிகழ்த்தினர். இவர்கள்

அரண்மனைக்கூடங்களில் ஆடி விருந்தினர்களை மகிழ்வித்தனர். இவர்களது ஆடல்கள் சீறியாழின் இன்னிசைக்கேற்ப தாளத்தோடு இடம் பெற்றன. அரசர்கள் பலர்கூடி பந்தலின் கீழ் அமர்ந்திருக்க விறலியர் பாடி ஆடினர். இப்பந்தலின் மேற்பகுதி நெய்தல் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அம்மாலைகளில் நெய்தலோடு நறவம் பூக்களும், புன்னைப் பூக்களும் கலந்திருந்தமையால் பந்தல் மணம் வீசிக்கொண்டு இருந்தது. இத்தகு மணம்வீசும் பந்தல்களில் அரசர் வீரப்புகழ்பாடி விறலியர் ஆடினர்.[11]

விழாக்களம், அரண்மனை அரங்குகள் மட்டுமின்றி மலையுச்சிகளிலும், கொடிகள் அசையும் தெருக்களிலும் விறலியர் ஆடி மகிழ்வித்தனர். பகல் வேளைகளில் மட்டமல்லாது இரவு வேளைகளிலும் ஆடல்களை நிகழ்த்தினர். பழமையான மாளிகைகளையுடைய ஊர்களில் எல்லாம் ஆடிய விறலியர் தம்நாட்டு மன்னரின் புகழைப் பாடல்வழி பரவிக் களிப்புற்றனர். விறலியர் பின்னணி இசைக்கேற்ப தனித்தும் குழுவாகவும் அடிபெயர்ந்து தோளசைத்து ஆடியதையும், அவர்தம் ஆடல்கள் தாளம் தவறாமல் இடம் பெற்றதையும்[12] அறிந்து கொள்ள முடிகின்றது.

**கண்ணுளர் கூத்தர்:**

கோடியர், வயிரியர், விறலியர் ஆகியோருடன் கண்ணுளர் கூத்தர் முதலான ஆடற்கலைஞர்களும் இடம்பெற்றுள்ளனர். பதிற்றுப்பத்தும், மலைபடுகடாமும், கண்ணுளர் பற்றிய தரவுகளைத் தருகின்றன. மலைபடுகடாம் இவர்களை கோடியர் போலவே கலப்பையராகவும், விறலியரோடு இணைந்து கூட்டமாய்ச் சென்று ஆடிப்பாடி வாழ்க்கை நடத்தியவராகவும் காட்டுகிறது. தொல்காப்பியத்தில் ஊடல் தீர்க்கும் வாயில்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்படும் கூத்தர்கள் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் அதிகம் கூறப்படவில்லை[13] தாமரைப் பூம்போது சிதைந்து விழுமாறு கூத்தர்கள் ஆடுகளத்தில் ஆடிய தகவல் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன[14].

**முடிவுரை:**

சங்க காலத்தில் ஐவகை நிலத்தும் இடம்பெற்றன. விழாக்கள், வெற்றிகள், உணர்வு வெளிப்பாடுகள், சடங்குகள் எனப் பல்வேறு காரணங்கள் குறித்து இவ்வாடல்கள் நிகழ்த்தப்பட்டன.

இவ்வாடல்களை நிகழ்த்திய கலைஞர்களில் கோடியர், வயிரியர், விறலியர் கண்ணுளர், கூத்தர் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். இத்தொழில் முறைக் கலைஞர்களின் வாழ்க்கை வறுமையின்பிடியில் இருந்ததை ஆற்றுப்படை நூல்கள் விளக்குகின்றன. அதனாலேயே அவர்கள் ஓரிடத்தில் நிலையாக வாழாது இடம்விட்டு இடம்பெயர்ந்து பல்லூர்களுக்கும் சென்று ஆடல் நிகழ்ச்சிகளை நிகழ்த்திப் பசிநீங்கி வாழ்ந்தனர். இவர்களிடையே வளமான வாழ்வு பெற்ற கலைஞர்களும் இருந்தார்கள். அவர்கள் அரண்மனைக் கலைஞர்களாய்ப் பேறுபெற்றுத் திழைத்தனர். தங்களைப் போன்ற கலைஞர்களைக் காணும்போது வள்ளல்கள் இருக்குமிடம் சுட்டி அவர்தம் துன்பம் களைந்தனர். வறுமையில் வாடியபோதும், தொழில்முறைக் கலைஞர்களுக்குச் சமூகத்தில் பெருமதிப்பிருந்தது. மன்னர்களுக்குச் செவியறிவுறுத்தும் உயர் நிலையையும் இக்கலைஞர்கள் பெற்றிருந்தனர். அதேவேளை மக்களின் இல்லற வாழ்விலும் அவர்கள் பங்கேற்றனர். இக்கலைஞர்கள் வறுமையிலும் செம்மையுற வாழ்ந்ததையே பல பாடல்கள் தெரிவிக்கின்றன. முல்லை சார்ந்த கற்பின் விறலியர் என்று சொல்லுமளவிற்கு, இக் கலைஞர்களின் வாழ்க்கை ஒழுக்கம் நிறைந்து விளங்கியது எனலாம்.

**உசாத்துணை நூல்கள்:**


1. இரா. பவுன்துரை, தமிழகப் பாறை ஓவியங்கள், சேகர் பதிப்பகம், சென்னை, 1986, பக்.120, 155.

2. இரா.கலைக்கோவன், தலைக்கோல், சேகர் பதிப்பகம், சென்னை, 2004, ப.133.

3. அகநானூறு 301 : 22

4. பொருநராற்றுப்படை 57

5. நற்றிணை 212 - 1 - 4

6. பதிற்றுப்பத்து 23 : 1 - 4

7. அகநானூறு 155 : 13 - 15

8. அகநானூறு 45 : 9 - 12

9. நற்றிணை 360 : 1 - 2

10. அகநானூறு 352 : 4 - 6; புறநானூறு 135 : 4

11. பதிற்றுப்பத்து 51 : 16 - 22

12. பரிபாடல் 21 : 19 - 20

13. கலைக்கோவன். இரா, மு.சு.நூல் ப - 142

14. புறநானூறு 28 : 13 - 14

# “சங்க இலக்கியமும், தேம்பாவணியும் புதலியியல் ஒப்பீடு” (சண்பக மலரும் - கன்னி மரியாளும்)

*முனைவர்*
***பா.ஆரோக்கியதாஸ்***
*இணைப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறைத் தலைவர்*
*போப் ஜான் பால் II*
*கல்வியியல் கல்லூரி*
*புதுச்சேரி - 605 010.*

“சங்க இலக்கியமும், தேம்பாவணியும் புதலியியல் ஒப்பீடு” என்னும் இவ்வாய்வுக் கட்டுரையில், இயேசு கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பு அல்லது மரியாவின் கன்னிமையை மையப்படுத்தி அமைகிறது. “இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் (ஏசாயா. 7 : 14)” என்ற வேத வாக்கின்படி, மரியாவின் கன்னிமையை, செண்பக மலரோடு ஒப்புமைப்படுத்தப்படுகிறது. இவ்வாய்வுக் கட்டுரையில் செண்பகம் என்னும் புதற் செடியைப் பற்றிய சங்க இலக்கியப் பதிவுகள், உவமைகள், அதே போல் தேம்பாவணியில் செண்பகம் பற்றிய பதிவுகள், உவமைகள், செண்பக மலருக்கும், அன்னை மரியாளுக்கும் உள்ள ஒப்பீடு, தாவர அறிவியல், வேர் சொல் குறித்த பெயராய்வு, மற்றும் கன்னி மரியாளின் கன்னிமையின் சிறப்பு போன்றவை ஆராயப்பட்டுள்ளன.

“மிக எழிலார்ந்த வண்ணமும், வடிவும், நறுமணமும் மிக்க, செண்பக மலரை வண்டுகள் நெருங்குவதில்லை” என்ற அறிவியலின் வியப்பான உண்மையை தேம்பாவணி (8:56) – இன் மூலமாகக் குறிப்பிடும் வீரமாமுனிவர்,

செண்பக மலரை, ஓர் உண்மையின் குறியீடாக உலகினருக்கு முன் வைக்கிறார்.

வண்டு தொடாத மலர் ஒன்று இருக்க முடியுமா?

ஆண் துணை இல்லாமல் ஒரு பெண் கருத்தரிக்க முடியுமா?

முடியும் என்று விவிலியத் திருநூல் கன்னி மரியாளின் தூய்மைக்குச் சான்று பகர்வதை காண முடிகிறது.

இறைவனால் கூடாதது எதுவும் இல்லை
அவரது படைப்புகளில்
விரியும் உண்டு!

விதி விலக்கும் உண்டு! என்ற மிக நுண்ணிய செய்தியை, அறிவியலின் உண்மை நிகழ்வதோடு ஒப்பிடுகிறார்.

சங்க இலக்கியங்களில் இதனை சண்பகம், பெருந்தண் சண்பகம் என்றும் தேம்பாவணி இலக்கியத்தில் செண்பகம், சண்பகம், அரிய மலர் என்றும் வீரமாமுனிவர் குறிப்பிடுகின்றார். தமிழ் மொழியில் இதன் வழக்குப் பெயர்: செண்பகம்; இதன் தாவரவியல் பெயர் : Michelia Champaca, L. என்பதாகும்.

### இலக்கிய பதிவுகள்

சங்க இலக்கிங்களிலும், தேம்பாவணி இலக்கியத்திலும், சண்பகத்தைப் பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன. அவையாவன: ஆறு சூழ்ந்த கரை மேலே வளரக்கூடிய இம்மரம், பூத்து, குளிர்ந்த நிழலைத் தருவது; இளவேனிற் காலத்தில் பூக்கும் இம்மலர், அலர்ந்த போழ்து, போர் சேவலின் காலில் உள்ள நகங்களைப் போன்றிருக்கும். வெண்மையும், மஞ்சளும் கலந்த எழிலார்ந்த வண்ணமும், சிறந்த நறுமணமும் கொண்ட இம்மலரை வண்டுகள் நெருங்குவதில்லை என்பதை தேம்பாவணி: நாட்டுப் படலம்: 38, 61; ஐயம் நீங்கு படலம்: 6, 56; மகவு அருள் படலம்: 61; காசை சேர் படலம்: 8; கருணையன் மாட்சிப் படலம்:18; வேதக் கெழுமைப் படலம்: 98; மீட்சிப் படலம்: 61, 126; புரோகிதப் படலம்: 11; மகன் நேர்ந்த படலம் : 14; உத்தானப் படலம்:2; போன்றவற்றிலும், சங்க இலக்கியங்களில்: பரி:11:18, 12:77; குறிஞ்.75; கலித்.150:21; போன்றவற்றிலும் காப்பியங்களில்: சீவக.சிந். 1650, 2349; சிலம்பு: 8-45; மணிமேகலை: 3-165 என்னும் இலக்கியச் சான்றுகள் கொண்டு அறியலாம்.

இப் பூ, பூசைக்குரிய பூ வகைகளில் ஒன்று; பெரியாழ்வாரும் தம் இறைப் பிள்ளையைச் ''சம்பகப் பூ சூட்ட வாராய்'' என்று அழைத்தார்.

வண்டுண்ணா மலர்களில் சண்பகத்திற்கே முதலிடம் உண்டு 'வண்டு விடு தூதில்' 'கச்சியப்ப முனிவரும்' வண்டைப் பார்த்து ''கானிவர் சண்பகமும் கால் உழக்கா'' என்றார் (வண்டு விடு தூது : கன்னி. 385)

### அறிவியல் பதிவுகள்

செண்பகம் ஓர் அழகிய சிறு மரம். உயரமான குளிர்ந்த மலைப் பகுதியில் அடர்ந்து, கிளைத்து வளர்ந்து, எப்போதும் பசுமையாக இருக்கும். மிகப் பெரிய நீண்டு அகன்ற பசுமையான தனித்த தனி இலைகளைக் கொண்டது. இதன் தனிமலர் மிகப்பெரியது. 10 - 12 செ.மீ நீளமும், 8-10 செ.மீ அகலமுமானது.

புல்லிவட்டம் 3, அல்லியொட்டியவை, அல்லி வட்டம் 6, மஞ்சள் நிறமானவை. இரு அடுக்கானவை. இதழ்கள் பிரிந்தவை. மகரந்த வட்டம் பல தட்டையான தாள்களையுடையது. தாதுப்பை ஒட்டியிருக்கும். உட்புறமாகத் தாது உருக்கும். சூலக அறைகள், நீண்ட நடுத்தண்டில் நேரடியாக ஒட்டியிருக்கும். சூல்முடி உள் வளைந்திருக்கும். தொங்கும் இரு சூல்கள், ஒவ்வொரு அறையிலும் காணப்படும். ''காப்சூல்'' போன்ற வெடி கனி. நீண்ட மேற்புறம் வெடிப்பவை. விதை நுண் இழையினால் சூலக அறையின் மேலிருந்து தொங்கும். விதையுறை சதைப்பற்றுடையது. எண்ணெய் போன்ற 'ஆல்புமின்' கொண்டது. இதன் மணமுள்ள மலருக்காகத் தோட்டங்களில் இது வளர்க்கப்படுகிறது. (கு.சீநுவாசன், சங்க இலக்கியத் தாவரங்கள். பக். 8-9)

### வேர் சொல் ஆய்வு

இச் சொல்லின் வளர்ச்சி வரலாற்றை வேர்ச் சொல் ஆய்வு அடிப்படையில் கண்டு விளக்கும். சொல்லாய்வு அறிஞர்களின் கருத்துக்களைக் கீழ்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

### செண்பகம்

செம் > சம் சம்பகம் > (செ.சொ.பி.பே; மூன்றாம் மடலம் முதற்பாகம். பக். 89)

சண்பகம்
சண்பகம்-இளஞ்சிப்பான பூ - பூவையுடைய மரம்
செம்மை - சிவப்பு
செம்(மை) > செம்பு > செம்பகம்
செம்பகம் > செண்பகம் > சண்பகம்

(பெருந்தண் சண்பகம் = பெருமையும், குளிர்ச்சியும் பொருந்திய செண்பக மலர்)

சண்பகம் - செந்நிறமுடைய பூ, அப்பூவையுடைய மரம் (நேர்காணல் - இறைக்குருவன்)

### சண்பகம்

இதனின் மலர் அமைந்திருக்கும் தோற்றவகைப் பொருண்மையே, இக் 'சண்பகம்' என்னும் பெயரீட்டுக்கான காரணமாகும்.

உல் : பொருந்துதன் கருத்து வேர்

உல் = ஒல் > அல் > அன்
அன் > அண், அண்மை = அருகு (தொல்.எழுத். 210)

அண்ணுதல் = அணுகுதல்
அண்புதல் = அணுகுதல்
அண்புதல் = அணுகுதல்
அண்முதல் = அணுதல்
அண்பு = அணுக்கம்
அண்பு = சண்பு = செறிவு, ஒன்றுகை

இவ்விடத்து வரும் 'சண்பு' என்பது இப்பூவடியிலுள்ள புறவிதழ் (அடிப்) பகுதியின் புல்லிவட்டத் தட்டு ஒன்றியிருக்கும் தகைமையைக் குறித்தெழுந்த கருத்துடையதாகும்.

வய் = பிரிவு
வய் > பய் > பய்கு > பகு
பகு + அல் > பகல் > பிரிவு
படு + அம் > பகம் = உகிர் போன்ற கூர்மையுடன் பகுப்பு பகுப்பாகப் பிரிவெய்திய மலர்
சண்பு + பகம் > சண்பகம் = சண்பகம்

**பெருந்தண் சண்பகம்**

முன்னீடாகக் குறிப்பிட்ட சண்பகம் ஒரு வகை

இப்பூவின் அளவு மிகப் பெரியது என்னும் அடிப்படையிலேயே புதலியலில் "Magnolia grandiflora, Lina" எனப் பெயரீடு பெற்றுள்ளன நன்கு கவனிக்கத்தக்கது.

"பெருந்தண் சண்பக மலர்" தெள்ளிய தூய வெண்மையையுடையது. 'தண்மை' என்னும் குளிர்ச்சிப் பொருண்மையே இச்சண்பக மலர் மலரும் இடத் தகைமையால் சுட்டப்பெற்றதாகும். மலர் மிகப் பெரியது. பத்து, பன்னிரண்டு விற்கிடை (குறுக்கு) அகலத்திற்குப் பாரிதாக மலர்ந்து மணப்பது. பூக்கள் மஞ்சள் நிறமானவை. மிக அழகுடையவை. நறுமணம் நிறைந்தவை. தனிமலர், இம்மரம் நீலகிரியில் அதிகமாகச் செழித்து வளர்கிறது. தாவரவியலில் இச் செண்பக மலர் மரம் Michelia nilagirica என்றவாறு பெயரீடு பெற்றுள்ளது. (ஆய்வறிஞர் பா.அருளி, மரம், செடி, கொடி வேர் – அச்சில்)

மேற்கண்ட சங்க இலக்கியப் பதிவுகளையும், அறிவியல் நூல்களால் அறியலாகும், இம்மரத்துப் பூவின் தோற்ற அமைப்பையும், சொல்லாய்வு அறிஞர்களின் கருத்துக்களையும் ஒப்பு நோக்கும் போது 'சண்பகம்' என்னும் சொல் "புல்லி வட்டத் தட்டு ஒன்றி, அல்லி வட்டம் கோழியின் உகிர் (நகம்) போன்றது கூர்மையுடன் பகுப்பு பகுப்பாகப் பிரிவெய்திய மலர்" என்னும் கருத்து அடிப்படையிலேயே பயின்று வந்துள்ளதை அறியமுடிகிறது.

இம்மலரின் தோற்ற அமைப்பே, இச்சண்பக மரத்தின் பெயரீட்டுக்குரிய காரணக் கருவாய் அமைந்துள்ளமையை அறியலாம்.

அளவிலாக் கருணையும், அன்பும் கொண்ட இறைவன், உலக மக்களை மீட்க, ஆவல் கொண்டு, காலம் நிறைவுற்ற போது நாம் இறைவனின் பிள்ளைகளாகும்படி, திருச்சட்டத்திற்கு கீழ்ப்படிந்தவர்களை, மீட்டுக் கொள்வதற்காக, கடவுள் தம் மகனை பெண்ணிடம் மறந்தவராகவும், திருச்சட்டத்திற்கு கீழ்ப்படிந்தவராகவும் அனுப்பினார் (கலாத். 4 : 4)

வானவர் தூது சொன்ன போது "கன்னி மரி" தன் உடலிலும், உள்ளத்திலும் இறைவனின் வார்த்தையை ஏற்றார். இதன் காரணமாக தந்தைக்கு மிகவும் உகந்த மகளாகவும், பரிசுத்த ஆவியின் திருக்கோயிலாகவும் திகழ்ந்தார்.

தாவீதின் குலத்தில் வந்த இயேசு, யோசோப்புவின் மகன் அல்லர், மரியாவின் மகன், தூய ஆவியின் ஆற்றலால் பிறந்தவர் என்பது தான் மத்தேயுவின் விளக்கம். இந்தக் கருத்து நிலை மிகவும் சிக்கலானது, பல தவறான வகைகளில் மத்தேயு, தெளிவாகவும், ஆணித்தரமாகவும் இந்தப் பகுதியை வரையறுக்கிறார்.

அவருடைய தாய் மரியாவுக்கும், யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் கூடி வாழும்முன் மரியா கருவுற்றிருந்தது தெரிய வந்தது. அவர் தூய ஆவியால் கருவுற்றிருந்தார் (மத். 1 : 18)

திருமணத்திற்கு ஓராண்டுக்கு முன் மண ஒப்பந்தம் நடத்துவது யூதர்களின் வழக்கம். திருமணம் செய்து கொள்ள விரும்புகிறவர், பெண்ணின் தந்தையை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அணுகி, மண ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

பெண் நேரடியாக இந்த ஒப்பந்தம் செய்வதில்லை. அவரது தந்தையோ அல்லது சகோதரனோ இதை நிறைவேற்றுவார். மண ஒப்பந்தமான ஒரு பெண் சட்டப்படி ஒருவருக்கு மனைவியாகிறார். அவர் வேறு ஒருவரை மணக்க வேண்டுமெனில், அவர் மணமுறிவுச் சீட்டுக் கொள்ள வேண்டும்.

மண ஒப்பந்தமான பெண் குறைந்தது, ஓராண்டு தன் தந்தைக்குக் கட்டுப்பட்டு, அவரது பராமரிப்பால் இருப்பர். ஒப்பந்த காலம் முடிந்ததும், மணமகள் ஊர்வலமாக கணவன் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படுவர். அப்போது திருமணச் சடங்குகள் நடைபெறும். அதன் பின் அவர்கள் கணவனும், மனைவியுமாக வாழ்வார்கள்.

மரியாவுக்கும், கோசேப்புக்கும் மண ஒப்பந்தம் ஆகியிருந்தது. அவர்கள் கூடி வாழும் இரண்டாம் நிலைக்குச் செல்லவில்லை. கணவன் வீட்டிற்குச் செல்லும் வரை மணப்பெண் கன்னியாகவே இருக்க வேண்டும் என்ற நியதி யூதர்களிடம் இருந்தது.

மரியாவின் கன்னிமைப் பற்றி நற்செய்தியாளர்களான மத்தேயுவும், லூக்காவும் ஐயமின்றிக் கூறுவதை நாம் நற்செய்தியில் காண்கிறோம்.

மத்தேயு நற்செய்தியில் வான தூதர் யோசேப்புக்குத் தோன்றும் முதல் காட்சி (மத். 1 : 18 – 25) இயேசு கன்னிப்பிறப்பு அல்லது மரியாவின் கன்னிமைப் பற்றிய உண்மையை உணர்த்துவதாகத் தரப்பட்ட செய்தியாக அமைகிறது.

இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார் (மத். 1 : 22) இவ்வுண்மையை உறுதி செய்வதற்கும், அதே போன்று அவர்கள் கூடி வாழும் முன் மரியா கருவுற்றிருந்தது தெரிய வந்தது. அவர் தூய ஆவியினால் கருவுற்றிருந்தார் (மத். 1 : 18)

லூக்கா நற்செய்தியிலும் மரியாவின் கன்னிமை ஆழந்த அழுத்தம்பெறுகிறது என்பது கண்கூடு. இயேசுவின் பிறப்பின் முன்னறிவிப்பு நிகழ்ச்சியே அழுத்தமாக இவ்வுண்மையைப் பறை சாற்றுகிறது.

இது எப்படி நிகழும்? நான் கன்னியாயிற்றே (லூக்கா. 1 : 34) என்ற மரியாவின் வினாவும், தூய ஆவி உன்மீது வரும், உன்னதக் கடவுளின் வல்லமை உன்மேல் நிகலிடும், ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது, அக்குழந்தை இறைமகன் எனப்படும் (லூக். 1 : 35) என்ற வான தூதரின் பதிலும், லூக்காவின் நற்செய்தியில் இயேசுவின் கன்னிபிறப்பு அல்லது மரியாவின் கன்னிமைக்கு அழுத்தமான சான்றுகள்.

யோசோப்புடன் திருமணத்திற்கு நிச்சியக்கப்பட்டிருந்த மரியாளோ தன் கணவனை அறியாதக் கன்னிப் பருவத்தில், தேவனின் சித்தத்தால் பரிசுத்தரால் கருவுற்றான்.

“கன்னி” என்பது ஒரு பெண் தாம்பத்திய வாழ்க்கைக்குத் தகுதியான வயதை அடையாத நிலையில் உள்ளவள் என்று பொருள்.

திருமணமான அல்லது திருமணமாகாத இளம் பெண்ணைக் குறிக்கின்ற “ஆல்மா” என்ற வார்த்தையைத் தான் ஏசாயா பயன்படுத்துகிறார்.

ஆனால் எழுபது பேர் எரிரேய மூலத்திலிருந்து கிரேக்க மொழியில் (கி.மு. 2 – ஆம் நூற்றாண்டு) பழைய ஏற்பாட்டை தயாரிக்கும் போது “ஆல்மா” என்ற எபிரேய சொல்லுக்குப் பதில் பார்த்தெனோஸ்” என்ற கிரேக்க சொல்லைக் பயன்படுத்தினார்.

இந்த “பார்த்தெனோஸ்” என்ற சொல் கன்னிப் பெண்ணைத் தான் குறிக்கும். இவ்விதக் “கன்னி” பருவத்தில் தான் புனித யோசோப்புக்கு நிச்சயிக்கப்பட்ட “கன்னி” மரியாள் யோசேப்புடன் கூடி வாழுமுன், பரிசுத்த ஆவியினால், தேவனைத் தன் உதிரத்தில் கருத்தளித்தாள்.

இதை ஏசாயா தீர்க்கதரிசி முன்னோடியாக, “இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்பது பேரிடுவாள்” என்றும் (ஏசாயா. 7 : 14), இதனை வலியுறுத்தி “வறண்ட நிலத்தில் (விளைச்சலுக்கு தகுதியற்ற) இருக்கும் வேர் போலத் துளிர்த்தார்; இளந்தளிரைப் போல் அவர் வளர்ந்தார் என்றும் கூறியுள்ளார் (ஏசையா. 5 : 3)

“மரியா – கன்னி” என்ற நம்பிக்கை, “மரியா – எப்போதும் கன்னி” அல்லது “என்றும் கன்னி” என்ற நம்பிக்கையாக வளர்ந்துள்ளதைக் காண்கிறோம்.

கி.பி. 553 ஆம் ஆண்டில் இரண்டாம் கான்ஸ்தான்திநோபின் திருச்சங்கம் மரியாவை, இயேசுவின் அன்னையை “எப்பொழுதும் கன்னி” என்று அறிவித்தது.

இதனை கி.பி. 649 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாம் “லாத்தரன்” திருச்சங்கம் உறுதி செய்தது. மரபை உற்று நோக்கும் போது “எப்பொழுதும் கன்னி” என்ற திருச்சபையின் கோட்பாடு, பல்வகையான

விளக்கங்களை உள்ளடக்கியிருந்தது. எப்பொழுதும் கன்னிகையான மரியா, முக்காலத்தும் ''கன்னி'' என்றழைக்கப்பட்டார்.

''முக்காலத்தும் கன்னி'' என்பதனை அன்றைய இறையியலாளர்கள், இயேசுவின் பிறப்பிற்கு முன்னும், இயேசு பிறப்பின் போதும், இயேசுவின் பிறப்பிற்குப்பிறகும் என்று விளக்கம் கொடுத்தார்கள்.

இயேசுவின் பிறப்பிற்கு முன் ''மரியா கன்னி'' என்பது புதிய ஏற்பாட்டு ஆதாரங்களுக்குட்பட்டது. இயேசுவின் பிறப்பிற்கு முற்பட்ட ''கன்னிமை'' என்பது ''ஆண் வித்தின்றி தூய ஆவியால்'' மரியா இயேசுவை கருத்தரித்தாள் – என்பதாகும்.

மரியாவின் கன்னிமை பாதிக்கப்படாத பிறப்பு என்று அம்புரோசும், மூடிய கதவுக்குள் சீடர்களுக்குத் தோன்றிய உயிர்த்த இயேசு போன்று அன்னையின் கருப்பை பாதிக்கப்படாமல் நிகழ்ந்த பிறப்பு என்று அகுஸ்தினாரும் விளக்கம் கொடுத்தார்.

மரியா ஓர் ஆணின், அதாவது அவர் கணவர் சூசையின் துணையின்றி, இறைவனுடைய வல்லமையால், கன்னிமையால் இயேசுவைக் கருவுற்று, ஈன்றெடுக்க முடியும் என்று வான தூதர் மரியாவுக்கு விளக்கமும், உறுதியும் – அளிக்கிறார்.

வான தூதரின் விளக்கம், அறிவுக்கு எட்டாததாகவும், ஏன் இயற்கைக்கு முரணானாகவும், தோன்றினாலும், கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை, என்ற வான தூதரின் கூற்றை, மரியா விசுவாசக் கீழ்ப்படிதலுடன் ஏற்று, நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு ஆகட்டும் (லூக். 1: 38) என்று கூறி, தந்தை இறைவனுடைய மீட்பின் திட்டத்திற்குத் தம்மை – முற்றிலுமாகக் கையளிக்கிறார்.

உலக மெய்மைக்குள் இருந்து செயலாற்றும் இறை சக்தி, மனித நடைமுறைகளுக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகளையும், நிகழ்த்தும் ஆற்றல் உடையது.
''கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை''

(1)மலடியாக இருந்த சாராளட தன் முதிர்வயதில் ஈசாகைப் பெற்றெடுத்தாள் (ஆதி. 21: 1–4)

(2) ''தான் கோர்த்திரத்தானாகிய மனுவேயின் மனைவி மலடியாய் இருந்தேன், அவள் தேவனின் வார்த்தைப்படி கருத்தாங்கி சாம்சனைப் பெற்றெடுத்தாள் (நீதிபதி. 13 : 1– 15, 24)

(3) எபிராயீம் கோத்திரத்தனான ஏல்கானாவின் மனைவி ''அன்னா'' ஓர் மலடி ஆண்டவரின் இரக்கத்தினால் அவள் சாமுவேலைப் பெற்றாள் (1 சாமு. 1: 1– 20)

(4) சூனாம் நகர் சீமாட்டி மலடியாய் இருந்தாள், தேவனின் வார்த்தை எலிசேயுவின் மூலம் வெளிப்பட அவர் ஓர் குமாரனைப் பெற்றாள் (2 அரசர். 4 : 8 – 17)

(5) மலடியாய் இருந்த எலிசபெத் தேவனின் அருளால் தனது முதில் வயதில் யோவான் ஸ்நானனை ஈன்றெடுத்தாள் (லூக். 1: 7; 11 : 16, 23 – 25, 57 – 58)

மலடியாய் இருந்த அவர்கள் தேவனின் சித்தத்தாலும், அருளாலும் கருவுற்றனர்.

பழைய ஏற்பாட்டில் கடவுளைச் சந்திப்போரின் கன்னிமைத் தூய்மை போற்றப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

(1) சீனாய் மலையில் மோசே இறைவனை சந்தித்தப் பிறகு (இணைச்சட்டம். 5 : 30 – 31) தன் மனைவி ஜிப்போராவின் உறவு கொள்வதை நிறுத்திக் கொண்டான்.

(2) இறைவாக்கினர் எரேமியத இறைவாக்குப் பணியின் அடையாளமாக மணத்துறவு மேற்கொண்டான் (எரோ. 16 : 1– 9)

(3) ஞானாகம நூல் புனித வாழ்வில் வாழ்ந்த அண்ணகர்களையும், ஆண்களின் உறவற்ற பெண்களையும் பாராட்டுகிறது.

(4) புதிய ஏற்பாட்டில் முன்னணியில் மணத்துறவு, வர இருக்கும் மறு உலக வாழ்வின் முன்னான்னமாகவும், முன் அடையாளமாகவும், இறையியல் நோக்கில் காணப்படுகிறது என்றால், மரியாவின் கன்னிமை மிகச்சிறந்த வரலாற்று அடையாளமாகவும், சான்றாகவும் அமைகிறது.

இந்நோக்கில் மரியாவின் ''கன்னிமை நடந்துள்ள இதைச் செயல்பாட்டின் சிறப்பு நிகழ்வாகும்.

புதிய ஏற்பாடு முன் வைக்கும் கருத்துப் பின்னணியில் 'கன்னிமை' நடந்துள்ள இதைச் செயல்பாட்டின் சிறப்பு நிகழ்வாகும்.

புதிய ஏற்பாடு முன்வைக்கும் கருத்துப் பின்னணியில் 'கன்னிமை' என்பது முழு அர்பணத்தின் அடையாளம்.

கன்னி, அன்னை என்று அழைக்கப்படும் திருச்சபை, தன் தலைமகனாம், கிறிஸ்துவுக்கு ஏற்ற கன்னியாக வாழ அழைக்கப்பட்டுள்ளது.

உடைபடா உள்ளம், முழு அர்ப்பணம், தூய்மை, ஒரே நோக்குடைமை ஆகியவை கன்னிமையைச் சுட்டிக் காட்டும் பண்புகள்,

இறைவன் நமது விசுவாசத்தின் மறைபொருள், அதை கணக்கு அடிப்படையிலும், அறிவியல் அடிப்படையிலும் விளக்கிக் கொள்ள முடியாது. அது கணக்கைக் கடந்தது, அறிவியலுக்கு அப்பாற்பட்டது.

இறைவன் மனிதனாகும் மாபெரும் மறை உண்மை வரலாற்று நிகழ்வாகக் கூடும் என்றால், அதோடு தொடர்புடைய இறைமகள் இயேசுவின் கன்னிப் பிறப்பும், மரியாவின் கன்னிமையும் நிகழக்கூடிய அடையாளங்களே!

*மனுஷரால் இது கூடாதது தான்*
*தேவனால் இது கூடாததல்ல,*
*தேவனாலே எல்லாம் கூடும் (மாற் .10 : 27)*

**துணை நூற்பட்டியல்**

தேநேயப் பாவாணர், ஞா.1985. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி. முதல் மடலம், முதற் தொகுதி.

இளஞ்சேரன், கோவை. 1982. இலக்கியம் ஒரு பூக்காடு. இராக் போர்ட்டு பப்ளிகேஷன், 1. மீரான் சாகிபு தெரு, சென்னை - 2.

சங்க இலக்கியம் (முதற்பதிப்பு). 1999. (தொகுதி 1 -15 வரை) வர்த்தமானன் பதிப்பகம்.

சீனிவாசன்.கு, 1987. சங்க இலக்கியத் தாவரங்கள், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வைரமுத்து கவிதைகள்

# வைரமுத்து கவிதைகள் வெளிப்படுத்தும் சமுதாய உணர்வுகள்

***மு. கவிதா,***
*பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை*
*பெரியார் பல்கலைக் கழகம்,*
*சேலம் – 11.*

மனித நாகரிகப் பண்பாடுகளைப் பாதுகாப்பதிலும், வளர்ப்பதிலும் எழுத்துக் கலையின் பங்கு அல்லது எழுத்தாளனின் பணி மகத்தானது. கண்ணுக்கு இனிய காட்சிகள் ஓவியக் கலைக்குப் பெருமை சேர்ப்பதுபோல், காதுக்கினிய ராகங்கள் இசைக் கலைக்குப் பெருமை சேர்ப்பதுபோல், சிந்தனைக்கு விருந்தாகும் இலக்கியங்கள் எழுத்துக் கலைக்குப் பெருமை சேர்க்கின்றன. மனிதன் சமுதாயத்துக்கு இலக்கியக் கருத்துக்கள் தொடர்புடையன. அந்த வகையில் கவிஞர் வைரமுத்துவின் கவிதைகளை நோக்கும்போது சமுதாயக் கருத்துக்களோடு பின்னிப் பிணைந்து காணப்படுகிறது.

மக்கள் கூடி வாழும் அமைப்பு ‘சமுதாயம்’ என்றழைக்கப்படுகிறது. தனி மனிதன் ‘சமுதாயம்’ என்ற கூட்டமைப்பு உருப்பெற அடித்தளம் அமைக்கின்றான். மனிதன் தன் நிலையை உயர்த்திக் கொள்ள சமுதாயம் என்ற மக்கள் கூட்டமைப்பில் தன்னை இணைத்துக் கொள்வது அவசியமாகிறது.

இலக்கியம் என்பது சமுதாயத்தைப் பிரதிபலித்துக்காட்டும் கண்ணாடி என்று கூறுவர். சமுதாய உணர்வுகளைப் புறக்கணித்துவிட்டு எந்தப் படைப்பும் தோன்ற முடியாது. எந்தப் படைப்பாளரும் சமுதாயத்தை விட்டு விலகி இருக்கவும் முடியாது. கவிஞர் வைரமுத்துவும் சமுதாயத்தில் நடக்கும் நிகழ்வுகளை தம் கவிதைகளில் சுட்டியுள்ளார். பெண்களின் நிலை, இளைஞர்கள், வேலையில்லாத் திண்டாட்டம், அரசியல் நிலை, கல்வி, வறுமை, பண்பாடு, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, கிராமப்புற மக்களின் நிலை, மனித நேயம், குழந்தைத் தொழிலாளர் நிலை ஆகியவை குறித்தும் தம் கவிதைகளில் பதிவு செய்துள்ளார். அவற்றில் சிலவற்றை இக்கட்டுரை வழி அறியலாம்.

**பெண்ணியம்**

தனிமனித சுதந்திரத்திலும், பெண்ணுரிமைப் போராட்டத்திலும் அதிக நாட்டம் கொண்ட பாரதி, பாரதிதாசன் போன்று கவிஞர் வைரமுத்துவும் தமது கவிதைகளில் பெண்மையைப் பற்றி கவிதை புனைந்துள்ளார்.

பெண் பெருமை மிகுந்தவள், பேணத்தக்கவள் என்றாலும் பெண்கள் கண் மூடித்தனமாகப் பொறுமையைக் கடைப்பிடிப்பதே பல நேரங்களில் அவர்களுக்குத் தீங்காக முடிகிறது. ஆண்கள் செய்யும் அக்கிரமங்களை அவ்வப்போதே தட்டிக் கேட்டால் இந்த நிலை ஏற்படாது என்று கண்ணகியின்

வாழ்க்கையை உதாரணமாக்கி அவளின் துன்ப நிலைக்கு அவளே காரணம் என்ற மகளிருக்கு அறிவுரை கூறுகிறார்.

*"கற்பொன்றில் மட்டும் கண்ணகியைப் போலிருங்கள்*
*மற்றவற்றில் அந்த மடமகளை மறந்திடுங்கள்"*
*(வைகறை மேகங்கள், ப.18)*

என கவிதை மூலம் எடுத்துக்காட்டியுள்ளார்.

**இளைஞர்கள்**

நாளை சமுதாயத்தையும், நாட்டையும் செம்மைப் படுத்துபவர்கள் அடுத்த தலைமுறையினர் என்றழைக்கப்படும் இளைஞர்கள் ஆவார்கள். பொறுப்பும், நாட்டுப்பற்றும் மிக்கவர்களாக நாட்டையும், வீட்டையும் காக்கும் ஒழுக்கம் மிக்கவர்களாக இளைஞர்கள் திகழ வேண்டும் என்று பெரியோர் விரும்புகின்றனர். எனவே, வைரமுத்துவும் இளைஞர்கள் தன்னம்பிக்கையோடும், பொறுப்புணர்வோடும் திகழ வேண்டும் என்பதை விளக்குகிறார்.

*"ஆயிரம் தட்டுதல்களுக்குத்*
*திறக்காத கதவும்*
*உன்*
*ஒரே மிதியில் திறந்து கொள்ளும்*
*அந்த நம்பிக்கையோடு*
*உன்*
*அடுத்த அடியை எடுத்துவை"*
*(இன்னொரு தேசிய கீதம், ப.135)*

என்ற கவிதை வரிகளின் மூலம் இளைஞர்கள் புரட்சி செய்தால் எதிர்காலம் அவர்களுக்கு ஒளிமயமாக அமையும் என்று கருதுகிற வைரமுத்துவின் எண்ணம் இதன் மூலம் வெளிப்படுகிறது.

**நாட்டுப்பற்று**

பெற்ற தாய் கருவுற்றிருக்கும்போது மண் தின்பாள். அப்போதே தாய்மண் பற்று ஊட்டப்பட்டுவிட்டது என்றும், குழந்தைப் பருவத்தில் மண்ணே தொட்டிலாய் விளையாடியதும், தாய்நாட்டுப்பற்று உயிரோடும், உடம்போடும் கலந்து விட்டது என்றும் வைரமுத்து கூறுகின்றார்.

*என்*
*தாய் மண்ணின் மேல்*
*இனிக்கும் காதல் எனக்கு*
*இந்நாட்டு அன்னையர்*
*கர்ப்பத்தில் இருந்த கருவுக்கு*
*மசக்கையால் ஊட்டிய மண்*
*இந்த மண்!*
*நடைவண்டி தள்ளி*
*நான் விழுந்தபோது*
*இந்தத்*
*தூய மண்தானே தொட்டிலாய் ஆனது?"*
*(திருத்தி எழுதிய தீர்ப்புகள், ப.53)*

ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்று நாட்டுப்பற்று ஆகும். ஆதலால் தமிழர்களுக்குத் தாய்நாட்டுப் பற்றும், தாய்மொழிப் பற்றும் அவசியம் என்பதை கவிஞர் வலியுறுத்துகிறார்.

**பண்பாடு**

தமிழர்கள் என்றும் தனிச்சிறப்புடன் கூடிய பண்பாட்டுப் பெருமை கொண்டவர்கள். சமூக வாழ்வில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்வு முறையே உன்னதமானது என்ற கொள்கையினை விரும்பி ஏற்றுக்கொண்டவர்கள். இதனை ஏற்கும் வைரமுத்து

*"ஒருவனுக்கு ஒருத்தி*
*உனக்கு வார்த்தை*
*புறாவுக்கு வாழ்க்கை*
*தன் ஜோடியன்றி*
*பிறஜோடி தொடுவதில்லை"*
*(இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல, ப.52)*

என்ற வரிகளில் புறா தன் ஜோடிப்புறாவை தவிர வேறு துணையைத் தேடுவதில்லை. அது போல், மனிதன் கட்டுப்பாடின்றி 'விறகு' தலைப்பில் கிராமத்துப் பெண்படுகின்ற வேதனையை வைரமுத்து குறிப்பிடுகிறார்.

*மந்தையில் வெறகவச்சா*
*மங்கையைத்தான் பாப்பாக*
*பச்சை விறகாச்சேன்னு*
*பாதிவெலை கேப்பாக*
*கேட்டவெலைக்கு வித்துக்*
*கேழ்வரகு வாங்கிக்கிட்டு*
*முந்தாநாள் கத்திரிக்கா*
*முந்தியில் ஏந்திக்கிட்டு*
*குடிசைக்கு நான்போனாக்*
*குடிதண்ணீர் இருக்காது*
*என்வீட்டு அடுப்பெரிக்க*

*எனக்கு விறகிருக்காது''*
*(இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல, ப.23)*

இக்கவிதையில் விறகு விற்கும் கிராமத்துப் பெண்ணின் வீட்டில் அடுப்பெரிக்க விறகும் இல்லை, குடிதண்ணீரும் இல்லை என்கிற வறுமை நிலையினை வைரமுத்து எடுத்துக்காட்டியுள்ளார்.

**மனித நேயம்**

படிக்க வேண்டிய வயதில் குடும்பத்திற்காகச் சம்பாதிக்கும் குழந்தைகள் நாடெங்கும் பல தொழிற்சாலைகளில் பரவிக் கிடக்கிறார்கள். அவர்களை எண்ணிக் கவலைப்படும் வைரமுத்துவின் மனித நேயம் ஒரு சோகத்தை ஏற்படுத்துவதைக் காண முடிகிறது. வயிற்றுச் சோற்றுக்கு இளமையைக் கருக்கிக் கொள்ளும் குழந்தைகளுக்காக வேதனைப்படுகிறார்.

*சிவகாசியில்*
*இந்த வெடிக்கு*
*மருந்து சுமந்த மைந்தர்களை*
*மறந்துவிட முடியவில்லை*
*தீபாவளியின்*
*புத்தாடைக்குச் சம்பாதிக்கப் போனவர்கள் –*
*சவத் துணியை அல்லவா*
*சம்பாதித்துக் கொண்டார்கள்?*
*தீ யே கொள்ளி வைத்த*
*அந்த*
*மனித மத்தாப்புகள்*
*உத்தரவாதமில்லாத*
*உழைப்புக்கு உதாரணங்கள்*

இவ்வரிகளில் தீபாவளிக்கு வெளிச்சம் தரப்போன குழந்தைகள் இருளில் மூழ்கிப்போன அவலத்தை எடுத்துக்கூறி மனித நேயம் மறந்து போன நிலையைச் சுட்டியுள்ளார்.

**தொகுப்புரை**

ஏழை, எளியோர்களின் நலன்களை மீட்கவும் உயரிய சமுதாயத்தை உருவாக்கவும், ஓர் இன்ப உலகு நோக்கி அனைவரையும் இட்டுச் செல்லவும் கவிஞர் வைரமுத்துவின் கவிதைகள் உரிமைக்குரல் எழுப்புகின்றன. பிரச்சனைகளை எடுத்துக்காட்டுவதோடு நின்று விடாமல், சமூகப் பிரச்சனைகளுக்கான தீர்வுகளையும் அவர் தம் கவிதைகளில் சுட்டிக் காட்டுவது சிறப்புமிக்கதாகும்.

# திராவிட இயக்கம் - ஒரு மறுவாசிப்பு

***முனைவர் ப.கமலக்கண்ணன்***
*தமிழ்த்துறைத் தலைவர்*
*சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி*
*ஈரோடு.*

மனித மாண்பு, மனிதநேயம், மனித உரிமை ஆகியவற்றைப் பெற்று வாழ்ந்திடவும், சமத்துவம், சமூக பொருளாதாரம், அரசியலில் உரிமை பெற்றிடவும் தமிழகத்தில் சில இயக்கங்கள் எழுச்சி கொண்டன. இதில் புதிய சத்தியாக உருவெடுத்து திராவிட இயக்கம் எனலாம்.

சென்னை ராஜதானியின் அப்போதைய அரசியல் நிலைகளால் உயர் சாதியினரால் அரசுப் பணிகளிலுள்ள இதர வகுப்பார் பாதிக்கப்பட்டதாலும் உயர் சாதியினர் வெள்ளையர்களோடு இணைந்து கொண்டு வாய்ப்புகளைப் பெறுவதும் தடுக்க முடியாத ஒன்றாய் இருந்தன. இத்தகைய நடவடிக்கைகளைக் கண்ட டாக்டர் நடேசனார் பாதிக்கப்பட்டோருக்கு உதவ வேண்டுமென்ற எண்ணத்தில் ஓர் அமைப்பை உருவாக்க நினைத்து 1912 - ஆம் ஆண்டு சென்னை திராவிடர் சங்கம் என்ற அமைப்பை உருவாக்க நினைத்து 1912-ஆம் ஆண்டு சென்னை திராவிடர் சங்கம் என்ற அமைப்பை(Dravidian Association of Madras) உருவாக்கினார். இதன் பணிகள்தான் பின்னர் தோன்றிய நீதிக்கட்சிக்கு அடிப்படையாய் அமைந்தன. நாளடைவில் டாக்டர் நடேசனாரின் அறிவுக் கூர்மையின் விளைவாக 1916 ஆம் ஆண்டுக் கூட்டுப் பங்கு மூலதனமுடைய நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டது. அதனைத் தொடர்ந்து தென்னிந்திய மக்கள் மன்றம் என்ற அமைப்பும் உருவாயின.

வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதே இதன் உயிர்ப்பாக இருந்தது.

- ♦ பெண்களின் விடுதலையை நீதிக் கட்சி பெரிதும் விரும்பியது. பெண்களுக்கு ஆண்களைப் போலவே வாக்குரிமை அளிக்கப்பட்டது.
- ♦ தேவதாசி ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டது.
- ♦ காதல் மணம், கலப்பு மணம் செய்வோருக்குப் பாதுகாப்புச் சட்டம் உதவியது.
- ♦ இனாம் ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது.
- ♦ வகுப்புவாரி பிரதிநிதித்துவம் சட்டமாக்கப்பட்டது.
- ♦ திராவிட தேசியம், தமிழ் தேசியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருந்தது.

♦ பணியாளர் நியமன வாரியம் 1924 – இல் அமைக்கப்பட்டது இது 1929–இல் பப்ளிக் சர்வீஸ் கமிஷனாக மாறியது.

♦ சென்னைப் பல்கலைக் கழகச் சீரமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

♦ மருத்துவச் சட்டப் படிப்பிற்கு சமஸ்கிருதம் கட்டாயப் பாடமாக இருந்து வந்ததை அகற்றியது.

♦ 1926 – ஆம் ஆண்டு ஆந்திர பல்கலைக் கழகமும்

♦ 1929 – ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும் அடிக்கற்கள் நாட்டப்பட்டன.

திராவிடர்கள் தங்களுடைய பண்பாட்டுப் பெருமையை உணர்ந்தனர். தங்களது கலையும் மொழியும் வளர்ந்து சிறக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டனர். குறிப்பாக திராவிடமொழியின் மறுமலர்ச்சிக்கு வித்தூன்றினர்.

தமிழருடைய தன்மான இயக்க உணர்விற்கு ‘விடிவெள்ளி’ கால்டுவெல் பெருமகனார் என்றால் அது மிகையாகாது. நமக்கென ஒரு மொழி, நாடு, நாகரிகம், பண்பாடு உண்டு என்பதை உலகோர் அறிவதற்கு முதற்காரணமாக விளங்கியவர்.

தமிழ் மொழியின் சீர்மையையும், தமிழினத்தின் மேன்மையையும் உலக அரங்கில் கொண்டு சேர்த்தவர் கால்டுவெல் ஆவார். இவரது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூல் தமிழின் தொன்மை, வளமை, தூய்மை முதலிய செம்மைப் பண்புகளையும் தமிழினத்தின் பண்பாடு, நாகரிகத்தையும் உலக மக்களிடம் எடுத்துச் சென்றன. ‘திராவிடம்’ எனும் சொல்லை முதன் முதலில் மொழி நூல் உலகில் அறிமுகப்படுத்தியவர். இன்றைக்குத் தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களில் திராவிட மொழிகள் ஏற்றமும் தோற்றமும் பெற்று விளங்குவதற்கு இவரே காரணமாவார்.

நான்கு வருண சாதி முறை சமுதாயத்தை பாழாக்கிக் கொண்டிருந்த காலம். காஞ்சிபுர மாநாடு பெரியார் அவர்களுக்குப் புதியதோர் எழுச்சியை ஊட்டிற்று. 2.5.1925 ஆம் ஆண்டு குடியரசு தோன்றிய நாளே தன்மானத் தமிழர் இயக்கம் தோன்றிய நாளாகும் என்று பெரியார் குறிப்பிட்டார்.

மானுடத்தின் கவலையற்ற நல்வாழ்வுக்கும் திராவிடரின் நல் வாழ்வுக்கும் தன்மானக் கொள்கை இன்றியமையாதது என்பதை தந்தை பெரியார் உணர்ந்திருந்தார்.

பெரியார் பார்ப்பனீயத்தை எதிர்த்தே தனது தன்மான இயக்கத்தைத் தொடங்கினார். கடவுள் மறுப்பு பரப்புரைக்காக அவர் அதை தொடங்கவில்லை. மதம், கடவுள் மீதான பெரியாரின் கோபம் இவை சமூக நீதியைச் சிதைக்கிறதே என்பது தான். சமூக அநீதியை முன் வைக்கும் மதங்களை அழித்து ஒழிப்பது தான் தனது தலையாயப் பணி என்பதில் உறுதியாக இருந்தார். இறுதி வரை பணியாற்றினார்.

1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழர் சமுதாய இழிவு ஒழுப்பு மாநாடு நடத்தினார். இதன் நோக்கம் கோயில்களில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வழிவகை காண வேண்டும். எனவே இதிலும் சமூக நீதி பிரச்சினையையே மையமாக முன் வைத்தார். இவ்வாறு திராவிட இயக்க உணர்வு இந்த நூற்றாண்டுத் தமிழரின் நாடி நரம்புகளில் நீக்கமற பரவி கிடக்கிறது. தமிழர்கள் அனைவரும் தன்மானம் உடையவர்களாக அறிவுடையவர்களாக குறிப்பாக மனிதர்களாக வாழ வேண்டும் என்ற நோக்கத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு சமூக நீதியின் தந்தை பெரியாரும், அவர் இயக்கமும் பணியாற்றினார்.

இத்தகைய இயக்கம் தாக்கம் பெற்ற துறைகளில் தமிழ் இலக்கியமும் ஒன்றாகும். இருபதாம் நூற்றாண்டில் எல்லா நாடுகளிலும் சமுதாய நலன் கருதிய இலக்கியங்களே எழுகின்றன. பழங்காலத்தில் கடவுளையும் காதலையும் பாடி வந்த தமிழ் இலக்கியவாதிகள் இன்று சமுதாயத்தைப் பாடுகின்றனர்.

*“மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும்*
*மடையர்களும் இயற்றிடுவார் கடவுட் பாடல்”*

கடவுளை மறுத்துரைக்க வேண்டுமென்பது பாவேந்தரின் நோக்கமல்ல. பாடுகின்ற பொருளில் புதிய பொருளும், புதிய சிந்தனையும் இடம் பெற வேண்டுமென்ற நோக்கமே தெரிகிறது.

இலக்கியத்தின் மூலம் வார்த்து அனுப்பப்படும் எத்தகைய கருத்தும் சமுதாயத்தை எளிதில் சென்றடையும். ஏனெனில் கலை இலக்கியங்களுக்கு உள்ள ஆற்றல் அத்தகையது. கலை இலக்கிய

முயற்சிகளைக் கைகழுவிய எந்த இயக்கமும் மக்களால் கைவிடப்பட்டு விடும். ஆனால் ஒரு கால கட்டத்தின் தேவையாய் திராவிட இயக்கக் கவிஞர்களின் கவிச்சிந்தனைகள் ஒலித்தன. கவிதை இங்கே ஒரு கருவிதான். ஆனால் இனத்தை, மொழியை, சீர்திருத்தத்தை பற்றிய அக்கறை அரும்ப இவைகள் காரணமாக அமைந்தன.

திராவிட இயக்க இலக்கியக் களங்கள் சமுதாயத்தில் நெடுநாட்களாகப் புரையோடிப்போன பழமைகளையும் மூடப் பழக்கங்களையும் நையாண்டிச் செய்தும் சாதி மாறுபாடுகளை சாடியும், காதல் மற்றும் கலப்புத் திருமணங்களை வரவேற்றும் பங்களிப்பை செய்துள்ளன.

திராவிட இயக்கத்தாரின் படைப்புகளும் அவர்தம் இலக்கண இலக்கிய ஆய்வுகளும் தமிழ் இலக்கிய வரலாற்றை உண்மையாக வடித்துக்காட்ட பெரிதும் துணை புரிந்தன.

திராவிட இயக்கமானது சமூக நீதி, இட ஒதுக்கீடு, தமிழ்மொழி, இனம், நாடு ஆகியவற்றின் மேம்பாடு போன்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு கவிதை, நாடகம், இதழ்கள், திரைப்படம் போன்ற ஊடகங்களில் தங்களது இருப்பை தக்கவைத்துக் கொண்டனர்.

பெரியபுராணம், கம்பராமாயணம், கந்தபுராணம் ஆகியவற்றின் கதை நிகழ்ச்சிகளையும், போக்குகளையும் மறுதலித்து கவிதைகளைப் படைத்தல் திராவிட இயக்கக் கவிஞர்களின் சிந்தனைகளாக இருந்தன. எனவே தமிழகத்தின் அரசியல், கலை, பண்பாடு ஆகியவற்றில் திராவிட இயக்கத்தின் பங்களிப்பு அளப்பரியது. எப்போதும் இல்லாதவாறு படிக்கின்ற பழக்கத்தையும் திருமண விழாக்களில் நூல்கள் பரிசளிப்பதையும், நூல்கள் சேகரிப்பது போன்ற பழக்கங்களையும் பொதுமக்களிடையே இந்த இயக்கம் உருவாக்கியது.

வடநாட்டு தேவநகரி என்ற வரிவடிவத்தை இந்திய விடுதலைக்குப் பிறகு வட நாட்டிற்குப் பொதுவான வடிவமாக்கியதைப் போல தென்னாட்டு மொழிகளுக்கு அமையாமல் தடுத்தது திராவிட இயக்கமாகும்.

இந்திய தேசியத்தின் இறையாண்மை பாவேந்தர் கவிதைகளில் தமிழ்த் தேசியத்தின் கோட்பாடாக வெளிப்பட்டது. இதற்குப் பெரியார் நெறிப்படுத்திய திராவிட இயக்கமே காரணமாகும்.

வருணாசிரமக் கோட்பாடு, தனிமனித கோட்பாடு ஆகிய இரண்டையும் எதிர்த்து வளர்சிதை மாற்றமுறச் செய்து சமுதாயக் கோட்பாடாக மாற்றிய பெருமை திராவிட இயக்கத்திற்கே உண்டு.

திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கை என்பது இன்றைய சமுதாயக் கட்டமைப்பினை முழுமையாக மாற்றி சாதி சமய மத பேதங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு புதிய ஒன்றுபட்ட சமுதாயத்தை உருவாக்குவதுதான் என்பதை அழுத்தமாக தமது இலக்கியப் படைப்புகளைப் படைத்தனர்.

இன்றையத் தமிழகச் சூழலில் திராவிட இயக்கத்தின் செயல்பாடுகள் மீண்டும் எழுச்சிபெற வேண்டும். இந்தத் தத்துவம் மோலோங்கி வளர்ந்து வரும் இத்தருணத்தில் திராவிட இயக்கம் தமது கருத்தியலையும், செயல்பாடுகளையும் தீவிரப்படுத்திக் கொள்வது அவசியமாகும். தமிழகத்தில் சாதி அமைப்புகள் தொடர்ந்து வண்ணம் உள்ளன. இத்தகைய சூழலில் திராவிட இயக்கத்தின் தேவை காலத்தின் கட்டாயமாகிறது.

தமிழர்களின் நாடு, மொழி, இனம், பண்பாடு, அரசியல் குறித்த திராவிட இயக்கத்தின் கருத்தாக்கங்கள் தமிழ்ச் சமுதாயத்தை மழுங்க வைக்கும் கடவுள், மதம், நம்பிக்கை குறித்த திராவிட இயக்க பார்வையை மறுவாசிப்பின் மூலமாக திறனாய்வு செய்ய முன் வரவேண்டும்.

# புதுக்கவிதை வளர்ச்சியில் வானம்பாடி இயக்கத்தின் பங்கு

***முனைவர் ப.சு. மூவேந்தன்***
*உதவிப்பேராசிரியர்*
*தமிழியல்துறை*
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*
*அண்ணாமலைநகர்.*

**முன்னுரை**

தமிழில் கவிதை மரபு பன்னெடுங்காலமாக வழக்கிலிருந்து வரும் ஒரு இலக்கிய வடிவமாகும். சங்க இலக்கியத்திலிருந்து இன்று வரை வாழும் இலக்கிய வடிவமாக அது இடையறாது இயங்கி வருகிறது. சங்கக்கவிதை வளர்ச்சிக்கெனச் சங்க காலத்தில் தமிழ்ச்சங்கங்கள் இருந்து செயல்பட்டதைப் போல, இருபதாம் நூற்றாண்டில் புதுக்கவிதை வளர்ச்சிக்குக் கவிதை இயக்கங்கள் தோன்றி அதனை வளர்த்தெடுத்தன. தமிழின் புதுக்கவிதை இயக்கக் காலம் 1940களில் தொடங்கியது. அதன் வளர்ச்சிக் காலத்தில் தோன்றிய இயக்கமாக வானம்பாடி கவிதை இயக்கம் விளங்குகின்றது. வானம்பாடி இயக்கத்தின் நோக்கம், அதன் கொள்கை குறித்தும் புதுக்கவிதை வளர்ச்சியில் அதன் பங்களிப்புக் குறித்தும் இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றது.

**கவிதை இயக்கங்கள்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ் இலக்கியத்தில் புதிய போக்குகள் உருவாயின. பாரதியின் எழுச்சிமிகு கவிதைகள் இலக்கியத்தின் பார்வையை விசாலப்படுத்தின. அவரது தடத்தை அடியொற்றி ஏராளமான கவிஞர்கள் சமூகப் பிரச்சினைகளைக் கவிதைகளின் மூலம் வெளிப்படுத்தினர். அவர்களுக்கு இலக்கிய இயக்கங்களும் இயக்கத்தின் மூலமாக வெளிவந்த சிற்றிதழ்களும் களம் அமைத்துக் கொடுத்தன.

தமிழ்க்கவிதை வளர்ச்சியில் மணிக்கொடி, கலாமோகினி, கிராமஊழியன், எழுத்து, கசடதபற, பிரக்ஞை, நடை, வானம்பாடி, தாமரை, கணையாழி, தீபம், அஃக் முதலான இலக்கிய இதழ்கள் புதுக்கவிதையை வளர்ப்பதில் பெரும்பங்காற்றியுள்ளன.

தமிழில் தோன்றிய நவீன இலக்கியங்கள் இலக்கியத்தின் போக்கை காலத்தின் தேவைக்கேற்ற வகையில் மாற்றியமைத்தன. பொதுவாக அவை,

1. மனித மனத்தில் ஒரு புதிய சூழல், ஒரு புதிய பிரக்ஞையை ஏற்படுத்தின.

2. துல்லியமான நிகழ் உலகப் பார்வையைப் பிரதிபலித்தன.

3. இலக்கியப் பண்பாட்டுத் துறைகளில் மரபு, தேசிய எல்லைகளைக் கடந்தன,

4. தனக்கு வெளியில் இருப்பனவற்றோடு மட்டுமல்லாது, தன்னோடும் தன் கருத்துக்களோடும் முரண்படுவதிலும் வளர்ச்சி கண்டன்

5. அறிவார்ந்த போக்கை அடிப்படையாகக் கொள்வதால், பழங்கால அழகியலின் பேரில் தீவிரமான அதிருப்தியை ஏற்படுத்தின.

**கவிதை வரலாற்றுக் காலகட்டங்கள்**

தமிழ்ப் புதுக்கவிதை வரலாற்றினை இலக்கிய இயக்கங்களின் அடிப்படையில் வகைப்படுத்தும் போக்கு திறனாய்வாளர்களிடையே காணப்படுகின்றது. தமிழ்க் கவிதை வளர்ச்சியைப் 'புதுக்கவிதையில் குறியீடு' என்னும் நூலில் அப்துல்ரகுமான்,

1. பரிசோதனைக் காலம் (1934 – 1947)
2. மறுமலர்ச்சிக்காலம் (1959 – 1969)
3. செல்வாக்குக் காலம் (1970 முதல்)

என்று மூன்று காலகட்டங்களாகப் பிரித்துக் காட்டுகின்றார்.

'பரிசோதனைக் காலகட்டத்தில்' எழுத்து இலக்கியவட்டம் நடை ஆகிய இதழ்கள் வெளிவந்துள்ளன. இவற்றின் மூலம் தருமுசிவராமு, சி.மணி. வைத்தீஸ்வரன், சண்முக் சுப்பையா, தி.சோ.வேணுகோபாலன் முதலான கவிஞர்கள் அறிமுகமானார்கள்.

'செல்வாக்குக் காலத்'தில் கசடதபற, தாமரை, வானம்பாடி, அஃக், ழ, தீபம், ஞானரதம் முதலான இதழ்கள் வெளிவந்தன. இவற்றில் வானம்பாடி இயக்கத்தில் முல்லை ஆதவன், அக்கினிபுத்ரன், அப்துல்ரகுமான், நா.காமராசன், சிற்பி, தமிழன்பன், இன்குலாப் முதலான கவிஞர்கள் அறிமுகமாகிப் புதுக்கவிதைக்கு வளம் சேர்த்தார்கள்.

எனவே, கவிதை வளர்ச்சியில் இதழ்களின் பங்களிப்பு கவனத்தில் கொள்ளத்தக்க ஒன்றாக விளங்குவதனை உணரலாம்.

**வானம்பாடி இயக்கம்**

புதுக்கவிதைகள் செல்வாக்குப் பெற்ற காலகட்டத்தில் தோன்றிய வானம்பாடி கவிதை இயக்கம். தமிழக வரலாற்றில் அரசியல், ஆட்சிமுறைகளில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் வெளிவந்தது அதன் வெற்றிக்குக் களமாக அமைந்தது. தமிழகத்தில் திராவிட இயக்க ஆட்சி, கேரளத்திலும் வங்காளத்திலும் பொதுவுடைமைக் கட்சியின் ஆட்சி, தமிழ் இலக்கிய உலகில் நவீன இலக்கியங்களின் செல்வாக்கு, சிறுபத்திரிக்கைகளின் வரவு, மேலை இலக்கியக் கோட்பாடுகளின் தாக்கம், சிந்தனைப் போக்குகள் என பல்வேறு வகைகளில் மாற்றங்கள் நிகழ்ந்துவந்த காலகட்டமாக அது விளங்கியது.

தமிழ்க்கவிதை வரலாற்றின் செல்வாக்குக் காலத்தில் (1970) தோன்றிய 'வானம்பாடி கவிதை இயக்கம்', 1970 – இல் 'வானம்பாடி என்ற இலக்கிய இதழைத் தொடங்கியது. சமூக அக்கறையோடு இலக்கியச் சிந்தனையுள்ள அமைப்புகளில் பங்கேற்றவர்கள் ஒன்றுகூடி உருவாக்கியது வானம்பாடி இயக்கமாகும். இவ்விதழில் கவிஞர்கள் பலர் முற்போக்குச் சிந்தனையை மையப்படுத்திக் கவிதைகள் எழுதினர். புதுக்கவிதை, ஓர் இலக்கிய இயக்கமாக சமூக முரண்பாடுகளை வெளிப்படுத்தும் மாற்றுச் சக்தியாக இந்தக் காலகட்டத்தில்தான் வளர்ச்சி பெற்றது.

வானம்பாடிக்கு முன்பு வரை தமிழில் அகமரபு சார்ந்த கவிதைகள் நிறைந்திருந்தன. பாலியல் உறவுகள், மனச்சிதைவுகள், பிறப்பு – மரணம் குறித்த கருத்துக்களை அவை முன்வைத்தன. இவற்றிலிருந்து முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட மாறுபட்ட கவிதைத்தளத்தை வானம்பாடி இயக்கம் உருவாக்கியது அது தங்களைப் பின்பற்றிய கவிஞர்களுக்கு 'எதையும் எழுதுங்கள்! அதை இலக்கியமாக எழுதுங்கள்!' என்ற அறைகூவலை விடுத்தது அதுவே அவர்களின் இலக்கியக் கொள்கை முழக்கமாகவும் அமைந்தது.

அக்கினிபுத்திரன், முல்லை ஆதவன், சிதம்பரநாதன், புவியரசு, சிற்பி, மேத்தா, சக்திக்கனல், நா.காமராசன், மீரா. இன்குலாப், தமிழன்பன் போன்ற கவிஞர்கள் சமூகப் பொறுப்புணர்வுடன் கவிதைகள் படைத்தனர். இவ்வாறான நவீனச் சிந்தனையின் விளைவாகப் புதுக்கவிதை பாடுபொருள் அடிப்படையிலும் படைப்பாக நிலைப்பாடுகளிலும் இலக்கிய ஆளுமையைச் செலுத்தியது. குறியீட்டியல், மிகையதார்த்தவியல், வெளிப்பாட்டியல், எண்ணப்பதிவியல், படிமவியல், நடப்பியல், மாயாயதார்த்தவியல், வருங்காலவியல் போன்ற மேலை இலக்கிய இயக்கங்கள் இவற்றுள் குறிக்கத்தக்க வளர்ச்சிப் பெற்றன.

வானம்பாடிக் கவிதைகளால் தமிழ் இலக்கியப் பரப்பில் ஏற்பட்ட மாறுதல்கள் குறிக்கத்தக்கவையாகும். வானம்பாடிக் கவிஞர்களின் இலக்கியப் போக்காக அமைந்த,

1. நிகழ்காலத்தில் மூடி மறைக்கப்படும் உண்மைகளை மக்களுக்கு உணர்த்துவது. உண்மைகளுக்குப் பதிலாக மக்கள் மனதில் உருவாக்கப்பட்டிருக்கும் பிரமைகளை உடைப்பது.

2. சமூகக் கொடுமைகளை எதிர்க்கும் - உழைக்கும் மக்களைப் புதிய பாடுபொருளாய் மதித்து எழுவது. அவர்கள் நடத்தும் போராட்டங்களுக்கு ஆதரவாகக் கவிதைகள் அமைப்பது.

3. புதிய சமுதாயம் பற்றிய நம்பிக்கை, சமூக மாற்றத்திற்கு ஆதரவான எழுத்தைப் பயன்படுத்துவது.

முதலான பொதுப்பண்புகள் இன்றைய காலகட்டம் வரை நீடித்துவருகின்றன. எனவே, வானம்பாடி இயக்கத்திற்குப் பின்னரான கவிதைப் போக்குகள் சமூகப் பயன்பாட்டு நோக்கில் கருத்தில் கொள்ளத்தக்கவும் ஆராயத்தக்கதாகவும், பதிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகவும் விளங்குகின்றது.

வானம்பாடிக் கவிதைகளால் தமிழ்க் கவிதைகளில் ஏற்பட்ட இலக்கியப் போக்குகள் இன்றும் நீடித்து வருகின்றன. வானம்பாடிக் கவிதைகளின் உள்ளடக்கமாக அமைந்த சமூகவிமர்சனங்கள் புதியபாடு பொருள், வர்க்க ஒற்றுமையும் வர்க்கப் போராட்டமும், பழைய மதிப்பீடுகளும் புதிய பார்வைகளும், குடும்ப உறவுகளில் சிதைவு, சமூக-அரசியல் போக்குகள், பெண்விடுதலை, உலகளாவிய பார்வை, வரலாற்றுணர்வு, ஒடுக்கப்பட்டோர் விடுதலை, விளிம்புநிலை மக்கள் விடுதலை முதலான பொதுமைக் கூறுகள் இன்றைய காலகட்டத்தில் கவிதைப் பொருள்களாக உள்ளன.

வானம்பாடிக் கவிதைகளால் தமிழ்க் கவிதைகளில் ஏற்பட்ட இலக்கியப் போக்குகள் இன்றும் நீடித்து வருகின்றன. வானம்பாடிக் கவிதைகளின் உள்ளடக்கமாக அமைந்த சமூகவிமர்சனங்கள் புதியபாடு பொருள், வர்க்க ஒற்றுமையும் வர்க்கப் போராட்டமும், பழைய மதிப்பீடுகளும் புதிய பார்வைகளும், குடும்ப உறவுகளில் சிதைவு, சமூக-அரசியல் போக்குகள், பெண்விடுதலை, உலகளாவிய பார்வை, வரலாற்றுண்ர்வு, ஒடுக்கப்பட்டோர் விடுதலை, விளிம்புநிலை மக்கள் விடுதலை முதலான பொதுமைக் கூறுகள் இன்றைய காலகட்டத்தில் கவிதைப் பொருள்களாக உள்ளன.

வானம்பாடிகளின் கவிதை இயக்கம் கோயம்புத்தூரில் உருவான ஒரு கவிதை இயக்கமாக இருப்பினும் அது தமிழகம் முழுமையும் கவிதையால் தன் ஆளுமையைச் செய்தது. அது இலக்கிய இயக்கமாக மட்டுமின்றி சமூகப் புரட்சி இயக்கமாக உருவெடுத்து வளர்ந்தது.

வானம்பாடி இயக்கத்தில் பங்கெடுத்த கவிஞர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதி சார்ந்தவர்கள் எனினும் அவர்கள் தாங்கள் கொண்டிருந்த கருத்தால் ஒன்றுகூடினர். அவர்களை ஒன்றுகூட வைத்தது அவர்கள் கொண்டிருந்த கவியார்வப் பண்பே. இவர்களின் சிந்தனை வெளிப்பாட்டினை,

*இந்த கோவைநகர்*
*இன்னுமொரு மெத்ரோ கிராட்*
*கோசலிச யாகங்கள்*
*இங்கே தான் தொடங்கும்*
*யுகப்புரட்சி முதல்வெடிகள்*
*இங்கேதான் வாய் திறக்கும்* என்று
அவர்கள் கூட்டாக அறிக்கை விட்டனர்.

வானம்பாடியின் முதல் இதழ் ‘கூடுகள் திறக்கின்றன’ என்ற முழக்கத்துடன் வெளிவந்தது. அந்த உணர்வினை, ‘‘அதன் தாள்கள் நெருப்புச் சிறகுகளாய்ப் படபடத்தன. எரிமலைக்குழம்பில் நீராடி வந்த அக்கினிக்குஞ்சுபோல் அதன் மூச்சில் அனல் அடித்தது. தீயின் துணுக்குகளாய் எழுத்துக்கள் இருந்தன. நெருப்பின் துண்டுகளாய் வார்த்தைகள் அமைந்தன. உமிழும் அக்கினி விழுதுகளாய் வரிகள் இருந்தன’’ என்று தமிழ்நாடன் குறிப்பிட்டார்.

*‘‘நாங்கள் வானம்பாடிகள்*
*மானுட கானம்பாடிகள்*
*உழைப்பு ஞானம்பாடிகள்’’*

என்று கவிதை எழுதினார் அக்கினிபுத்திரன் ‘‘தங்கள் கவிதை மானுடத்தின் பிரகடனம். தங்கள் கடிதமோ வானம்பாடிகளின் பிரகடனம்’’ என்று தமிழ்நாடனுக்குப் பதில் தந்தார் அக்கினிபுத்திரன்.

வானம்பாடிகள் கவிதை இதழின் தாக்கத்தால் தமிழகத்தில் ஏராளமான கவிஞர்கள் சமூகப்

பொறுப்புணர்வுமிக்க கவிதைகளைப் படைத்தனர். கவிஞர்கள் புதிது புதிதாக உருவாயினர். பெண் கவிஞர்களின் வருகை இதில் குறிப்பிடத்தக்கது. கவிதையின் செல்வாக்கு உயர்ந்தது. சமூகத்தின் அவலங்களை, புரட்சிகரக் கருத்துக்களை எடுத்துரைக்க வல்ல எளிய இலக்கிய வடிவம் கவிதை என்பது பிறர்க்குப் புரியலானது.

வானம்பாடி இயக்கத்தின் குரலுக்கு மறுப்புகள் பல எழுந்தன. பிற கவிதை இயக்கங்களும் வானம்பாடிகளின் இயக்கத்தைக் குறைத்து மதிப்பிட்டு அறிக்கைகள் விட்டன. என்றாலும் வானம்பாடி இயக்கக் கவிஞர்கள் தங்கள் கவிதைப்பணியில் இருந்து சிறிதும் பின்தளரவில்லை.

வானம்பாடி இயக்கத்திற்குப் பின்னர் தமிழ்க்கவிதைகள் மிகப்பெரும் அளவில் வளர்ந்துள்ளது. அறிவியல் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு இன்று அது இணையங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இணைய வழியாகப் பல்லாயிரக்கணக்கான கவிஞர்கள் உருவாகி வருகின்றனர். அது பாடுபொருள் மற்றும் உத்திகள் அடிப்படையில் பெண்ணியம், தலித்தியம் என்றும் உள்ளடக்க உத்திகளின் அடிப்படையில் குறியீட்டியல், படிமவியல், பகுத்தறிவுவாதம், பொதுவுடமை வாதம் முரண், அங்கதம் என்னும் பல்வேறு நிலைகளில் வளர்ச்சிப் பெற்றுள்ளது. இன்றைய நிலையிலும் பல்வேறு கவிஞர்கள் இப்பணியில் தங்களின் பங்களிப்பைச் செய்து வருகின்றனர். இவர்களின் வளர்ச்சிக்கெல்லாம் அடிகோலியது வானம்பாடி இயக்கம் எனில் அது மிகையல்ல.

வானம்பாடிகளின் காலத்தில்தான் புதுக்கவிதை கவியரங்க மேடைகளில் ஏற்றம்பெற்றது. கவிதையைப் படைத்த கவிஞனே கவியரங்கத்திற்கு வந்து தன் கவிதையைப் பாடுவதால், கவிஞனின் எண்ணவோட்டம், வெளிப்பாடு, எடுத்துரை, தொனி, உணர்ச்சி போன்றவை ஒரே நேரத்தில் பலரால் கேட்கப்பட்டு விமர்சிக்கப்பட்டன.

வானம்பாடிக் காலத்தில் சிறுசிறு கவிதைகளாக எழுதப்பட்டு வந்த கவிதைகள் மெல்ல மெல்ல நூலாக்கம் பெற்று, மக்கள் வாசிப்புக்குக் கொண்டு செல்லப்பட்டன.

1971 முதல் இன்றுவரை (2010) ஏராளமான புதுக்கவிதை நூல்கள் வெளியாகி வந்து கொண்டுள்ளன. மரபுக்கவிஞர்களால் அவ்வப்போது சிற்சில மரபுக்கவிதைகளும் தொடர்ந்து வெளிவந்து சிக்கல்கள், சமுதாயப் பிரச்சினைகள், அரசியல், சமயம், சாதி, பிரிவினை, வர்க்கபேதங்கள், அண்டைநாட்டுப் பிரச்சினைகள், ஈழப்பிரச்சினை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், உலகமயமாதல், இயற்கை வளம், சீரழிவு சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அதன் விளைவுகள் முதலானவற்றின் நிறைகுறைகளை வெளிப்படையாக எடுத்துரைத்து வருகின்றன. குறைகளைக் கூறும்போது அவற்றைக் திருத்திக் கொண்டு வாழ்வதற்கும், நிறைகளைச் சொல்கையில் வளர்ச்சி பெறுவதற்கும் முன்னேற்றம் காண்பதற்கும் கவிதைகள் ஓரளவில் துணைநிற்கின்றன.

1971 முதல் 1983 வரையிலான காலகட்டம் வரையில் இருபத்திரண்டு இதழ்களை மட்டுமே வெளியிட்டுக் கவிதைப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட வானம்பாடி இயக்கம் கவிதை இயக்க வரலாற்றில் நிலைத்த பெயரைப் பெற்றது. வானம்பாடி இதழ் நின்றபிறகும் அதிலிருந்து செயல்பட்ட கவிஞர்கள் அதேவீச்சுடன் கவிதைகள் எழுதித் தமிழுக்கு வளம் சேர்த்தனர். 1980க்குப் பிறகு தமிழ்க்கவிதையின் தடம் முற்றிலுமாக மாற்றம் பெற்றது. வானம்பாடி இயக்கத்தின் கவிதைப் போக்கைக் கடந்து புதிய போக்குகள் கவிதைகளில் தீவிரம் பெற்றன.

ஆதிக்க வர்க்கத்தினர்க்கும், ஆளும் வர்க்கத்தினர்க்கும் ஆளும் அரசியல் கட்சிகளுக்கும் எதிராகவும் குரல் கொடுப்பதில் புதுக்கவிதைகள் முன்நிற்கின்றன. மக்கள், சமூகப் பிரச்சினைகளை அரசுகளிடமும், மக்களிடமும் கொண்டு செல்கின்றன. அரசாங்கத்தின் குறைகளைச் சுட்டிக்காட்டும் கவிதைகளே மிகுதியாகப் படைக்கப்படுகின்றன. அவை ஆளும் அரசுகளின் மீது கவிஞர்கள் கொண்டுள்ள எதிர்ப்புணர்வைக் காட்டுவதாக அமைந்துள்ளது. சுற்றுப்புறம், சுகாதரச் சீர்கேடு, அறிவியல் அழிவு முதலானவற்றை மக்களிடம் கொண்டு செல்வதில் தற்காலப் புதுக்கவிதைகள் பெரும்பணியாற்றி வருகின்றன.

# சவ்வாது மலைவாழ் பழங்குடி மக்களின் வேளாண்மை மரபு அறிவு

**முனைவர் க. இரமேஷ்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,*
*வேலூர் - 632 115.*

**பொ. இரவீந்திரன்**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,*
*வேலூர் - 632 115.*

சவ்வாது மலை என்பது சவ்வாது என்ற ஒரு வகை மரம் பெருமளவு இருந்த காரணத்தால் சவ்வாதுமலை என்ற பெயர் பெற்றிருந்தோம். இம்மலை சந்தன மரங்கள் வளர்வதற்குத் தக்க தட்பவெப்பநிலை கொண்டதாக உள்ளது. சவ்வாது மலையில் புனுகுப்பூனைகள் மிகுதியாக இருந்ததாகவும் இப்பூனைகளில் இருந்து கிடைக்கும் ஒரு வாசனைப்பொருளே சவ்வாது என்றும் கூறப்படுகிறது. சவ்வாது மலையில் வாசனைத் திரவியங்களையோ அல்லது கிழங்கு வகைகளையோ மிகுதியாகக் கொண்டிருந்த காரணத்தால் சவ்வாது மலை என்ற பெயர் பெற்றிருக்க வேண்டும்.

சவ்வாது மலைகள் இன்றைய வேலூர் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு உட்பட்டு காணப்படுகிறது. இம்மலை வடமேற்கு திசையில் அமர்தியிலிருந்து சங்காரப்பேட்டை வரையில் 80 கி.மீ நீண்டும். ஆலங்காயத்திலிருந்து மேற்கு கிழக்காகக் தும்பக்காடு வரையிலும் 32 கி.மீ விரிந்தும் காணப்படுகிறது. இம்மலை கடல்மட்டத்திலிருந்து சுமார் 2360 அடிமுதல் 3855 அடிவரை கொண்டதாக காணப்படுகிறது இம்மலையின் உயர்ந்த சிகரமாக சேம்பறை 3855 அடியும் கம்புக்குடி 3500 அடி என்றும் சொல்லப்படுகிறது.

**வேளாண்மையியல் தொழில் நுட்பம்**

மலையாளிகளின் மிகமுக்கியமான தொழில் வேளாண்மையாகும். இவர்கள் தாம் வாழும் குடியிருப்புக்கு அருகிலுள்ள சமதள நிலங்களிலும் மலைச்சரிவு பகுதிகளிலும் வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். ஏர் உழவு கலப்பை பொறிசி மரத்தால் ஆனதை பயன்படுத்தினால் பயிர் பொறி பொறிந்து நன்றாக வரும் என்றும் கூறுகின்றனர். கொண்மை மரத்தால் ஆன ஏறுக்கால் பயன்படுத்தினால் பக்கத்து நிலத்தில் பயிர் நன்றாக வராது என்றும் கூறுகின்றனர்.

சவ்வாது மலையில் காட்டெரிப்பு வேளாண்மையில் மலையாளிகள் காடுகளை வெட்டி எரித்து அவற்றையே நிலங்களில் உரமாகப் பயன்படுத்துகின்றனர். மேட்டு நிலங்களை கொத்துக் கருவிகளைக்கொண்டு கொத்திப் பக்குவப்படுத்தியும் இவர்களின் பயிர்த்தொழில் வானம் பார்த்த பூமியாகவே காணப்படுகிறது. இன்றும் மழையே நம்பியே பயிர்ச்செய்கின்றனர். மழை இல்லையென்றால் வாழ்க்கை இல்லை என்ற கேள்விக்குறித்தான் என்றும் கூறுகின்றனர். மக்க பருவ மழைக்கு முன்பே நிலத்தை உழுது தயார் நிலையில் வைத்திருக்கின்றனர்.

**மழை பற்றிய அறிவு**

மழை வருவதை முன்பே கணிக்கும் அறிவினை மலையாளியினப் பழங்குடிகள் பெற்றிருந்தனர். மழைமேகம் உருவாகும் விதம் மேகம் அதிகமாக ஏறினால் மழை பொழியும் என்ற நுட்பமும் இயற்கையில் ஏற்படுகின்ற மாறுபாடுகளும் உயிரினங்களான தவளை ஒலியெழுப்புவது தட்டான்கள் ஆடு மாடுகள் ஒன்றோடு ஒன்று உரசிக்கொள்வது. பட்டாம் பூச்சிகள் வடக்குத் திசை நோக்கப் பறந்துச்செல்வது புற்று புற்றுமண் திடீரென வளர்ந்திருத்தல் இதுப்போன்று சவ்வாது மலை மக்கள் மழைப்பற்றி அறிந்திருக்கின்றனர்.

**நில்த்திற்கு எரு இடுதல்:**

மலையாளிகள் பயிர் செய்வதற்கான உரங்களாக கால்நடைகள் அதிகமாக வளர்ந்து அதனுடைய கழிவுப் பொருளாகிய சாணத்தைச் சேமித்து உரமாகப் பயன்படுத்துகின்றனர். குடிசைகள் அருகே நிலத்தில் ஆடு மாடுகளை அடைத்து வைப்பதற்கு பட்டிகள் கட்டி அவற்றின் சாணத்தைச் சேமிக்கின்றனர். மேலும் வீட்டின் அருகாமையிலும் தெருவின் பக்கத்தில் உள்ள எருவை சேமித்து பயன்படுத்துகின்றனர். நெல் பயிரிடும் நிலத்திற்கு காடுகளிலுள்ள தழைகளைப் பறித்து வந்து அதை தரித்து எருவாக பயன்படுத்துகின்றனர். குறிப்பாக புங்கன் இழை வெப்பாலை இலை பொறிசி இலை இவைகளே அதிய அளவில் பயன்படுத்துகின்றனர் இவ்வாறு பயன்படுத்தி மண்வளத்தைப் பாதுகாக்கின்றனர்.

**சவ்வாது மலையின் வேளாண்மை பயிர்களின் வகைகள்:**

சவ்வாது மலையில் நெல், வாழை, தக்காளி, மிளகாய், வெள்ளேரிக்காய் இதுப்போன்ற பயிர்களை நீர்வசதி உள்ள இடங்களில் பயிர் செய்கின்றனர். சாமை, தினை, கேழ்வரகு, கடுகு, சோளம், மக்காசோளம், அவரை, துவரை மரவள்ளிக்கிழங்கு, எள், கொள் இவைகள் மழைப்பெய்தால் மட்டுமே பயிர்ச்செய்ய முடியும் என்றும் இவைகள் வேலூர் மாவட்டத்திற்குப்பட்ட புதூர்நாடு, புங்கம்பட்டு நாடு, நெல்லிவாசல்நாடு ஆகிய மூன்று மூன்று நாடுகளிலும் நடைபெறும் வேளாண்மை முறையை மட்டும் இக்கட்டுரை பதிவுச்செய்கிறது.

**நெல்:**

சவ்வாது மலையில் நெல் முதன்மைப்பயிராகப் பயிர் செய்யப்படுகின்றது. நெல் ரகங்கள் ஐ.ஆர். 50 நான்கரை மாதமும், வெள்ளைப் பொண்ணி ஆறுமாத காலமும் அறுவடைச் செய்யப்படுகிறது. ஒருசில நிலங்கள் ஆண்டு முழுவதும் நீருடன் காணப்படும். இந்நிலங்களில் நெல்தவிர வேறு எதையும் பயிர்செய்ய முடியாது வடிகால் உள்ள நிலங்களில் அனைத்துப் பயிர்களும் பயிர் செய்யப்படுகின்றனர். நிலங்களை ஆநிறைகளின் துணைக்கொண்டு நிலத்தை உழுது பயிர் செய்கின்றனர். பயிர் செய்த ஒரு மாதத்தில் களை எடுக்கப்படுகின்றது. பெரும்பாலும் பெண்களே நாற்று நடும் வேலையில் ஈடுபடுகின்றனர். அறுத்த நெற்கதிர் கட்டுக்களாகக் கட்டப்பட்டுக் களத்துமேட்டிற்கு எடுத்துச் சென்று சேமித்து வைக்கின்றனர். வைக்கோலில் உள்ள ஒரு சில நெல்மணிகளை ஆநிறைகளின் துணைக்கொண்டு சேகரிக்கின்றனர். இதற்கு பொணத்தாம்பு காட்டுதல் என்று கூறுகின்றனர். தங்கள் தேவைக்கு அதிகமாக உள்ளவற்றை விற்றுவிடுகின்றனர்.

**மலைவாழை:**

சவ்வாதுமலையில் மலைவாழை பெரும்பான்மையான இடங்களில் பயிர் செய்யப்பட்டுள்ளது. காரணம் மலைவாழைக்கு நீர் அதிகளவு தேவையில்லை. வறண்ட நிலப்பகுதிகளில் மழையே நம்பியே இவ்வாழை பயிர் செய்யப்படுகிறது. நீர் அதிகம் உள்ள பகுதிகளில் மலைவாழை அதிக மகசூலைக் கொடுக்கிறது. ஒருவருடத்தில் வளர்ந்து பலனளிக்கும் மலைவாழையே வாணிகர்கள் நேரடியாக விவசாயிகளிடம் விலைக்கு வாங்கி சென்னை, காஞ்சிபுரம், மதுரை உள்ளிட்டப் பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். தரத்திற்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒரு காய் இரண்டு ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

**மரவள்ளிக்கிழக்கு**

மேட்டு நிலங்களில் மழையே நம்பியே மரவள்ளிக்கிழங்கு பயிர் செய்யப்படுகிறது. மழை பொழியாவிட்டால் அனைத்துப் பயிர்களும் காய்ந்துவிடும் ஆனால் இப்பயிர் காய்வதில்லை. இப்பயிருக்கு மூன்றுமுறை களை எடுப்பர். ஒரு அடி வளர்ந்துவிட்டால் களை எடுப்பதை நிறுத்திவிடுவர். காரணம் கிழங்கைவெட்டி அறுவடைச்செய்த அன்றே ஏற்றுமதி செய்வர். இல்லையெனில் கிழங்குகள் கசப்புத்தன்மை அடைந்துவிடும் வணிகர்கள் நேரடியாகச் சென்று தரத்தைப் பரிசோதித்து விலைக்கு வாங்குகின்றனர். ஒரு கிலோ ஏழு ரூபாய் முதல் பன்னிரண்டு ரூபாய் வரை கொள்முதல் செய்கின்றனர். கிழங்கானது 28 முதல் 30 புள்ளிகள் வரை வந்தால் தரம் வாய்ந்ததாக கருதப்படும்.

**வெள்ளேரிக்காய்**

வெள்ளேரிக்காய் பயிரிடுவதற்கு நிலத்தை நன்றாக உழுது நான்கு அடி இடைவெளிக்கொண்டு ஏழி போட வேண்டும். அரை ஏக்கர் பயிர் செய்வதற்கு 5000 விதை தேவைப்படுகிறது என்றும் அது நான்கு நாளில் முளைத்து வந்துவிடும் அது முளைத்த எட்டாவது நாளில் நான்கு இருக்கும் அதில் இரண்டு இலையை பறித்துவிட வேண்டும் இதற்கு ஒரு நாள் விட்டு ஒருநாள் தண்ணீர்விட வேண்டும் ஐந் நாள் கழித்து உரம்இட வேண்டும் 20 வது நாளில் கொடிக்கட்டுதல் வேண்டும். கொடிக் கட்டுவதற்கு 500 கதுவேல். சிறுகம்பி 15 கிலோவும் சருகு 20 கிலோவும் 90 வது நாள் வரை காய் வரும். இது ஒருநாள்விட்டு ஒருநாள் அறுவடைச் செய்வன். இது தரமானதாக இருந்தால் அரை ஏக்கரில் 5 டன் காய் வரும் என்றும் இந்த காய் ஐந்து ரகமாக பிரிக்கப்படுகிறது. இது மொத்தம் மூன்று மாதகால பயிராகும் இதில் செலவுப்போக 50000% இலாபம் வருவதாகவும் கூறுகின்றனர். இது ஊருக்காய் செய்வதற்காக பயன்படுவதாகவும் இது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாகவும் கூறுகின்றனர்.

**சாமை**

சாமை ஆறுமாதகாலப் பயிராகும். இதில் அவரை துவரை கலந்து விதைப்போடுவர். இது பதினைந்து அல்லது இருபதாம் நாளில் களை எடுப்பர். வைகாசிமாதம் விதைத்து ஐப்பசியில் அறுவடை செய்வர். வைகாசி மாதம் விதைத்தால் நல்ல விளைச்சலைக் கொடுக்கும் என்றும் கூறுகின்றனர். சாமை அறுவடைச் செய்து இரண்டு மாதத்திற்குப்பிறகு அவரை துவரை அறுவடை நடைபெறும். இதை உள்ளூர் வியாபாரியிடமோ (அ) திருப்பத்தூர் எடுத்துச்சென்றோ விற்பனைச் செய்கின்றனர்.

**கலப்புவிதை வேளாண்மை:**

கேழ்வரகு, திணை, கடுகு, முத்து ஆகியவை கலப்புப் பயிராகப் பயிர் செய்யப்படுகிறது. இப்பயிர்களுக்கு ஒருமுறை களை எடுக்கப்படுகிறது. முதலில் கேழ்வரகு அறுவடைச் செய்யப்படுகிறது. அதன் பிறகு திணையும் அதன்பிறகு கடுகு முத்தும் அறுவடை செய்வர் கேழ்வரகை மாவாக்கி கூழ் (மற்றும்) களி செய்து உணவாக உட்கொள்வர். திணை சாதகமாகவும் கடுகு சமையல் செய்வதற்கும் முத்தக்கொட்டை விளக்கென்னை எடுப்பதற்கும் பயன்படுத்துகின்றது இதுப்போன்று பலப் பயிர்களை கலப்புப் பயிராக பயன்படுத்தி வருகின்றனர்.

**பயிர்களை பாதுகாக்கும் முறை:**

பயிர்களைப் பறவைகளும் விலங்குகளும் சேதப்படுத்துவதுண்டு அதனால் மலையாளிகள் வில் அம்பு, கவண்கல் மற்றும் மேளம் போன்றவற்றைப் பயன்படுத்திப் பறவைகளை விரட்டுவதை களப்பணியின் போது காணமுடிந்தது. பகல் பொழுதில் ஆட்கள் இல்லாத நேரம் பயிர் பாதுகாப்பிற்கு நாய்களைக் கட்டிவிட்டு செல்கின்றனர். இரவுநேரங்களில் காட்டுப்பன்றி, காட்டு எருமை, யானை போன்ற விலங்குகளின் தொந்தரவுகள் அதிகமாகக் காணப்படுவதால் பயிர்செய்த இடத்திற்குச் சென்று அருகில் பெரிய பாறைகள் இருப்பின் அதன்மீதும் மரத்தின்மீதும் அமர்ந்து காவல் காக்கின்றனர். மிருகங்கள் வந்தால் தீ வெளிச்சத்தைக் காண்பித்தும் ஒலியெழுப்பியும் விலங்குகளை விரட்டுகின்றனர்.

**வாரச்சந்தை:**

புதூர்நாட்டில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை சந்தை நடைபெறுகின்றது. இதுவே இம்மூன்று நாடுகளுக்கும் பெரிய சந்தைப் பகுதியாகும். காய்களின் உணவு தானியங்கள், பழவகைகள் ஆகியவற்றை விற்பனை செய்து வருகின்றனர். இச்சந்தை இரண்டுமணி வரை நடைப்பெறும் இச்சந்தையில் இந்த மூன்று நாட்டு வணிகர்கள், விவசாயிகள், பொதுமக்கள் என எல்லோரும் பங்கேற்கின்றனர்.

**முடிவுரை:**

எண்ணற்ற இயற்கை வளங்களைப் பெற்றுத்திகழ்ந்த சவ்வாதுமலை தற்பொழுது தன் இயல்பை இழந்து வருகிறது. இயற்கை வேளாண்மை என்ற நிலைமாறி இயந்திரங்களின் வரவால் செயற்கை நோக்கி சென்றுக்கொண்டு இருக்கின்றன. நிலங்களில் வேலையினை ஆண்களும் பெண்களும் பகிர்ந்து கொள்கின்றனர். காலைமுதல் மாலைவரை நிலத்தில் வேலைச் செய்கின்றனர். நெல் வயல்களில் வேலைசெய்து நெல்லை கூலியாகவும் பெறுகின்றனர். அறுவடைச் செய்ததை பிரித்தெடுக்க ஆநிறைகளை பயன்படுத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவே ஜவ்வாது மலையின் வேளாண்மை முறையாகும்.

# ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளின் வாழ்வியலும் படைப்புகளும்


***முனைவர் க.இரமேஷ்***
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,*
*வேலூர் - 632 115.*

***சு. கணேசன்***
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,*
*வேலூர் - 632 115.*


**முன்னுரை**

சுமார் முன்னூறு ஆண்டிற்கு முன்பு வாழ்ந்த துறவி துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார். இவர் பக்தி அறநெறியோடு சைவ சமயத்தை போற்றியும் சிவபிரானையும், முருகப்பெருமான், குருவின் மீதும் பல நூல்களை இயற்றி சைவத்தை வளர்த்த செம்மல் ஆவார். இவரின் வாழ்க்கை துறவு அறநெறி பற்றிய செய்தியையும் படைப்புகளின் சிறப்பையும் காண்போம்.

**சிவப்பிரகாசரின் பிறப்பு:**

சிவப்பிரகாசர் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்று அவர்களின் செய்யுளில் கருத்தையும் கொண்டு அவரது காலத்தை கணக்கிடும் போது சிவப்பிரகாசர் 32 வயதுவரை வாழ்ந்தவர் என்பதும் தெளிவாகிறது.

இவர் காஞ்சிபுரத்தில் முந்நூறு ஆண்டிற்கு முன்னர் வாழ்ந்த குமாரசுவாமி தேசிகர் என்றும் பெயருடைய ஒருவர் வாழ்ந்து வந்தார். இவர் வேளாண் மரபினருக்குக் குருவாயிருந்தவர்.

வீரசைவர் இவர்தம் இல்லறத்தின் பயனாக மூன்று ஆண பிள்ளைகளையும், ஒரு பெண் பிள்ளையும் பெற்றார். இவர்களுள் புதல்வரே சிவப்பிரகாசராவார். வேலையச்சுவாமிகள், கருணை பிரகாச சுவாமிகள் இருவரும் தம்பியராவர், ஞானாம்பிகை என்பது இவரது தங்கையின் பெயராகும்.[1]

**சிவப்பிரகாசரின் குருகுலக் கல்வியின் சிறப்பு:**

செந்தமிழ் பயின்ற சிவப்பிராகசர் பேரிலக்கணங்களைப் பெரிதும் கற்க விரும்பிச் சிவப்பிரகாசர் தென்னாட்டிற்குச் சென்றனர். இடையில் சிவப்பிரகாசர் வாலிகண்டபுரத்திற்குத் தெற்கிலுள்ள துறைமங்கலம் அண்ணாமலை ரெட்டியார் என்பவரால் ஆதரிக்கப் பெற்று. அவருக்கு அறநெறிகளைக் கற்பித்து பின்பு அவரிடம் விடைபெற்றுத் தருமபுர ஆதீனத்து வெள்ளியம்பலவாண சுவாமிகளை அடைந்தார் வெள்ளியம்பலவாணசுவாமிகள் சிவப்பிரகாசரைப் பல சோதனைகள் செய்து பின்னர் மாணவராக ஏற்றுக் கொண்டார் அவருக்கு ஐந்திலக்கணங்களையும் ஆர்வமுடன் கற்பித்து முடித்தார்.[2]

**குருவிற்கு காணிக்கை:**

சிவப்பிரகாசர் ஐந்திலக்கணமும் கற்ற அன்பின் மிகுதியால் ஆசிரியருக்கு காணிக்கை கொடுக்க முற்பட்டார் ஆசிரியரோ காணிக்கையை ஏற்க மறுத்துவிட்டார். அதற்குப் பதிலாக, தம்மைப் பழிக்கும் தமிழ்ப் புலவர் ஒருவரை புலமையில் வென்று அவரைத் தம்மிடம் பணிய வைக்க வேண்டும் என்றார். சிவப்பிரகாசர் ஆசிரியர் கூறியதை மனத்துட் கொண்டு திருச்செந்தூருக்கு சென்றார். அத்தமிழ் புலவரை கண்டார் சிவப்பிரகாசர் வெள்ளியம்பலவாணர் மாணவர் என்பதால் சிவ்பிபரகாசரின் குருவை பழிக்க தொடங்கினார் பின்பு ஒருவரை ஒருவர் வாதிட்டுக் கொண்டனர்.

பின்னர் இருவரும் தமக்குள் ஓர் உடன்பாடு செய்து கொண்டனர். யாரொருவர் திருச்சீரலைவாய் முருகன் பெயரில் நீரோட்டக யமக அந்தாதி (உதடு ஒட்டாமல் பாடும் பாட்டு) பாடிமுடிக்கின்றாரோ அவருக்கு மற்றவர் அடிமை என முறை ஏற்படித்துக் கொண்டனர். முருகன் அருளால் சிவப்பிரகாசர் முதலில் பாடிமுடித்தார் பின் அத்தமிழ் புலவரை அழைத்து வந்து தம்குருவிடம் பணிய செய்தார்.[3]

**சிவப்பிரகாசரின் புலமையின் சிறப்பு:**

தமிழ், கன்னடம், வடமொழி முதலிய மொழிகளில் இவருக்கிருந்த புலமைத் திறங்களை இவர்தம் நூல்களால் அறியலாம். வீர சைவக் கோட்பாடுகளை விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துச் சொல்லும் நூல்களுள் இவர்தம் நூல்கள் முதன்மையும் முழுமையும் பெற்றவையாகும். இவரருளிய நூல்களில் காணல்பெறும் கற்பனைச் செறிவையும் நிறைவையும் நோக்கிக் 'கவிசார்வபௌமர்' என்றும் கற்பனைக் களஞ்சியம்' என்றும் போற்றப்படுகின்றார். [4]

**தலப்பயணமும் திருமடங்களும்:**

தமிழகத்தில் 'மடங்கள்' அமைத்து அதில் அருள் நிலையுடையோர் தங்கிப் பணிகள் செய்யும் பழக்கம் முற்காலத்தில் இருந்துள்ளது. நாயன்மார் காலத்தில் திருமடங்கள் சமயச் செந்நெறியை வளர்க்கும் அமைப்பில் நாடெங்கும் உருவாயின. அடியார்களும், அருளாளர்களும் அத்திருமடங்களில் தங்கித் தத்தம் சமயப் பணிகளை வார்த்தனர் சிவப்பிரகாசர் பலதிருமடங்களுக்குச் சென்று கடவுளை வழிபட்டார் துறைமங்கலம், திருநெல்வேலித் தருமபுர ஆதீனம், இறைமடம், திருவெங்கைமடம், துறைமங்கலம், சிதம்பர மடம், பொம்மபுரம், திருக்கூடவத்தில் பொம்மையை பாளைய நல்லாற்றூர் போன்ற ஊரில் உள்ள மடங்களில் தங்க சமய பணிகளை மேற்கொண்டார்.[5]

**மாணிக்கவாசகர் – சிவப்பிரகாசர் மதிப்பீடு:**

சிவப்பிரகாசர் ஞானாசிரியர் சிவஞானபாலய தேசிகராம் குருவருள் பெற்றுச் சிவானுபூதிச் செல்வராக வாழ்ந்தவர். இத்தகு தெய்வீக வாழ்வினராகிய சுழலில் தெய்வீக வாழ்க்கையுடைய மாணிக்க வாசகரிடத்து இயல்பிலேயே ஈடுபாடு உடையவராக விளங்கியமை இவரது படைப்புகளின் வாயிலாக அறியமுடிகிறது. சிவப்பிரகாசன், மாணிக்கவாசகன் மாணிக்க மதலை எனும் பெயர்களைத் தம் நூல்களுள் ஆளுவதன் மூலம் தனது அன்பினை வெளிப்படுத்துகின்றார். மேலும் மாணிக்கவாசகரின் ஆற்றலை எண்ணி வித்தகன், வீரன் என்னும் பெயரை அமைத்துப் பாராட்டுகின்றார். தலைமைசான்றார் எனும் பொருளில் அண்ணல் என்றும், புலன்களை வென்றவர் என்றும் பொருளில் வீரன் என்றும் பாராட்டுகின்றார். எக்காலத்தும் அன்பே வடிவானவர் எனும் முறையில் அன்பன் என்றும் குறிப்பிடுகின்றார்.[6]

மாணிக்க வாசகர் போற்றும் மாசிலாமணி ஈசனை சிவப்பிரகாசர் தாம்பாடி இட்டலிங்கத் தோத்திரப் பாமாலையில் பொன்னிடத்து அமைந்த மணி எனப் போற்றித் தம் பத்திமை மாண்பினை வெளிப்படுத்தி உள்ளார்.

**இரு பெருஞ்சைவத்திற்கு ஒரு பெரும் சமய சந்தான குரவர் சிவப்பிரகாசர்:**

சமயக்குரவர் நால்வரும் சிவஞான போதம் முதலான சாத்திரங்களைச் சந்தான குரவர் நால்வரும் அருளியுள்ளார். சிவப்பிரகாசர் தோத்திர, சாத்திர நூல்களை அருளிய வகையில் சமய குரவராகவும், சந்தான குரவராகவும், சைவத்திற்கும் வீரசைவ நெறிக்கும் விளங்குகின்றார் என்றும் உண்மையை எண்ணும்போது அவர்தம் தோற்றச் சிற்பும் ஞான நூல்களை அருளிய தொண்டின் உறைப்பும் அருமை பெருமை தெரிந்த அனைவராலும் வியந்து வணங்கத் தக்கனவாக உள்ளன எனலாம்.[7]

**படைப்புகளின் சிறப்பு:**

உணர்வினில் வல்லோராகிய இவ்வனுபூதிச் செல்வர். காலங்கடந்தும் ஞானத்தில் விளங்கி நன்னெறிப்படுத்தும் ஒப்பிலா இலக்கியங்கள் முப்பத்து நான்கினைப் படைத்துள்ளார். இவை காப்பியம், சிற்றிலக்கியம், நீதி இலக்கியம், தருக்கநூல், சமய இலக்கியம், தத்துவ நிலையில் சைவ சித்தாந்தம், வீர சைவ சித்தாந்தம், வேதாந்தம் முதலியனவாகப் பல பகுதிகளில் அமைந்துள்ளன. இவையாவும் இலக்கிய, சமய தத்துவங்களின் ஞானக் கருவூலங்கலாகும். இவற்றுள் தலவெண்பா, கொச்சக கலிப்பா, திருவெங்கையலங்காரம் என்னும் மூன்று நூல்கள் இதுவரை கிடைத்ததில் ஏசு மத நிராகரணம் என்றும் கிருத்துவ சமய மறுப்பு நூலின் ஓலைச்சுவடி லண்டன் பொருட்காட்சியத்தில் இருப்பதாகவும் அந்நிலை தமிழகத்திற்கு கொண்டு வருவதற்காக முயற்சி நடைபெறுவதாகவும் அறியப்படுகிறது.[8]

**சோணசைலமாலை:**

திருவண்ணாமலை ஒருமுறை வலம் வருவதற்கள் நூறுபாடல்களை நேரிசை – வெண்பாவில் எழுசீர் கழிசெடில் ஆசிரிய விருத்தம் அமைத்து பாடி முடித்தார் என்று கூறுவர்.[9]

ஞாயிறும் திங்களும் மேற்கு மலையிலும், கிழக்கு மலையிலும் பொருந்த, தேவரீர். நடுவில் பெரிய மழையுருவாக எழுந்தருளியிருத்தல், இரண்டு பக்கத்தும் மாணிக்குடங்களையுடையக் காவடியை பூமியில் வைத்து நிற்கின்றவரை ஒத்து இருக்கின்ற சோணசைலனே! கைலைநாயகனே! விரைந்து செல்கின்ற இடத்தை ஊர்ந்தருகின்ற தேவரீரை பிறவாமையை விரும்பி வேண்டுகின்றவர் வேண்டக் கடவாராகய மிகுதியான தமிழ்ச் சொற்களாகிய மலர்களைத் தேவரீருக்குச் சாத்துகின்ற பிறவியையே அடியேன் விரும்புகின்றோன்.[10]

கார்த்திகை தீபத்தை உச்சியில் ஏற்றி அத்தீபத்தையும், மலைவடிவான தங்களையும் கண்டு தீயாணித்தவர் மனம் இருள் முழுவதையும் போக்கி அருளுமாறு உயர்ந்து விளங்கும் சோணசைலப் பெருமானே! திருக்கயிலை நாயகனே! ஆரவார அலைகளையுடைய கடலில் தோன்றிய ஆலகால விஷத்தை அமுதமாக ஏற்றுப் புகழ்பெற்ற தாங்கள் அதனைப் போல கொடியனாகிய என்னை ஏற்று நின் திருவடிக்கு அன்பனாக்கவில்லையே? என் செய்வேன். என திருவண்ணாமலை வாசன் அண்ணமலையாரை போற்றி பாடுகின்றார். [11]

**சிவப்பிரகாசரின் ஜோதிடப் புலமை:**

பிரபுலிங்க லீலையில் மாயையின் பேரழகைக் கண்டு புலன்களை வென்ற முனிவர்களும் காமுற்றனர். என்பதைப் புலப்படுத்த வந்த சிவப்பிரகாசர் தம் ஜோதிட நூற்புலமையைப் புலப்படுத்தியுள்ளார். மன்மதன், மாலையின் அழகைக் கருவியாகக் கொண்டு முனிவர்களாகிய தன் பகையை வெல்லக் கரும்பு வில்லில் மலர்க் கணைகளைத் தொடுத்தான் என்கின்றார். [12]

பகைவெல்லும் தகையை மேற்கொண்டோர் தமக்கு வெற்றி வாய்ப்புக்குரிய நல்ல நாளிலே போர் தொடுக்க வேண்டும். கன்னி ராசியிலுள்ள சந்திரனின் முழுப் பார்வையுடன் செவ்வாய் (அங்காரகன்) வலிவுடன் இருக்க வேண்டும். சிங்க ராசியில் உள்ள இராகுவின் பலமும் சேர்ந்திருக்க வேண்டும் இத்தகைய அமைப்புள்ளச் சாதகர்கள் போரில் வெற்றி பெறுவார்கள் என்பது ஜோதிடக் கலையின் சிறப்பை வெளிப்படுத்தியுள்ளார்.[13] மன்மதன் இத்தகையைச் சோதிட அமைப்புள்ளவனாக முனிவர்கள் மேல் மலரம்புகளை ஏவினாள் என்று சிலேடை வகையில் சிவப்பிரகாசர் செப்புகின்றார்.

**சித்தாந்த சிகாமணி:**

சிவப்பிரகாசரால் தமிழில் மொழிபெயர்த்துச் செய்யப்பெற்ற இந்நூலுக்கு மூலநூல் வடமொழியில் ரேணுகாசாரிய யோகி என்னும் ஞானி செய்த சித்தாந்த சிகாமணி ஆகும். இதில் பொருள்களும் அங்கலிங்க ஐக்கிய விவரங்கள் கூறும் வகையில் கலப்பு, பாயிரம் உட்பட எண்ணூற்று என்பது செய்யுட்களால் வீர சைவத் தத்துவத்துடன் பொருள்கள் கூறப்பெற்றுள்ளன.[14]

தத்துவ ஆராய்ச்சி அனுபூதி என்றும் இரு நிலைகளில் சிவஞான யோகியர்கள். இறைஞானத்தை அறிந்து அறிவிக்க இந்நூல் பெரிதும் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை. சுருங்கக் கூறின் இந்நூல் வீரசைவத்தத்துவக் களஞ்சியம் என்று சொல்லலாம். [15]

இதனை ஆதீனப் பொருள் உதவியுடன் வீரமகேஸ்வரர் திரு.செ.நாகி செட்டியார் 1910 ஆம் ஆண்டு உரையுடன் வெளியிட்டுள்ளார்.

**முடிவுரை:**

சிவப்பிராச சுவாமிகள் சைவ சைவசமயத்திற்கு பெரும் தொண்டாற்றினர் இவர் துறவு, குருகுலசிறப்பு, ஜோதிடப்புலமை, நூற்சிறப்பு போன்றவற்றின் மூலம் இவரது சிறப்பை அறியலாம்.

**அடிக்குறிப்பு:**

1. வேல். மகேஸ்வர் திருவெங்கைக் கலம்பகம் ப.22.
2. புலவர் ச.சீனிவாசன் திருவெங்கைக்கோவை. ப.20.
3. ம. மனோன்மணி சிவப்பிரகாசர் ப.34.
4. சிவ. இராசேந்திரன் நூல்கள் நான்மணிமாலை ஓர் ஆய்வு – பக். 10,11.
5. ஆ. காளத்தி பிரபுலிங்கலீலை – ப.8.
6. ம.மனோன்மணி – சிவப்பிரகாசர், ப.76.
7. க.விநாயகம், மாணிக்க வாசகரும் – சிவப்பிரகாசரும் ஓர் ஆய்வு – ப.159.
8. இராசேந்திரன் நூல்வர் நாண்மணிமாலை ஓர் ஆய்வு ப.12.
9. மேலது – ப.13.
10.வ.ஞானப்பிரகாசம், சோணசைலமாலை ப.3
11. க.விநாயகம் – சோணசைலமாலை முலமும் உரையும் ப.8.
12. ம.மனோன்மணி, சிவப்பிரகாசம், ப.4.
13. செ.வேங்கடராமன் சிவப்பிரகாசர் சிந்தனைகள் ப.32.
14. ச. சீனிவாசன், திருவெங்கைக்கோவை ப.470.
15. மேலது – ப. 475.

# நற்றிணையில் இறைச்சி

**முனைவர் க. இரமேஷ்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,*
*வேலூர் - 632 115.*

**க. கோவிந்தராஜி**
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,*
*வேலூர் - 632 115.*

**முன்னுரை:**

ஒவ்வொரு சொல்லும் தனித்தனி பொருளை வெளிப்படுத்துகின்றன இதனையே தொல்காப்பியர் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்று கூறுகிறார். அந்தச் சொல் தனக்குரிய பொருளினை அப்படியே வெளிப்படுத்துவதும், சில இடங்களில் வேறு பொருளாகவும் மாறி வருவதும் உண்டு. அப்படி தனிச்சொல் தொடரில் வரும்போது தனக்குரிய பொருளினின்று வேறு பொருளினை வேறு பொருளினை குறிப்பால் உணர்த்துவது போலவும் தொடர்களும் தனக்குரிய பொருளினின் வேறு பொருளினை குறிப்பால் உணர்த்துவதே 'குறிப்புப் பொருள்' ஆகும்.

குறிப்புப் பொருளினை குறித்த செய்திகள் நமக்கு முதன் முதலில் தொல்காப்பியத்தில் கிடைக்கின்றன. தொல்காப்பியர் உள்ளுறை, இறைச்சி, முதலான குறிப்புப் பொருள்களை குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் உரைகளில் உள்ளுறை இறைச்சி குறித்ததான கருத்து வேறுபாடு காணப்படுகிறது. ஆனாலும் உரையாசிரியர்களின் உரைகளை ஆழ்ந்து நோக்கும் போது நாம் உள்ளுறை, இறைச்சியின் உண்மைப் பொருளை புரிந்து கொள்ள முடியும்.

**உள்ளுரை:**

இறைச்சிப் பொருளை பார்பதற்கு முன்பு உள்ளுரையை பற்றிய தெளிந்த அறிவு நமக்கு காணப்படுமாயின் இறைச்சிப் பொருளை புரிந்துக் கொள்வதில் உள்ள குழப்பத்தினை ஓரளவிற்கு தவிர்க்கலாம்.

**உள்ளுறையின் பொது இலக்கணம்:**

தொல்காப்பியர் அகத்திணையியல், கற்பியல், பொருளியல், உவமயியல் போன்ற நான்கு இயல்களில் உள்ளுறை, இறைச்சி என்ற குறிப்புப் பொருள் கோட்பாடுகள் பற்றி விளக்கியுள்ளார். அகத்திணையியலில் உள்ளுறை உவமத்தையும், கற்பியலில் இறைச்சியையும், பொருளியலில் இறைச்சியைப் பற்றியும், உள்ளுறையிள் வகைகளைப் பற்றியும் சுட்டியுள்ளார்.

(உள் + உறை) உள்ளுறை, உள்ளே உறைவது. அதாவது சொல்லப்பட்ட பொருளின் உள்ளே உறைவது, உள்ளுறை ஆயிற்று என்று தமிழண்ணல் கூறுகின்றார். தெரியாத பொருளை தெளிவாக்குவதற்கும் காதல் சம்மந்தமான நிகழ்வுகளைப் பெரும்பாலும் அகத்திணைப்பாடல்களில் பகிர்ந்துக் கொள்வதற்கும் உள்ளுறை உவமம் கையாளப்படுகின்றது. வெளிப்படை உவமையானால் அதில் உவமேயம் இருக்கும். ஆனால் உள்ளுரை உவமத்தில் உவமேயம் வெளிப்படையாகத் தெரியாது. அது பாடலின் உள்ளே அமைந்துக் காணப்படும்.

தொல்காப்பியர் உள்ளுறையை

*''உள்ளுறுத்து இதனொடு ஒத்தப்பொருள் முடிகென*
*உள்ளுறுத்து உறைப்பதே உள்ளுறை உவமம்''*
*(தொல். 994)*

*''உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன் எனக்*
*கொள்ளும் என்ப குறியறிந்தோரே''*
*(தொல். 992)*

என்ற நூற்பாக்களில் குறிப்பிடுகின்றார். உள்ளுரைக்கு உரை காணும் ''இளம்பூரணர்'' உள்ளுறையாவது பிறிதொரு பொருள்படுமாறு நிற்பதாகும். அது கருப்பொருள் பற்றி வருமென்று கூறப்பட்டுள்ளது.'' என்று உள்ளுறையைப் பற்றிய பொதுக் கோட்பாடாக விளக்கியுள்ளார்.

''நச்சினார்க்கினியர்'' பின்வருமாறு அதற்கு விளக்கும் தருகிறார். ''ஒன்றனை உள்ளுறுத்து அதனை வெளிப்படாமற் கூறலின் அவற்றை உள்ளுறை என்பர்'' என விளக்கியுள்ளார். மேலும் அவர் ''இவை கரந்தே கூறப்படுதறிற் கெடலரு மரபின் என்றார்''. உள்ளுறை வெளிப்படையாக கூறாமல் மறைத்தே கூறப்படும் தப்பாத மரபினை உடையது என்பதே நச்சினார்க்கினியர் கருத்தாகும். இவருடைய கருத்து மிகவும் பொருத்தமுடையதாக பலரும் ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

மேலும் தொல்காப்பியர் உள்ளுறையின் வகைகளை உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என்று ஐந்தாக குறிப்பிடுகிறார்.

*''உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பெனக்*
*கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே'' - (தொல். 1188)*

எனவே உள்ளுறை என்பது ஒன்றனை உள்ளே மறைத்து பிரிதொரு பொருள் புலப்படுமாறு கூறுவதாகவும். தெய்வம் நீங்கிய கருப்பொருளினை இடமாகக் கொண்டு வரும். மேலும் உள்ளுறை தோழி, தலைவிக்கு மட்டுமின்றி தலைவன் முதலிய அனைவரின் கூற்றுக்குரியதாகவும் அமையும் என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

உள்ளுறை உவமத்தில் வரும் பொருளைக் கொண்டு வேறு ஒரு பொருளை நினைக்க முடிவதால் இலக்கண ஆசிரியர்கள் உள்ளுறை உவமத்தினை ''உவமப்போலி'' என்று மற்றொரு பெயராலும் குறிப்பிடுகின்றனர்.

**இறைச்சி:**

தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியரும் அவரைப் பின்பற்றிய அறிஞர் பலரும் தொல்காப்பியரின் குறிப்புப் பொருள் கோட்பாடாக இறைச்சியையும் குறிப்பிட்டுள்ளார். இந்த இறைச்சியும் உள்ளுறையும் தனித்தனியானவையா அல்லது உள்ளுறையின் வகைகளுள் உடனுறைதான் இறைச்சியோ என்பதில் தெளிவு காணப்பட வேண்டும்.

**இறைச்சி என்ற சொல்லின் பொருள்:**

இறைச்சி என்ற சொல்லின் பொருளை விளக்கிவிட்டால் இறைச்சிக் கோட்பாடு விளங்கினால் என்று தமிழண்ணல் குறிப்பிடுகின்றார். எனவே இறைச்சி என்ற சொல்லை ஆராய்ந்தால் அதன் கோட்பாட்டை எளிதில் புரிந்துக் கொள்ளலாம். இறைச்சி என்ற சொல்லின் பொருளாக மதுரைத் தமிழ் பேரகராதி தசை, மாமிசம், கருப்பொருள் என்ற பொருளினைக் குறிப்பிடுகிறது.

இறைச்சி என்ற சொல்லின் வேர்ச்சொல் ''இறு'' என்பதாகும். இறு என்ற சொல்லின் பொருளாக தமிழ்ச் சொல்லகர முதலி Abiding, hatting, tarriying ஆகிய பொருள்களைக் குறிப்பிடுகிறது. இச்சொற்கள் நிலைத்திருக்கிற, தங்குகிற, நிற்கிற என்ற பொருளைக் கொண்டது. ஆக ''இறு'' என்ற வேர்ச்சொல் தங்கு என்ற பொருளைக் கொண்டதாக அமைகிறது. எனவே தசை தங்கியிருக்கிற ஒன்று ''இறைச்சி'' எனப்படும். இப்பெயர் பறவை, விலங்குகளுக்கே உரியதாகவும் காணப்படுகிறது.

மேலும் இறைச்சி என்ற சொல் தாவரங்களுக்கு பொருந்தாது என்பதனை நாம் இங்கு உணர வேண்டும். ஆக இறைச்சி என்ற சொல்லின் முதற்பொருளை ஆராய்வோமாயின் இறைச்சி என்பது விலங்கு பறவைகளின் பொதுப்பெயரே இறைச்சியின் முதற்பொருள் என்பதும் தெளிவாகிறது.

**தொல்காப்பியத்தில் இறைச்சி:**

தொல்காப்பியர் இறைச்சி என்ற சொல்லை பெயரியலில் ஓரிடத்திலும், கற்பியலில் இரண்டு இடங்களிலும், பொருளியலில் மூன்று இடங்களிலுமாக ஆறு இடங்களில் குறிப்பிட்டுள்ளார். அவை.

*''இறைச்சிப் பொருள்வயின் செய்யுளிற் கிளக்கும்'' (தொல்: 681)*

*"இடைச்சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி"*
*(தொல்: 1094)*
*"ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியும்"*
*(தொல்: 1116)*
*"இறைச்சி தானே உரிப்புறத் ததுவே"*
*(தொல்: 1175)*
*"இறைச்சியிற் பிறக்கும் பொருளுமாருளவே"*
*(தொல்: 1176)*
*"அன்புறு தருந இறைச்சியுற் சுட்டலும்*
*(தொல்: 1177)*

இச்சொல்லை தொல்காப்பியர் மேற்குரிய இடங்களில் எந்தெந்த பொருளில் கையாண்டுள்ளார் என்று ஆராய்வது இன்றியமையாததாகும். அவ்வாறு உரையாசிரியர்களின் துணைக் கொண்டு மேற்குறிப்பிட்ட நூற்பாக்களை ஆழ்ந்து ஆராய்கின்ற போது இறைச்சி என்ற சொல்லை தொல்காப்பியர் விலங்கு பறவைகளின் பொதுப்பெயர் என்ற பொருளிலும் இறைச்சிக் கோட்பாடு என்ற பொருளில் தான் பயன்படுத்தியுள்ளார். என்றும் வெறும் கருப்பொருள் என்ற பொருளில் இதனை தொல்காப்பியர் பயன்படுத்தவில்லை என்பதும் தெளிவாகும்.

**இறைச்சி என்பது இயங்கு திணை:**

உள்ளுறையில் கருப்பொருளைக் கொண்டு திணையை உணரலாம் என்று கூறிய தொல்காப்பியர் இறைச்சியைக் கொண்டு திணையை உணரலாம் என்று கூறவில்லை. இது ஏன் என்பது ஆராயத்தக்கதாகும். இயங்கு திணைகளாகிய விலங்கு, பறவைகள் இடம்விட்டு இடம் பெயர்பவைகளாக இருப்பதினால் இவற்றைக் கொண்டு திணையை வகுப்பது கடினம் என்று கருதி அவ்வாறு கூறவில்லை.

உணர்ச்சிகளை சிறப்பாக கூறவரும் நிலைத்திணைக் கருப்பொருளான தாவரம் இடம்பெறத் தேவையில்லை என்றே தொல்காப்பியர் கருதினார். எனவேதான் எல்லாவகைக் கருப் பொருள்களும் இறைச்சியில் இடம்பெறும் என்று அவர் குறிப்பிடவில்லை. உள்ளுறை இயங்குதிணை, நிலைத்திணைக் கருப்பொருள்களை இடமாகக் கொண்டு பிறக்கும் என்பதும், இறைச்சி விலங்கு, பறவை ஆகிய இயங்குதிணைக் கருப்பொருள்களை மட்டும் இடமாகக் கொண்டு பிறக்கும் என்பதும் இவற்றிற்க்கிடையேயான அடிப்படை வேறுபாடாகும்.

**நற்றிணையில் இறைச்சி:**

தொகுக்கப்பட்ட காலத்திலேயே "நல்ல" என்ற அடைமொழியோடு தொகுக்கப்பட்ட நற்றிணையில் மேற்கண்ட இறைசசிப்பொருள் எவ்வாறு இடம் பெற்றிருக்கின்றன என்பதைக் காண்போம்.

**உடன்போக்கில் இறைச்சி:**

தலைவனும் தலைவியும் உடன்போக்காக காட்டின் வழியே செல்லும் போது தலைவன் தலைவியின் வருத்தத்தை கலையும் பொருட்டு காட்டின் இயற்கையை காட்டி பின்வருமாறு கூறுகின்றான்.

*"வன்சுவல் பராரை முருக்கிக் கன்றொடு*
*மடப்பிடி தழீஇய தடக்கை வேழம்*
*தேன்செய் பெருங்கிளை இரிய வேங்கைப்*
*பொன்புரை கவழம் புறந்தருபு ஊட்டும்"* *(நற். 202)*

தலைவனும் தலைவியும் சுரத்தே நடந்து செல்லும் போது அங்கு ஆண்யானை தன்னுடைய கன்றுடன் பெண்யானையை தழுவிச் சென்று வேங்கை மரக் கிளைகளிலிருந்து இலைகளை கவளமாக தன் கன்றுக்கும் பெண்யானைக்கும் ஊட்டும். இப்பாடலில் "கன்றொடு பிடியையும் தழுவிய வேழம் வேங்கைப் பூங்கொத்தை கவளமாக ஊட்டும்" என்ற தொடரின் உள்ளே, தலைவன் தலைவியை மணந்து இல்லறம் நடத்தி அவளிடத்தில் பிறக்கும் பிள்ளைகளுடனே அவளையும் தான் பொருள் தேடி கொணர்ந்து பாதுகாத்துக் கொள்வேன் என்ற இறைச்சிப்பொருள் மறைந்து வருவதை காண்கிறோம். இந்தப் பாடலில் இயங்குதிணைக் கருப்பொருளான "யானை" இறைச்சிப் பொருளாக வருகிறது.

**தலைவியை பிரிய நினைக்கையில் இறைச்சி:**

தலைவன் தான் பொருள் தேட சென்று விட்டால், தலைவியை காணாது தன் நெஞ்சு வருந்தும் மேலும் தலைவியும் துன்பத்தால் வாடுவாள். எனவே, தலைவியின் துயரை நினைத்து தலைவன் பொருள் தேட செல்ல தவிர்ப்பதை "வீற்றூற்று வண்ணக்கன் தத்தனார்" அழகான இறைச்சிப் பொருளைக் கொண்டு இப்பாடலை அமைத்துள்ளார்.

*செங்கணை தொடுத்த செயிர் நோக்கு ஆடவர்*
*மடிவாய்த் தண்ணுமைத் தழுங்கு குரல் கேட்ட*
*எருவைச் சேவல் கிளைவயிற் பெயரும்"* *(நற் – 298)*

வழிப்பறி செய்யும் மறவர்கள் தண்ணுமையை முழங்குவர்கள் அவ்வோசையைக் கேட்டு எருவைச் சேவல் தன்னுடைய இனத்தோடு போய் சேர்ந்துக் கொள்ளும். இந்தப் பொருளினுள்ளே எருவைச் சேவல் தண்ணமைக்கு அஞ்சி தன்னுடைய இனத்தினை நாடிச்

செல்கிறது என்ற பொருளிலிருந்து தலைவன் பொருளைத் தேடி சென்றாலும் தலைவியின் துயரை எண்ணி மீண்டும் தலைவியையே வந்து சேர்ந்து விடுவான் என்ற இறைச்சிப் பொருளை காண முடிகிறது.

**பிரிவிடை ஆற்றாத நிலையில் இறைச்சி:**

தலைவன் குறித்த காலத்தில் வராததால் தினமும் மாலைப் பொழுதில் தலைவி தலைவனை நினைத்து, ''நம்மை வருத்துகின்ற இந்த மாலைப் பொழுது தலைவன் சென்ற நாட்டில் இல்லையோ'' என்று வருந்தும் காட்சியை ''கருவூர் கதப்பிள்ளை சாத்தனார்'' இறைச்சிப் பொருளைக் கொண்டு சிறப்பான பாடலைப் படைத்துள்ளார்.

*''தாது எரு மறுகின் ஆ புறம் தீண்டும்*
*நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து*
*உகு பலி அருந்திய தொகு விரற் காக்கை'' (நற் - 343)*

பசுக்கள் மாலையிலே வீடு திரும்பும் போது வழியில் இருக்கும் ஆலமரத்தின் விழுதுகள் முதுகினை வருடும். அந்த ஆலமரத்தின் அடியில் கடவுளுக்கே படைக்கப்பட்டிருக்கும் பலிச் சோற்றினை தின்ற காக்கை தன்னுடைய கூட்டத்தினை சென்று சேரும்.

இந்தப் பாடலில் இரண்டு இறைச்சிப் பொருள்கள் அமைந்துள்ளன. ஆலமரத்தின் கீழ் கடவுளுக்கு படைக்கப்பட்ட பலிச் சோற்றைத்தின்ற காக்கை தன்னுடைய சுற்றத்தினை சென்று வேரும் என்ற பொருளில் என்னுடைய அழகினை எல்லாம் உண்ட இந்த பசலை நோய் இப்போது என் நெற்றியினிலே வந்து சேர்ந்துவிட்டது என்ற இறைச்சிப் பொருள் வெளிப்படுகிறது. மேலும்

ஆலமரத்தின் விழுது பசுவின் முதுகினை வருடும் என்பதில் தோழியாகிய நீ என் அருகில் இருந்து எனக்கு ஆருதல் சொல்லவில்லை என்றால் இவ்வளவு நாள் நான் உயிரோடு இருந்திருக்கமாட்டேன் என்ற இறைச்சிப் பொருளும் காணப்படுகிறது.

**முடிவுரை:**

நற்றிணையில் இயங்குதிணைக் கருப்பொருளினைக் கொண்டு ஆசிரியர்கள் இறைச்சிப் பொருளை சிறந்த முறையில் வெளிப்படுத்தியுள்ளார். இவை போன்ற இன்னும் பல நற்றிணைப் பாடல்களில் இறைச்சிப் பொருள் புதைந்துக் கிடக்கின்றன.

# திருத்தொண்டர் காப்பியத்தில் மணவினை

***முனைவர் க.இரமேஷ்***
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,*
*வேலூர் – 632 115.*

***தா. வனிதா***
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,*
*வேலூர் – 632 115.*

**முன்னுரை:**

ஒழுக்க வளர்ச்சிக்கும், வாழ்க்கைத் திட்டமிட்டபடி செயல்படுத்துவதற்கும் பழக்காய்கள் உதவுகின்றன. பழக்கம் என்பது தனிமனிதன் சார்ந்த தொடக்க நிலை. வழக்கம் என்பது சமுதாயம் சார்ந்த தொடக்க நிலை. தனிமனிதன் ஒருவன் பழக்கிப் போன முறையில் திரும்பத் திரும்பச் செய்துவரும் ஒரு குறிப்பிட்ட, வரையறைக்குட்பட்ட செயலை பல மனிதர்கள் ஒன்றாகச் சேர்ந்து செய்யும் போது அது வழக்கம் என்று போற்றப்படுகிறது. மக்கள் ஒன்றுபடவும், அவர்களுடைய நடவடிக்கைகளை ஒத்தத்தன்மை பெறச் செய்யவும், சுயநல எண்ணங்களையும் செயல்களையும் கட்டுப்படுத்தவும் தேவையான உறுதியும் திறமையும் கொண்ட வழக்கங்களை உருவாக்கிக் கொண்ட சமூகங்கள்தான் கிளைத்தும் பிழைத்தும் நிற்கின்றன.

தனிமனிதனின் பழக்கம் சமுதாய அளவில் இடம் பெற்று நிலைத்துநின்று சமுதாய வழக்கங்களாக வளர்ச்சியடைகின்றன. அவ்விதம் உருவான சமுதாய வழக்கங்களே அச்சமுதாயத்தின் பழக்கவழக்கங்களாகக் காட்சியளிக்கின்றன. அப்பழக்கவழக்கங்களுள் பல இன்று மரபாக அமைந்துள்ளன. மேலும், அடிப்படைப் பழக்க வழக்கங்கள் ஒன்றாக அமைந்தாலும் அதில் கடைபிடிக்கப்படும் சடங்குகள் அல்லது செயல்பாடுகள் வேறுபட்டு அமைவதைச் சிந்திக்க வேண்டும். இவ்வாறு சிந்தித்ததின் விளைவாகவே காப்பியங்கள் தமிழுலகில் முகிழ்த்தன. இதன் அடிப்படையிலேயே ‘‘திருத்தொண்டர் காப்பியம்’’ எனும் பெருங்காப்பியத்தினை பேராசிரியர் இன்னாசி படைத்துள்ளார். இக்காப்பியம் பெருங்காப்பிய மரபுகளுக்குட்பட்டது. பெருங்காப்பியத்தில் ‘‘நல்மண புனைவு’’ இடம் பெற்றிருத்தல் வேண்டும் என்பது தண்டியின் இலக்கணம் இவ்விலக்கண விதியினை நிறைவு செய்யும் நோக்கில் நீலகண்டனுக்கும் பார்கவிக்கும் நடந்த மணவினை புனையப்பட்டுள்ளது.

தமிழுக்கு ஆதாரமான தொல்காப்பியமும் சங்க அக நூல்களும் களவின்வழிக் கற்பு வாழ்க்கையில் நுழைவதையே சிறப்பாய் பேசுகின்றன. அம்மரபினையொட்டி வரலாற்றுச் சிறப்புமிக்க நீலகண்டன் பார்கவி நிகழ்வினை ஆசரியர் புனைந்துள்ளார். அதுமட்டுமின்றி மடலேறுதல், மணவிழாக்கள், கைம்மை என அக்கால பழக்கவழக்கங்கள் பலவற்றை தமிழிலக்கியங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. இதன்வழி திருத்தொண்டர் காப்பியத்தில் கூறப்பட்டுள்ள திருவிதாங்கூடர் மணமக்களின் மணவிழாவின் சிறப்பினைப் பற்றி மரபுவழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**சொல்லும் பொருளும்:**

'மணம்' என்ற சொல்லின் சேர்ச்சொல் 'மண்'. மணம் என்ற சொல் இன்று நறுமணம் என்ற பொதுவானப் பொருளைக் குறித்தாலும் பண்டைய வழக்கில் பல பொருளுடையதாய் இருந்துள்ளது. 'மண்ணுதல்' என்ற சொல்லின் பொருள் கழுவுதல், நெருங்குதல், கலத்தல், கூடுதல், அழகு பெறுதல் எனப் பலவகைப்படும். இப்பொருள்கள் அனைத்தும் திருமணத்துடன் தொடர்புடைய அமைவதால் 'மணம்' சமுதாய வழக்கத்தைக் குறிப்பதற்கும் பொருத்தமான சொல்லாக அமைகிறது.

திருமணம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து இல்லறம் மேற்கொள்ள நடத்தப்பெறும் ஒரு வாழ்க்கை ஒப்பந்தம். இவ்வொப்பந்தம் மனித வாழ்க்கைக்காக மனிதனால் மனித சமுதாயத்தின் நலன் கருதி ஏற்படுத்தப்பட்ட ஒரு ஒழுக்கமுறை. இது புதிய சந்நிதி தோன்றுவதற்குரிய ஒருவிதம் பிணைப்புமாகும். மனித வாழ்க்கையின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றான இன்பத்தின் ஆணிவேராகக் கருதப் பெறுவது இல்லறமாகும். இல்லறத்தின் நுழைவுவாயிலே திருமணம். இத்தகைய திருமண உறவு இனம், சமயம், பண்பாடு, சூழல், உளப்பாங்கு ஆகியவற்றிற்கேற்ப மாறுபடும் இயல்பினையுடையது. இவ்வடிப்படையிலேயே நீகண்டன் - பார்கவியாளின் திருமணம் நடைபெற்றுள்ளது.

**குலமுறைத்திருமணம்:**

இல்லற வாழ்வை மேற்கொள்ளும் தலைவன் தலைவி ஆகிய இருவருக்கும் சிலப் பொருத்தங்கள் பெரியோர்களால் வரையறைப்படுத்தப்பட்டுள்ளன.

*பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு*
*உருவு நிறுத்த காமவாயில்*
*நிறையே அருளே உணர்வொடு திருவென*
*முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே*
*(தொல்.பொருள். 1219)*

எனப் பத்துவகைப் மணப் பொருத்தங்களாய் தொல்காப்பியர் சுட்டுகிறார். இப்பொருத்தங்களுள் பிறப்பு, குடி, திரு ஆகிய மூன்றும் குலமுறை மணத்தில் சிறப்பிடம் பெறுகின்றன. மன்னன் அரசகுலப் பெண்ணை மணத்தல், அந்தணர், அந்தணருக்குரியப் பெண்ணை மணத்தல், வணிகர் வணிகர்குலப் பெண்ணை மணத்தல் என்னும் வரையறை தமிழர்களிடம் அக்கால முதலேக் காணப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் வணிக குல கோவலன் வணிகர்குல கண்ணகியை குலமுறைப்படி ஊரறிய மணம் புரிந்தமையைக் காணலாம்.

பெருங்கதையில் மன்னனான உதயணன், மன்னன் மகள்களான வாசவதத்தை, பதுமாவதி, விரிசினக ஆகியோரை மண உறவுக் கொள்கிறான். சீவகசிந்தாமணியிலும் இத்தகைய மணமுறையேக் கூறப்பட்டுள்ளது.

பெரியபுராணத்தில் அந்தணர்குல மனஉறவு திருஞான சம்பந்தாளை மணத்தினை காணலாம். கம்பராமாயணத்திலும் குலமுறை மணமுறையையே கம்பர் கூறியுள்ளார்.

கிறித்துவக் காப்பியமான திருத்தொண்டர் காப்பியத்திலும் நீலகண்டன் - பார்கவியம்மாளின் திருமணம் குலமுறைப்படி சிறப்பாக நடந்துள்ளதாக ஆசிரியர் கூறியுள்ளார். இக்காப்பியத்தில் 'குலமுறைப்படலம்' என்னும் படலம் இளமைக்காண்டத்தில் உள்ளது. இப்பகுதியில் ''மருமக்கள் தாயமுறை'' என்னும் வழக்கம் சுட்டப்பட்டுள்ளது.

**மருமக்கள் தாயமுறை:**

அன்றைய திருவிதாங்கூர் பகுதி 1969 ஆம் ஆண்டு கேரள மாநிலங்களுடன் இணைந்திருந்தது இக்காலகட்டத்தில் பிராமணர், நாயர் ஆகிய இரு குலத்தோரும் உயர்சாதியாக மதிக்கப்பட்டனர். பிராமணர், பிராமணர் குலத்திற்குள்ளும், நாயர், நாயர் குலத்திற்குள்ளும் திருமண உறவுமுறை வைத்திருந்தனர். ஒருவேளை பிராமணர் குலத்திலுள்ளோர் குலம் மாறி நாயர்குலப் பெண்டிகை மணந்தால், அப்பிராமணனம் நாயர் குல மகனாக மாறுதலே தகுதியுடையதாகக் கருதப்பட்டது. இதுவே மருமக்கள் தாயமுறையாகும். இதனை ஆசிரியர் காப்பியத்தில்,

*''தலைவனவன் நாயர்குல பெண்டிர் கொண்டால்*
*தலைவியவள் குலமாக மாறிப் பரோதல்*
*தகுதியுடைய மருமக்கள் தாய மாகும்.'' (237)*

*''தாயர்குலம் சார்ந்திருத்தல் தலைவர்க்காகும்*
*தமரெல்லாம் புகுந்திடுதல் தலைவிக் காகும்'' (238)*

என்றுக் கூறியுள்ளார். காப்பியத்தலைவனான நீலகண்டனின் பெற்றோர் 'மருமக்கள் தாய முறையில்'

மணஉறவு பூண்டதால் நீலகண்டனின் மணவினை நாயர்குலமுறையில் நடந்தது. இதனை ஆசிரியர்,

*''தந்தையார்தாம் விகாமணராய் ஆன போதும்*
*தாயார்தம் நாயர்குலம் சார்ந்த தாயே*
*முந்தையோர்தம் மருமக்கள் தாயம் காட்டும்*
*முறைப்படியே நீலகண்டன் நாயர் ஆனான்'' (240)*

*''அம்மைக்குலம் அனைவருக்கும் மரபே ஆகும்''*
*(243)என்று*

*எடுத்துக் கூறியுள்ளார்.*

திருவிதாங்கூர் பகுதி மன்னகாட்சிக்குட்பட்டடிருந்த போது பிராமணன் குலத்தோர் 'நம்முதிர்' என்றழைக்கப்பட்டனர். இவர்கள் கோயில் பணிகளில் பொறுப்பேற்றிருப்பர். இக்குலமே உயர்குலமாகக் கருதப்பட்டது. இக்குலத்திற்கு அடுத்ததாக நாயர்குலம் மதிக்கப்பட்டது. இக்குலத்தோர் அரசவைக்குள்ளும் அரசப்பணியிலும் இருந்தனர்.

வாசுதேவ நம்பூதிரியின் மகன் நீலகண்டனுக்கு தன் தாய் குலமான நாயர் குலத்தில் பலர் பெண் கொடுக்க முன்வந்தனர்.

''நீலகண்டப் பிள்ளைக்கு உற்றார் உறவினர்களும், அக்கம் பக்கமுள்ள கிராமத்தவரும் பெண் கொடுப்பதற்காக நட்டாலம் மருதங்குலங்களை வீட்டைத்தேடி வந்தனர். நாயர் சமுதாயத்தின் பல செல்வந்தர்களும் பிள்ளையை மருமகனாக்க விரும்பினர். தாங்கள் செல்லமாக வளர்த்த பெண்ணைக் கொடுத்து சீர் செய்யத் துடித்தனர். முடிவாக திருவிதாங்கோட்டின் மேற்குப் பக்கமுள்ள அமராவதிக் குளத்தின் ஓரத்தில் அமைந்திருந்த மேக்கோடு குடும்பத்தைச் சார்ந்த பார்கவியம்மா என்றப் பெண்ணைப் பேசி முடித்துக் குறிப்பிட்ட நாளில் திருமணம் நடைபெற ஏற்பாடு செய்தனர்'' என்னும் செய்தி ''அமலகிரி அந்தோணிமுத்து'' எழுதிய ''வேதசாட்சி தேவசகாயம் பிள்ளை விரிவான வரலாறு'' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. இச்செய்தியினைக் காப்பிய ஆசிரியர்,

*''செவிவழியாச் செய்தியுணர் பெற்றோர் தாமும்*
*செய்வதென்ன என்றாய்ந்து முடிவில் வந்தார்*
*தவிக்கின்ற உள்ளங்கள் தடுமா றாமல்*
*தமிழ்முறையில் மணமுடிக்கத் திட்ட மிட்டார்'' (535)*
என எடுத்துக் கூறியுள்ளார்.

**திருமண நிகழ்ச்சி:**

தலைவன் நீலகண்டன் - தலைவி பார்கவியம்மாளின் திருமணத்தைச் சீரும் சிறப்புமாக நடத்த இருவரது பெற்றோரும் உறவினர்களும் நண்பர்களும் திட்டமிட்டனர்.

''திருமண அழைப்பிதழ் பனையோலையில் ஆசான்மாகால் எழுதப்பட்டு அனுப்பபட்டது. மணநாளில் நீரகண்டனுக்குக் கல்விப் புகட்டிய ஆசானுக்கு மரியாதைச் செய்யப்பட்டது. மணநாளுக்கு முந்தைய நாள் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன'' என 'தேவசகாயம் பிள்ளை வரலாறு' நூலில் கூறப்பட்டுள்ளது. காப்பிய ஆசிரியர் இதனைச் சுருக்கமாக,

*''அவிப்பலிபோல் தீமூட்ட வேண்டாம் என்றே*
*அகல்விளக்கை ஏற்றிவைத்து மணமு டித்தார்'' (535)*

*''பட்டங்கள் சூடரசர் குடியோ என்று*
*பார்ப்பவர்கள் வியந்தேத்த மன்றல் கண்டார்*
*நட்டாலம் பிறந்தவனே நாயர் ஆக*
*நாடறிய பார்கவியாள் கரம்பி டித்தான்'' (547)*
எனக் குறிப்பிட்டுள்ளார்.

**மணவினை நிகழுமிடம்:**

பழந்தமிழர் மணவினையை மணப்பெண் வீட்டில் நிகழ்த்துதலை மரபாகக் கொண்டிருந்தனர். இம்மரபையொட்டியே இத்திருமணமும் தலைவியின் வீட்டிச் சமய முறைப்படி நடந்தது என்று வரலாறு கூறுகின்றது. அன்றைய திருவிதாங்கூர் பகுதியான இன்றைய குமரிமாவட்டத்தில் இன்றும் பழைய மாடிப்படி மணப்பெண் வீட்டிலயே திருமண விழா கோலகலமாக நடைபெறுகிறது.

**மங்கல ஒலி:**

பழந்தமிழர் மணம் நடக்கும் வீட்டில் சங்கொலியும் பறையொலியும் முழங்கினர். மணச்சடங்கு நடைபெறும் பொழுதில் முழவும் முரசும் ஒலித்து மணவினையை நகர மக்களுக்கு அறிவித்தனர். மேலும் மங்கல ஒலிபற்றி கம்பராமாயணத்தில்,

*''மங்கல முரசு இமை மழையின் ஆர்த்தன;*
*சங்குகள் முகன்றன; தானர, பேரிகை பொங்கின;*
*மறையவர் புகலும் நலன்மறை, கங்குலின் ஒலிக்கும்*
*மாகடலும் போன்றதே'' (கம். 1200)*

என்றுக் கூறப்பட்டுள்ளது. திருத்தொண்டர் காப்பியத்திலும் நீலகண்டன் பார்கவியம்மாள் மணவினையின் போது தேவாரத் திருமுறைகள் ஓதப்பட்டது. செந்தமிழின் இசையொலி, முரசொலி, முழவொலி, வாழ்த்தொலி, பம்பையொலி, கும்மியொலித், குரவையொலி என மங்கல ஒலிகள் ஒலிக்கப்பட்டு

*"மங்கலநாண் பூட்டிவிட மக்கள்சூழ*
*மாமன்றல் நிகழ்ந்ததுகாண் மகிழ்வாய்த் தானே" (538)*

என மணவினை நடந்ததாகக் காப்பிய ஆசிரியர் கூறியுள்ளார்.

**மங்கல நாண்:**

மணவினையில் பலவகை அணிகளை மணமகள் அணிந்திருந்தாலும் மணமுடித்ததின் அடையாளமாக மணமகன் மணமகள் கழுத்தில் அணிவிக்கும் அணியே (தாலி) மங்கலநாண் (நாண்-கயிறு) எனப்பட்டது. இனி புனிதமாகக் கருதப்பட்டது. இதனை ஆசிரியர் தம் காப்பியத்தில்,

*"வையகத்தார் புகழ்மொழியால் மன்றல் ஒலிக்கச்*
*சிரங்கவிந்த கழுத்தினிலே செல்வன் தானும்*
*சிரிப்புதிர மங்கலநாண் பூட்டி மகிழ்ந்தான்."*

என்றுக் கூறியுள்ளார். சிலப்பதிகாரம் சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற காப்பியங்களில் 'மங்கல நாண்' பற்றியக் குறிப்பு உள்ளது. கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்குப்பின் மங்கலநாண் 'தாலி' என்ற சொல்லால் வழங்கப்பெற்று திருத்தொண்டர் அந்தாதியில் இடம் பெற்றதாக ஆய்வாளர் கூறுவர்.

**மனைவினையில் கலந்துக் கொண்டேன்:**

திருட்டுள்ள காதலர்கள், வருபவளை வரனாக நாள்குறிக்கும் ஆண்கள், முதியோர், மணம் பேச எண்ணி வந்தோர், மணப்பருவ மங்கையரைத் தேடி வந்த மணவாள நிலைகண்டோர், அணங்குகளுக்கு ஆடவரைத் தேடிவந்த அறிவார்ந்த பெற்றோர், இளைஞர்கள், ஆடவரைத் தேடும் அணங்குகள், என திருமணவிழாவில் கலந்துக் கொண்டு செவியின்பமும் விழியின்பமும் பெற்றோரை அடுக்குகிறார் ஆசிரியர்.

**மரபாக அமைந்தவை:**

திருத்தொண்டர் காப்பியத்தில் பழந்தமிழர் காலந் தொட்டு மனைவினைக்காக மரபாகக் கடைபிடிக்கப்பட்டவைகளாக,

*1) குமுறைத் திருமணம்*
*2) மணவினை நிகழுமிடம்*
*3) மங்கல ஒலி*
*4) மங்கல நாண்*
*5) மணவினையில் அகல்விளக்கேற்றல்*

போன்றவற்றை காப்பிய ஆசிரியர் தெளிவுறக் கூறியுள்ளார். மனமும் உடலும் மகிழ்வும் ஒத்து இல்லறவாழ்வு வாழ்ந்த திறத்திணையும் தமிழ் மரபுக்குட்பட்டு புனைந்துள்ளார். திருமணப்படலம் முழுமையும் காப்பிய இலக்கண மரபினை நிறைவுச் செய்யும் நோக்கோடு பழமையும் புதுமையும் புகுத்தி சித்தரிக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை:**

*"ஒரு மனைவி பலகணவர் என்ற முறையும்*
*ஓரிருவர் தன்னலத்தாய் விளைந்ததாகும்*
*கருவறையில் உறைதெய்வம் ஒன்றே போலக்*
*கணவன்மனை ஓரிணையே பொருத்த மாகும்*
*திருமணத்தின் விழுப்பொருளே தெய்வ வாழ்வாம்*
*வருங்கால மக்களுக்கு நெறிபு கட்டி*
*வாழ்விக்கும் முறைகொண்டு வாழ வேண்டும்" (248)*

என்று காப்பிய ஆசிரியர், இக்கருத்திற்கேற்பவே காப்பியத்தில் காண நிகழ்வினை வரைந்துள்ளார். பழந்தமிழர் மணவினை மரபுகள் குலமுறைப்படலம் முதல் திருமணப்படலம் வகையுள்ள பாக்களில் பின்பற்றப்பட்டுள்ளது. 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காப்பிய தலைவனைப் பற்றிய செய்திகள் சிந்து, கும்மி, நாடகம், தெருக்கூத்து வடிவங்களில் பல ஆண்டுகள் வழங்கி வந்துள்ளன. இன்று திரைப்பட வடிவிலும் வந்துள்ளது.

**அடிக்குறிப்புகள்:**

1. தொல்காப்பியம் பொருள். ப.492.
2. இன்னாசி.சூ, திருத்தொண்டர் காப்பியம், ப.59.
3. மேலது, ப.60.
4. அமலகிரி அந்தோணிமுத்து, வேதசாட்சி தேவசகாயம் பிள்ளை வரலாறு, ப.37.
5. இன்னாசி.சூ, திருத்தொண்டர் காப்பியம், ப.130.
6. அமலகிரி அந்தோணிமுத்து, வேதசாட்சி தேவசகாயம் பிள்ளை வரலாறு, ப.38.
7. இன்னாசி. சூ, திருத்தொண்டர் காப்பியம், பக்.130, 133.
8. மேலது, ப.131.
9. மேலது, ப.133.
10. மேலது, ப.62.

# புறநானூற்றில் சமுதாய அறங்கள்

*முனைவர் ப.திலீப்குமார்,*
*நாமக்கல்.*

**முன்னுரை:**

நாகரிகமாக வாழத்தெரிந்த சமுதாயங்களிலே தலைசிறந்து விளங்குவது தமிழர் சமுதாயம். தமிழர் தம் பண்பாட்டையும், அவர்தம் வாழ்க்கை நெறிமுறைகளையும் புறநானூறு வாயிலாக அறிய முடிகிறது.

ஒரு மனிதன் சமூகத்தில் வாழ்வதற்கான நெறிமுறைகளை எடுத்துரைப்பதுதான் வாழ்வியல் நெறி. அந்நெறிகள் மனிதனை ஒழுங்குபடுத்தக்கூடிய காரணிகளாக உள்ளன. எவ்வாறு பழமொழியானது மனிதன் தன் வாழ்க்கை அனுபவத்தில் வாழ்வியல் நெறியானது பல தலைமுறைகளாக வாழ்ந்த மனிதனுடைய வாழ்வியல் நெறியானது பல தலைமுறைகளாக வாழ்ந்த மனிதனின் அனுபவத்தின் வாயிலாக நெறியானது பல தலைமுறைகளாக வாழ்ந்த மனிதனின் நெறியானது, கொடுப்பதிலும் கொள்வதிலும், வாழ்வதிலும், மனிதப் பண்புகளாக விரிந்து விளங்குகின்றன. அவற்றில் ஈதல், விருந்தோம்பல், பிறர் மனம் புன்படாதிருத்தல், காத்தல், பிறர் போற்ற வாழ்தல், மறத்தில் அறம் செய்தல், மானம் நட்பு செய்ந்நன்றி மறவாமை, வாக்குமாறாதிருத்தல், நடுவு நிலைமை. செங்கோல் வழாமை, கல்வி, அருளல், கடமை போன்றவற்றைச் சொல்லலாம். அறம் செய்வதன் வாயிலாக ஒரு மனிதனிடம் பல்வேறு நல்ல பண்புகள் வெளிப்படுகிறது. அதனால் தான் புறநானூற்றுப் பாடல்கள் முழுக்க அறத்திற்கு முதன்மை கொடுக்கப்படுகிறது என்பதை அறிய முடிகிறது.

**சமுதாய அறம்**

சமுதாயம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் மனித இனத்தவர் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு ஏற்படுத்திக் கொண்ட ஒரு கூட்டமைப்பாகும். தனி மனிதனின் தொகுதியே சமுதாயம் ஆகும். மனிதன் இயற்கையிலேயே கூடிவாழும் இயல்புடையவன். அதனால் தான் மனிதனை, ‘‘ஒரு சமூகப் பிராணி’’ என்பவர் அரிஸ்டாட்டில். மனிதன் தங்களுடைய தேவைகளுக்காவும், நலத்திற்காகவும், வாழ்க்கை வசதிகளுக்காகவும் மற்றவர்களைச் சார்ந்து அவர்களோடு கூடி வாழ்கிறான்.

சமூகம் என்பது மனித உறவுகள் பின்னிப் பிணைந்து அமைந்திருக்கும் இழையாம்

(Tissue) என மோரிசு கின்சுபெர்கு என்ற அறிஞர் கூறுகிறார்.

மனிதனுக்குச் சமூகவியல்பு (Sociality) இயற்கையிலேயே அமைந்து இருக்கிறது. இந்த சமூகவியல்பு காரணமாக அவன் பிறரோடு கூடிப் பழகுகிறான்.

அவ்வாறு பழக முற்படும்போது சமூகம் தோன்றுகிறது. என்று அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார்.

சமூகவியல்பை மனிதனிடம் தூண்டிவிடுவது தேவை. மனிதன் பிறக்கும்போதே அவனுக்கு பிறருடைய கூட்டுறவு துணை தேவைப்படுகிறது. அந்த தேவையும் சமூகவியல்பும் இணையும்போது சமூகம் தோன்றிவிடுகிறது. என்ற கருத்தும் ஈண்டுக் கருதத்தக்கது.

தனியொரு மனிதனின் ஒழுக்கம், சமுதாய ஒழுக்கத்தினை நெறியப்படுத்துகிறது. சமுதாயத்தில் மக்களின் கூட்டு வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்பட்ட அறங்களே – அறநெறிகளே சமுதாய அறங்களாகும். பண்டைக்கால தமிழர்களின் வாழ்வியல் முறையை புலப்படுத்தும் நூலான புறநானூறு, தமிழ் இலக்கியத்தின் அணையாவிளக்கு. இந்நூல் தமிழர்களின் சிறந்த சமுதாய வாழ்வு, நற்பேறு, நிலையாமை, ஆற்றுப்படுத்துதல், சங்கச் சான்றோர் பண்பு நலன்கள், கடமை, வாழ்த்துதல், சமுதாயப் பொறுப்புணர்ச்சி போன்ற அறக்கருத்துக்களைத் தரும் களஞ்சியமாக புறநானூறு திகழ்கிறது என்பதை அறிய முடிகிறது.

**நற்பேறு:**

மனிதனுடைய வாழ்வு வளமாக வேண்டுமானால் நல்வினை செய்ய வேண்டும். அவ்வாறு நல்வினை செய்பவர்கள் இம்மையில் புகமும், மறுமையில் இன்பமும் வீடுபேறும் பெறுவார்கள் என்பதால் நல்வினையைத் தொடர்ந்து செய்ய வேண்டும். அவர்கள் மீண்டும் பிறவி எடுக்கவில்லை என்றாலும் இமயம் போன்று பெரும் புகழ் கொண்டு விளங்குவார்கள். அதனால் நல்வினை செய்வதற்கு அடிப்படையாகத் தெளிவான சிந்தனை வேண்டும் என்று கோப்பெருஞ்சோழன் பாடிய,

*உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசி னோர்க்குச்*
*செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனின்*
*தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்;*
*தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்லெனின்,*
*மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும்;*
*மாறிப் பிறவார் ஆயினும், இமயத்துக்*
*கோடு உயிந்தன்ன தம்மிசை நாட்டுத்*
*தீதில் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே!*
*(புறம்: 214: 6-13)*

என்ற பாடல் நமக்கு நல்வினையினை விளக்குகிறது என்பதை அறிய முடிகிறது.

இரும் பொறையின் அரண்மனையிடத்து முரசுக் கட்டிலில் மோசிகீரனார் அறியாது ஏறி வழி நடந்த களைப்பால் அயர்ந்தார். முரசுக் கட்டிலில் ஏறியது தவறு என்று தன்னைத் தண்டிக்காது அவர் துயில் நீங்கும் அளவு கவரி வீசினான் மன்னன். மோசி கீரனின் தமிழ்ப் புலமையைப் போற்றுமாறு இச்செயல் அமைந்துள்ளது. இவ்வுலகத்தில் நற்செயலினால் புகழ்மிக்க விளங்குபவர்கள், மறுமையில் வானுலகம் செல்வார்கள் என்ற நற்பேறினால் இவ்வாறு செய்தான். இதனை,

*.... வியலிடம் கமழ*
*இவண் இசை உடையோர்க்கு அல்லது அவணது*
*உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை*
*விளங்க கேட்ட மாறு கொல்!*
*வலம்படு குருசில்! மாறு கொல்!*
*வலம்படு குருசில்! நீ ஈங்கு இது செயலே!*
*(புறம். 50: 13-17)*

என்ற பாடலில் புலவர் மோசி கிரனார் மன்னனின் நற்பண்பினையும், தமிழ்ழறிந்தோரைப் போன்றும் தன்மையினையும் பாராட்டுகிறார் என்பதை அறிய முடிகிறது.

**நல்லோர் இயல்பு – (சான்றோர் அறம்)**

கடலுள் மாய்ந்த இளம்பெரும்வழுதி என்பான் பாண்டிய வேந்தருள் ஒருவன். இவன் காவலானகவும், பாவலனாகவும் விளங்கினான். இவன் பாடிய பாட்டுக்கள் சான்றோர்களால் போற்றப்பட்டன. இத்தகைய பண்பு நலம் வாய்ந்த இவன் ஒரு முறை கடலில் கலமூர்ந்து செல்லுகையில் கலங்கவிழ்ந்து கடலுள் மாண்டான். இதனால் இவன் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என அழைக்கப் பெற்றான். இவன் சான்றோரை வியந்து கூறுவனாய், நல்லோர் என்பவர் யார் எனில் இந்திரனின் அமிழ்தம் கிடைப்பதாக இருந்தாலும் அதனைத் தனித்திருந்து உண்ணாது பகுத்து உண்ணும் இயல்புடையவர்; யாரிடத்திலும் கினங்கொள்ளாதவர்; பழிக்கு அஞ்சுபவர்; சோம்பித் திரியாதவர்; புகழ் என்றால் உயிரையும் வழங்குபவர்; பழியோடு உலகம் முழுவதையும் ஆளுகின்ற உரிமையும் உயர்வும் கிடைத்தாலும் அதனை விரும்பாதவர்; இவ்வியல்புகளோடு தன்னலம் பாராதவராகப் பிறர் நலம் ஒன்றையே பெரிதாக எண்ணி வாழ்பவர் என்கிறார்.

இதனை,

*உண்டால் அம்ம, இவ்வுலகம்; இந்திரர்*
*அமிழ்தம் இயைவது ஆயினும், இனிது எனத்*

*தமியர் உண்டலும் இலரே! முனிவிலர்;*
*துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவது அஞ்சிப்*
*புகழ் எனின் உயிருமூ கொடுக்குபவர்; பழி எனின்*
*உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;*
*அன்ன மாட்சி அனையர் ஆகித்*
*தமக்கென முயலா நோன்தாள்*
*பிறர்க்கென முலலுநர் உண்மை யானே (புறம். 182)*

என்ற பாடல் வரிகள் தமக்கென வாழாமல் பிறருக்கு உதவி செய்து வாழ வேண்டும் என்ற அறத்தைக் காவலராகிய பாவலர் இதன்கண் வலியுறுத்துகிறார். இத்தகைய சான்றோர்களாலேயே இவ்வுலகம் அழியாமல் நிலை பெற்றுள்ளது என்பதை அறிய முடிகிறது.

பொன், பவளம், முத்து மற்றும் மாணிக்கம் ஆகியவை ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு இடத்தில் கிடைத்தாலும் நல்ல மணிமாலை அமைக்கும்போது ஒன்று சேர்க்கப்படுகின்றன. அதுபோலவே சான்றோர்கள் சான்றோர்களைத் தேடி அடைகின்றார்கள். மேலும், இருக்கும் இடம் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் ஒன்றுபட்டு விடுகின்றனர். இதனை,

*பொன்னும், துகிரும், முத்தும், மன்னிய*
*மாமலை பயந்து காமரு மணியும்,*
*இடைபடச் சேய ஆயினும், தொடைபுணர்ந்து*
*அருவிலை நன்கலம் அமைக்கும் காலை,*
*ஒரு வழித் தோன்றியாங்கு, என்றும் சான்றோர்*
*சான்றறோர் பாலர் ஆப,*
*சாலார் சாலார் பாலர் ஆருபவே! (புறம். 218)*

என்று கண்ணகனார், கோப்பெருஞ்சோழனோடு எங்கோ பிறந்த பிசிராந்தையாரும் சேர்ந்து வடக்கிலிருந்து உயிர் விடுதலைக் கண்டு பாடியதை அறியமுடிகிறது. இதனால் நிறைந்த குணத்தார் நிறைந்த குணத்தாரை நாடுவது சான்றோரின் இயல்பாக அமைந்துள்ளது.

**சான்றோர் அறவுரை**

சான்றோர் கூறியுள்ள அறவுரைகள் உலக மக்கள் வாழ்க்கைக்கு உறுதுணையானவை. உலக இயற்கையைக் கூறி வாழும் நெறிமுறைகளை உணர்த்துவதும் அவர்தம் இயல்பாக இருந்தது. நாடு என்பது மக்கள் வாழும் இடம். மக்கள் நல்லவர்களாக விளங்கினால்தான் நாடும் நல்லதாகும் என்பர் ஔவையார். இதனை,

*நாடா கொன்றோ! காடா கொன்றோ!*
*அவலா கொன்றோ! மிசையா கொன்றோ!*
*எவ்வழி நல்லவர் ஆடவர்,*
*அவ்வழி நல்லல் வாழிய நிலனே! (புறம். 187)*

என்ற பாடல் வழி அறியலாம். நாடாக இருந்தாலும், காடாக இருந்தாலும், பள்ளமாக இருந்தாலும், உயரமாக இருந்தாலும் அந்த நிலத்தில் வாழும் மக்களின் இயல்பினைப் பொறுத்தே நிலத்தின் இயல்பு அமைகிறது. அதனால் நிலத்தின் இயல்பும், நாட்டின் வளமும் மக்களைச் சார்ந்ததே அன்றி நிலத்தினைச் சார்ந்ததல்ல. எனவே, ஒரு நாட்டில் வாழும் மக்கள் சான்றோராக, உழைப்பாளிகளாக, விளங்குவார்களேயானால் அந்நாடு உயர்ந்தோங்கிய நாடாக விளங்கும் என்ற நிலைபேறுடைய உண்மையை புறநானூறு வாயிலாக அறிய முடிகிறது. இக்கருத்தை வள்ளுவரும்,

*காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்*
*மீக்கூறும் மன்னன் நிலம்*
என்ற குறளில் அறிவுறுத்துகிறார்.

மக்கள் வாழ்க்கை பயனுடையதாக இருத்தல் வேண்டும். உலகில் பிறந்தோம் வாழ்ந்தோம், இறந்தோம் என்ற பயனில்லாத மூப்பு வெறுக்கத்தக்கது. நல்வினை புரிதல் வேண்டும். அவ்வாறு நல்வினை செய்ய இயலவில்லை என்றாலும், தீமைகளாவது செய்யாமலிருக்க வேண்டும். எல்லாருக்கும் மகிழ்ச்சியை விளைப்பதும், நல்லது செய்வதும் அறம் ஆகும்.

இதனை நரிவெரூ உத்தலையார்,
*நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,*
*அல்லது செய்தல் ஓம்பு மின்; அதுதான்*
*எல்லாரும் உவப்பது, அன்றியும்,*
*நல்லாற்றுப் படுஉம் நெறியுமார் அதுவே!*
*(புறம். 195: 6-9)*

என்று பாடுகிறார். நல்லறமே ஒருவனுக்குத் துணையாக இருந்து மறுமையிலும் காத்து விளங்கும் என்னும் கருத்து இப்பாடலினால் அறிய முடிகிறது.

**சமுதாயப் பொறுப்புணர்ச்சி – (தலையாயக் கடன்)**

கூடிவாழும் இயல்புடைய தமிழ்ச் சமுதாயத்தில் பழந்தமிழர்கள் பல்வேறு வகையான பொறுப்புணர்ச்சியோடு இனிய வாழ்க்கை வாழ்ந்தனர். நல்ல சமுதாயம் விளங்க வேண்டுமானால் அவரவருக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டும்.இதனை,

*ஈன்று புறந்தருதல் என்றதலைக் கடனே!*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே!*
*வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே!*
*நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே!*
*ஒளிறு வாள் அருஞ்சமம் முருக்கிக்*
*களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே!*
*(புறம். 312)*

என்ற பாடலில் ஒருவன் பெறும் உதவிகளையும் அவன் சமுதாயத்திற்கு பயன்பட வாழ்தலின் இன்றியமையாமையையும் விளக்குகிறது. மகனைப் பெற்றெடுத்தல் மட்டும் தாயின் கடமையன்று, அவனைச் சமுதாயத்தில் உள்ள இன்னல்களை எதிர் கொள்ளும் வகையில் உடல்வலிமையும், மனவலிமையும் உடையவனாகப் பாதுகாத்து சமுதாயத்திற்கு வழங்குதலே தாயின் கடமையாகும்.

**ஈதலும் - இரத்தலும்**

பண்டைத் தமிழர் தம்மை நாடிவந்து இரந்து நின்றோரின் வறுமைத் துன்பத்தை அவர்கள் எடுத்துரைப்பதற்கு முன்பாகவே உணர்ந்து அவர்களுக்கு உதவினர். இத்தகைய ஈகைப்பண்பு அறப்பண்பு எனவும், இவ்வாறு உதவி செய்தல் அறவினை எனவும் குறிப்பிடப்பட்டன. இதனை,

*இல்லாது நோக்கி இனிவரவு கூறாமுன்*
*நல்லது வெஃகி வினைசெய்வார்*

என்று பரிபாடல் சிறப்பித்து கூறுகின்றது.

ஒருவரிடம் சென்று எனக்கு கொடுத்திடு என்று கேட்பது இழிவுடையது. அவ்வாறு கேட்ட பின்னர் கொடுக்கமாட்டேன் என்று மறுத்து உரைப்பது இரப்பதைவிட இழிவானது. ஒரு பொருளைப் பிறர் தன்னிடம் கேட்காமலேயே அவன் குறிப்பை முத்திலிருந்து அறிந்து கொண்டு இதனைப் பெற்றுக் கொள் என்று கொடுப்பது உயர்வுடையது. அவ்வாறு கொடுக்கும் போது இரவலர் அதனைக் கொள்ளேன் என மறுத்தல் அக்கொடைச் செயலைக் காட்டிலும் உயர்ந்தது. புலவர் கழைத்தின்யானையார் இதனை,

*ஈ என இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்,*
*ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;*
*கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன் எதிர்,*
*கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று;*
*(புறம்: 204: 1-4)*

என்ற இரத்தலின் இழிவையும், கொடுத்தலின் உயர்வையும் எடுத்துக் கூறியதை அறிய முடிகிறது. மேலும் தொல்காப்பியத்தில்,

*ஈயென கிளவி யிழிந்தோன் கூற்றே*

என்று தொல்காப்பியரும் குறிப்பிட்டுள்ளார்.

**செய்நன்றியறிதல்**

சங்க இலக்கியத்தில் செய்ந்நன்றியறிதல் சிறந்த அறநெறியாகக் கூறப்பட்டுள்ளது. ஒருவர் செய்த நன்மையை மறாவாதிருத்தல் செய்ந்நன்றியறிதலாகும். ஒருவர்க்கொருவர் உதவி செய்து வாழ்தலும், ஒருவர் செய்த நன்மையை மறவாதிருத்தலும் பிறரோடு கூடி வாழும் சமூக வாழ்க்கையில் சிறந்தவை என கருதப்பெற்றன. ஆன் முலையறுத்தல், கருச்சிதைத்தல், அந்தணர்க்குக் கொடுமை செய்தல் ஆகியவை அறமற்ற செயல்களாக எண்ணப்படடன. இவற்றினும் அறமற்ற செயல்களாகக் கருதப் பெற்றது யாதெனில் ஒருவர் செய்த நன்மையை மறத்தலாகும். அவ்வாறு செய்தோர்க்கு உய்வு இல்லை என்பது அறநூலார் கூற்று என்பதை,

*“ஆன்முலை அறுத்த அறணி யோர்க்கும்*
*மாண் இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்,*
*குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்*
*வழுவாய் மருங்கின் கழுவாயும் உள என*
*நிலம் புடை பெயர்வது ஆயினும் ஒருவன்*
*செய்தி கொன்றோர்க்கு உய்தி இல் என,*
*அறம் பாடின்றே ஆயிழை கணவா”*
*(புறம். 34: 1-7)*

என்ற புறநானூறு குறிப்பிடுகிறது. சங்க கால மக்கள் நன்றிக் கடனைப் போற்றி வாழ்ந்தனர். செய்ந்நன்றி மறத்தலைத் தீமை என்று கருதினர். தன் துன்பத்தில் உதவிய ஒருவற்கு உதவாது செய்ந்நன்றி மறந்தானின் செல்வம் தானாகவே அழிந்துவிடும் என்ற நம்பிக்கை நிலவியது, மேலும், அக்குற்றம் செய்தவர்க்கு ஏற்படும் தீமையை,

*ஒற்கத்துள் உதவியார்க் குதவாதான் மற்றவன்*
*எச்சத்துள் ஆயினும்; தனியாது விடாதே காண்*

என்று கலித்தொகை மொழிகின்றது. இவ்வாறு செய்நன்றி கொன்றதால் வரும் கேட்டினை, அச்சுறுதி வலியுறுத்தியிருப்பதால் செய்நன்றி போற்றுதலைச் சங்க கால மக்கள் வாழ்வில் நல்லறங்களுள் ஒன்றாகப் போற்றியதை அறிய முடிகிறது.

**நிலையாமை**

மனிதன் விலங்கிலிருந்து விடுபட்டு மனிதனாக வாழ வேண்டுமானால், நிலையாமை என்ற சான்றோர் உணர்த்தும் நன்கு உணர வேண்டும். தமிழ் இலக்கியத்தின் மையக் கருத்தே நிலையாமையை உணர்த்துவது. இவற்றில் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை என்ற பலவகை நிலையாமைகளை நன்கு உணர்ந்தோர் பொய், களவு, கள், காமம், சூது என்ற பஞ்சமா பாதகங்களிலிருந்து விடுபட்டு நல்வாழ்வு வாழ முடியும்.

நில்லா உலகையும், நிலைபேறில்லாச் செல்வத்தையும், அழியும் யாக்கை, இளமை முதலியவற்றையும் நிலைத்ததாக எண்ணி மயங்கி ஆணவமும் அதிகாரமும் கொண்டு வாழ்ந்து வீழ்ந்து மடிந்தோர் இழிநிலையை புறநானூற்று வழி அறிய முடிகிறது.

'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை' என்பது யாக்கை நிலையாமைப் பற்றிய சங்கச் சான்றோர் வாக்காகும். புலவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார், சோழன் நலங்கிள்ளியினைப் பற்றி பாடும்போது,

*புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்*
*வலவன் ஏவா வான ஊர்தி*
*எய்துப என்ப, தம் செய்வினை முடித்து எனக்*
*கேட்பல் எந்தை சேட்சென்னி நலங்கிள்ளி*
*(புறம்.27: 7-10)*

என்று நிலையாமையைக் காட்டி நிலைத்தப் புகழ் உண்டாக புலவர்க்கு ஈதல் வேண்டும் என்கிறார். பொருட்செல்வம் தேய்ந்துக் குறைவதும் உண்டு. அது வளர்ந்து பெருகவும் கூடும். அவ்வாறிருக்க, வருந்தி வந்தோரின் பசி நோக்கி அருள் செய்ய வேண்டும் என செல்வத்தின் நிலையாமையும், வாழ்க்கை நிலையாமையும் இப்பாடலில் அரசனுக்கு அறிவுறுத்தியதைக் காண முடிகிறது.

பாரி மகளிர், தன் தந்தை (பாரி) இறந்த பின்னர் கையறுநிலைப் பாடலாக,

*அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்*
*எந்தையும் உடையேம் எம் குன்றும் பிறர் கொளார்;*
*இவற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்*
*வென்று எறி முரசின் வேந்தர் எம்*
*குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே!*
*(புறம். 112)*

என்று பாடுகிறார்கள். இப்பாடலில் சென்ற மாதத்தின் முழு நிலவு தினத்தில் நாங்கள் எம் தந்தையுடன் இருந்தோம். எங்கள் மலை சூழ்ந்த நாட்டையும் பிறர் கைப்பற்ற வில்லை. இந்த மாதம் இம் முழுநிலவு நாளில் வெற்றி கொண்டு முழுங்கும் முரசுடைய வேந்தர்கள் எங்களுடைய மலையையும் கைப்பற்றிக் கொண்டார்கள். எம் தந்தையையும் இழந்து விட்டோம் என்று கூறியிருப்பது, நேற்று இருந்த வாழ்க்கை இன்றைக்கு இல்லை என்ற நிலையாமையை வலியுறுத்துவதைக் காணமுடிகிறது.

**ஆற்றுப்படுத்துதலும் அறமும்**

பண்டைக் காலத்தில் வாழ்ந்த பாணர், கூத்தர், பொருநர், விறலி ஆகியோர் தங்களின் வறுமையின் காரணமாக வள்ளல்களை நாடிச் சென்றனர்.

இதனை,

*கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்*
*ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்*
*பெற்ற பெருவளம் பெறா அர்க் கறிவுறி இச்*
*சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்*

என்று தொல்காப்பியத்தில் புறத்திணையியல் நூற்பா சுட்டுகிறது. இந்நூற்பாவில் உறழத்தோன்றி பெற்ற பெருவளம் பெற்றார்க்கு அறிவுறீ இ என வரும் பகுதி பரிசில் பெற்று வரும் ஒருவன் வறுமையில் வாடிய ஒருவனிடம் தான் பெற்ற செல்வத்தினை நீயும் பெறுக என்று குறிப்பாகச் சுட்டுவதாகும்.

சங்க இலக்கியத்தில் வள்ளல்களை நாடிச் சென்ற புலவர்களின் தோற்றப் பொலிவினைப் புறநானூற்றுப் பாடல்கள் கூறுகின்றன. நெய்த ஆடையில் இழையின்றி தைத்த பிற நூல் இழை ஊடே நுழையப் பெற்றிருந்த ஆடைகளை அணிந்திருந்தனர். ஆடைகள் வியர்வையால் நனைந்திருந்தன. அவர்கள் மறைக்க வேண்டிய பகுதியினை மறைத்து உடுத்திக் கொண்டு வாழ்ந்தனர் இதனை,

*கையது கடன் நிறை யாழே மெய்யது*
*புரவலர் இன்மையின் பசியே அரையது*
*வேற்றிழை நுழைந்த வேர் நனை சிதாஅர்*
*ஓம்பியுடுத்த வுயவற்...*
*(புறம்.69: 1-4)*

புலவன் ஒருவனை வள்ளலிடம் ஆற்றுப்படுத்தும் துறை புலவராற்றுப்படையாகும். வள்ளல் பெயருமூ இருப்பிடமும் கூறுதல் ஆற்றுப்படையில் அமையும் ஒரு கூறு, தினைப் புனத்தைக் காவல் செய்பவர்கள் தம்மிடம் உள்ள தட்டை என்கிற பறையை அடித்து ஒலி எழுப்பினால் அருகில் உள்ள கதிர் முற்றிய வயல்களிலும், நீர் மிக்க கடற்கரையிலும் உள்ள பறவைகளும் ஒரு சேர எழுகின்றன. பரிசில் பெற விரும்பிய பாணன் இவற்றைக் கண்டு குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய இந்நிலங்களுள் எந்நில தலைவனிடம் பரிசில் பெறுவது என்று மனம் தடுமாறியதை,

*நாடன் என்கோ! ஊரன் என்கோ!*
*பாடு இமிழ் பனிக்கடற் சேர்ப்பன் என்கோ!*
*யாங்ஙனம் மொழியோ ஓங்குவாள் கோதையை!*
*புனவர் தட்டை புடைப்பின், அயலது*
*இறங்கு கதிர் அலமரு கழினியும்,*
*பிறங்கு நீர்ச் சேர்ப்பினும் புள் ஒருங்கு எழுமே!*
*(புறம். 49)*

என்னும் பாடலில் கோதை மார்பனின் நாடு நானில வளமும் உடையது என கூறியிருப்பதால் அவனிடம் சென்று பரிசு பொருள் பெறுக என ஆற்றுப்படுத்திய புலவரின் அறநெறியானது உணரப்படுகிறது.

பெரிய வாய்க்காலில் மலர்ந்த நெய்தல் மலராலும் நறுமணம் கமழ விளங்குவது கடற்கரையில் உள்ள தொண்டி என்கிற நகரம் எங்கள் ஊர். சேரமான எங்களுடைய தலைவன் முதுமை நனிவிளங்கும் இறைவன் அவனே. நீயும் அவனைச் சார்ந்து செல்வதனால், 'போர்களங்களில் பெறுகின்ற வெற்றியைப் போற்றிப் பாடுபவர்களில் நாங்களும் இருக்கிறோம்' அதனால் எங்களையும் எற்றி அரசனிடத்தில் கூறுங்கள் என்று ஆற்றுப்படுத்தியதை புலவர் பொய்கையார்.

*... நெய்த லானும்,*
*கள்நா றும்மே கானல் அம் தொண்டி;*
*அஃது எம் ஊரே! அவன் எம் இறைவன்,*
*அன்னோற் படர்தி ஆயின் நீயும்,*
*எம்மும் உள்ளுமோ முறுவாய் இரவுபல!*
*(புறம்.48: 3-7)*

என்ற செய்யுள் வழி உணர்த்துகிற அறச் செயலை அறிய முடிகிறது.

**முடிவுரை**

உலகம் வழங்கும் ஒவ்வொரு மொழியும் தனக்கெனத் தனித் சிறப்புகளைப் பெற்றுள்ளது. அச்சிறப்புகளை வெளிப்படுத்துவன இலக்கியங்களே. இவற்றுள் புறநானூறு 'காலத்தின் பிரதிபலிப்பு என்றும் கருதப் பெறுகின்றன. புறநானூறு பல கூறுகளின் வெளிப்பாடுகளாகத் திகழ்கின்றது. இரத்தலின் இழிவையும், கொடுத்தலின் உயர்வையும் மக்கள் உணர்ந்த அறமெனக் கருதினர். நிலையாமை அறம்கூறி போர் வெறி கொண்ட மன்னர்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தினர். மன்னர்களிடையே ஒற்றுமை ஓங்க வழி கூறினர். மன்னர்களின் குடும்ப வாழ்விலும் நல்வழி காட்டினர். உலகம் நிலையற்றது என்று உணர்ந்து மக்கள் இரவாப் புகழுடைய நிலையான அறநெறியினை பின்பற்றினர். அறத்தின் மேன்மையை உணர்ந்தவர் பண்டைத் தமிழர். எனவே அவர்கள் அறவழிப் பொருளையும், அறவழி இன்பத்தையும் பெற வேண்டும் என்ற கொள்கையுடையராக வாழ்ந்தனர். வறுமையிலும் செம்மையான அறமுறைப்பட்ட வாழ்க்கையை வாழ வேண்டியதன் அவசியத்தை புறநானூற்றுப் பாடல்கள் எடுத்துக் கூறுகின்றன.

# பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் மொழிபெயர்ப்புகள்

*முனைவர்*
***செ.அகிலாண்டேஸ்வரி,***
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை,*
*சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரி,*
*மண்ணச்சநல்லூர்,*
*திருச்சிராப்பள்ளி - 621005.*

பழந்தமிழர் தம் அறிவு நுட்பத்தையும், பண்பாட்டு வளத்தையும் எடுத்தியம்புவதாக பதினெண் மேற்கணக்கு மற்றும் கீழ்க்கணக்கு நூல்கள் திகழ்கின்றன. உலக அரங்கினில் தமிழர் தம் இலக்கியச் செழுமையைப் புலப்படுத்த, இவ்விலக்கியங்களை மொழிபெயர்த்தல் என்பது அவசியமாகின்றது.

தமிழர்களுக்கு மொழிபெயர்ப்புச் சிந்தனைகள் புதியதன்று. தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் வழிநூல் வகைகளை விளக்க வந்த தொல்காப்பியர்,

*''தொகுத்தல், விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து*
*அதர்ப்பட யாத்தலோடு அனைமரபினவே''* (தொல். மரபி. 99)

என்று கூறுகின்றார். அஃதாவது வழிநூல் வகைகள் நான்கினுள் ஒன்றாக மொழிபெயர்ப்பு நூலினையும் குறிப்பிடுகின்றார். இந்நூற்பாவுக்கு உரை வகுத்த பேராசிரியர், ''மொழிபெயர்ப்பதென்பது பிறபாடையாற் சொல்லப்பட்ட பொருளினைத் தமிழ் நூலாகாச் செயவது. அதுவும் தமிழ் நூலின் வழிநூலுக்கு மரபாம் என்றவாறு அதர்ப்படவென்பது நெறிப்பட வென்றவாறு'' என்கின்றனர்.

செவ்வியல் இலக்கியங்களைப் பொறுத்தமட்டில் முதன்முதலில் மொழிபெயர்க்கப்பட்ட பெருமைத் திருக்குறளைச் சாரும். 1595 ஆம் ஆண்டு மலையாளத்தில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. 1938 ஆம் ஆண்டில் வெளிவந்த இந்நூலின் மொழி பெயர்ப்பாளர் குறித்த விவரம் கிடைக்கப்பெறவில்லை (முனைவர் ச. சிவகாமி, மொழிபெயர்ப்புத் தமிழ் ப-110) பின்னர் இந்நூல் 1730 ஆம் ஆண்டு வீரமாமுனிவரால் இலத்தீன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பல மொழி பெயர்ப்புகள் வெளியாகின.

நாலடியாரை 1892 இல் புஷ்பரத செட்டியார் மொழிபெயர்த்துள்ளார். ஜி.யு.போப் அவர்கள் 1893-ல் நாலடியாரை மொழி பெயர்த்துள்ளார்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஏனைய நூல்களின் குறிப்பிடத்தகுந்த மொழிபெயர்ப்புகள் மிக அண்மைக் காலத்திலேயே வெளிவரத் துவங்கியுள்ளன.

ஏனைய இலக்கிய நூல்களைப் போல, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை மொழிபெயர்ப்பதிலும் சிக்கல்கள் உள்ளன. ஆய்வின் எல்லைக்கருதி பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள அகப்பாக்கள் மட்டும் வெளிவரத் துவங்கியுள்ளன.

ஏனைய இலக்கிய நூல்களைப் போல, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை மொழிபெயர்ப்பதிலும் சிக்கல்கள் உள்ளன. ஆய்வின் எல்லைக்கருதி பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள அகப்பாக்கள் மட்டும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

வ.வே.சு ஐயரின் திருக்குறள் மொழி பெயர்ப்பு, திரு. அண்ணாமலை அவர்களின் நாலடியார் மொழிபெயர்ப்பு (இந்திய ஆசியவியல் நிறுவன வெளியீடு) மற்றும் பேரா.தட்சிணாமூர்த்தி அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட பதினென் கீழ்க்கணக்கு அகப்பாக்கள் ஆகியவை இக்கட்டுரைக்கு முதன்மை ஆதாரங்களாக அமைகின்றன.

**திருக்குறள் மொழிபெயர்ப்பு**

வ.வே.சு ஐயர் தன்னுடைய மொழிபெயர்ப்பின் முன்னுரையில் ''ஒவ்வொரு குறளும் ஒரு சூழலை விளக்குவதாக அமைந்திருப்பதாகக் கூறுகின்றார். மேலும் ஒரு குறளானது காதலர்களின் பல நூறு மன உணர்வுகளின் ஏதேனும் ஒரு உணர்வை விளக்கும் வகையில் அமைக்கப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார். (Of course each verse can also be considered as describing an insolated situation and containing a delicate of one of the hundred varying moods of the lover's heart)

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பாற் பிரிவுகளை உள்ளடக்கியதாக திகழ்கின்றது. இம்மொழிபெயர்ப்பாளர் மூன்றாவது பகுதியாகிய காமத்துப்பாலை 'Love' என மொழிபெயர்த்துள்ளார். மேலும் 'களவு' என்பதனை ''The Secret marriage'' என்றும், 'கற்பு' என்பதனை Chastityஎன்றும் மொழிபெயர்த்துள்ளார். இவருடைய மொழிபெயர்ப்பு கவிதை மொழிபெயர்ப்பாக அமையாது உரைபெயர்ப்பாகவே அமைந்துள்ளது.

**நாலடியார் மொழிபெயர்ப்பு**

அண்ணாமலை தன்னுடைய மொழிபெயர்ப்பின் முன்னுரையில் ''நாலடியார் வெறும் நீதிகளின் தொகுப்பல்ல் அது உயர்ந்த உவமைகளும், அழகிய எதுகை மோனைகளும் நிறைந்த சிறந்த இலக்கியம்'' என்கின்றார். (Nalatiyar is not a book mere morals; but is a fine literature with wonderful similes & beautiful rhymes).

மேலும், 1893 - ல் ஜி.யு. போப்பிற்கு பின்னர் யாரும் அந்நூலை மொழிபெயர்க்க முன்வரவில்லை என்று குறிப்பிடுவதுடன் தான் இம்மொழிபெயர்ப்பிற்காக மூன்றாண்டுகள் கடுமையாக உழைத்ததாகவும் கூறுகின்றார்.

நாலடியாரின் இன்பத்துப்பால் பகுதியை இவர், 'Sex Values' என்று பெயர்த்துள்ளார். இப்பகுதி மொத்தம் மூன்று இயல்களைக் கொண்டுள்ளது. அவற்றை முறையே

1. Prostitutes
2. Chaste women
3. Parting agony

என்று பெயர்த்துள்ளார்.

சங்க இலக்கியத்தை மொழிபெயர்த்த பெயர்ப்பாளர்கள் 'பரத்தை', 'பொதுமகளிர்' 'வரைவின் மகளிர்' என்ற சொற்களை பெயர்க்கும் பொழுது 'Confidante' (பேரா.தட்சிணாமூர்த்தி) 'harlot' (நல்லாடை பாலகிருஷ்ணன் முதலியார்) ஆகிய சொற்களையே மிகுதியும் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏ.கே.ராமானுஜம் 'Concubine' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். 'Hetaira' என்ற சொல்லும் கையாளப்பட்டு வருகின்றது.

ஆயின் அண்ணாமலை அவர்கள் 'Prostitute' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். 'Prostitute' என்ற சொல்லைவிட 'Concubine' 'Confidante' ஆகிய சொற்கள் அண்மை நிகரனாகக் கருதப்படுகின்றது. கற்பு என்பதை 'Chastity' என்றே இவரும் மொழிபெயர்த்துள்ளார்.

மேலும், வ.வே.சு ஐயர் பிரிவுத் துன்பத்தை 'The Pangs of Separation' என பெயர்த்துள்ளார். அண்ணாமலை பிரிவுத்துன்பத்தை 'Parting agony' என்ற சொல்லால் குறித்துள்ளார். 'Pangs of Separation' என்பதைவிட 'Parting agony' என்பது அண்மை நிகரனாக உள்ளது.

அண்ணாமலையின் மொழிபெயர்ப்புத் திறனுக்குப் பின்வரும் பாடலை சான்றாக்கலாம்.

*''கண்கயல் என்னும் கருத்தினால் காதலி*
*பின்சென்றது அம்ம சிறுசிரல் பின்சென்றும்*
*ஊர்க்கி எழுந்தும் எறிகல்லா ஒண்புருவம்*
*கோட்டிய வில்வாக்கு அறிந்து'' (நாலடியார் - 395)*

The fish hunting bird will mistake the eyes of my love
For the Kayal fish and follow het to catch them and fly above with determination
But going near it will see the curved eyebrow
And fly away quickly fearing eyebrow to be the hunting bow (Nalatiyar - Pg.No.168)

என்ற பாடலில் 'இந்திராணி' பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. இப்பாடலை மொழிபெயர்த்த அண்ணாமலை, 'இந்திராணி' யார் என்பதற்கான குறிப்பை வழங்கவில்லை. மாறாக பாடலை மட்டும் பின்வருமாறு பெயர்த்துள்ளார்.

"A women may be of extremely good character
And equal in her chastity to the queen of god Intiran
But inorder to make herself an ideal wife in all respect
She should have a good forehead and check herself not to induce
Men to roam about her with lust" (Nalatiyar Pg. 162)

இந்திராணி பற்றிய குறிப்பை வழங்கியிருப்பின் பிறமொழி வாசகர்களுக்கு பொருட்புலப்பாடு தெளிவாக அமைந்திருக்கும்.

மேலும் ஊடல் என்பதை வ.வே.சு. ஐயர் என்று 'Bouderie' என்று மொழிபெயர்கின்றார். அண்ணாமலை 'Prentended angry' என மொழிபெயர்த்துள்ளார். ஏனைய சங்க இலக்கிய மொழிபெயர்ப்பாளர்கள் 'Sulkin' என பெயர்த்துள்ளனர். 'Sulking' என்பது அண்மை நிகரனாக உள்ளது.

**அகப்பாக்களின் மொழிபெயர்ப்பு**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள அகப்பாக்களாகிய கார்நாற்பது, கைந்நிலை, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது திணைமொழி நூற்றைம்பது என்ற ஆறு நூல்களையும் மொழிபெயர்த்த தட்சிணாமூர்த்தி அவர்கள் இதற்கு முந்தைய மொழிபெயர்ப்பு முயற்சிகளை தம்முடைய முன்னுரையில் சுட்டியுள்ளார்.

1. நல்லாடை பாலகிருஷ்ண முதலியார் அவர்கள் பதினென் கீழ்க்கணக்கு நூல்களில், திருக்குறள் மற்றும் நாலடியாரைத் தவிர்த்து ஏனைய 16 நூல்களையும் மொழிபெயர்த்துள்ளார்.

2. பூண்டி புஷ்பம் கல்லூரியின் மேனாள் முதல்வர் அமரர் முனைவர் திரு. இராமன் அவர்கள் கைந்நிலை மற்றும் திருக்குறளின் ஒரு சில பகுதிகளைத் தவரித்து ஏனையவற்றை மொழிபெயர்த்துள்ளார்.

என்று தட்சிணாமூர்த்தி சுட்டியுள்ளார்.

''தற்கால வாசகர்களுக்கும், மொழிபெயர்ப்பாளர்களுக்கும் சிக்கலாக உள்ள பண்டையத் தமிழ் இலக்கியங்களின் கருத்தினையும், கவிதைத் தன்மையினையும் மொழிபெயர்ப்பில் கொண்டுவர முயற்சி செய்துள்ளேன்'' என்கின்றார்.

தட்சிணாமூர்த்தி தன்னுடைய சங்க இலக்கிய மொழிபெயர்ப்புகளைப் போலவே சங்கம் மருவிய கால இலக்கிய மொழி பெயர்ப்புகளுக்கும் உரிய திணை, துறையினைச் சுட்டியுள்ளார்.

*"மண் இயல் ஞாலத்து, மன்னும் புகழ் வேண்டி*
*பெண் இயல் நல்லாய்! பிரிந்தார் வரல் கூறும் -*
*கண் இயல் அஞ்சனம் தோய்ந்தபோல், காயாவும்*
*நுண் அரும்பு ஊழ்த்த புறவு'' (காற்நாற்பது - 3)*

என்ற பாடலானது ''பருவம் கண்டு அழிந்த தலைமகள் ஆற்றல் வேண்டி தோழி தனது ஆற்றாமை தோன்ற உரைத்தது'' என்னும் துறையில் அமைந்ததாகும்.

இப்பாடலை,

"O friend of womanly virtues! our man
Parted from us, hoping to establish eternal fame on this earth. Now the forest foretells his imminent arrival, with its tiny buds of the Kaya that unfold and appear like the ones, soaked in collyrium that adorns our eyes''

என்று மொழிபெயர்த்த தட்சிணாமூர்த்தி அதன் துறையையும் ‘The confidante grieves as the heronine feels wretched at the advent of the rainy season’ என்று பெயர்த்துள்ளார்.

மேலும், இப்பாடலின் கீழ் “The Kaya flowers, already blue in colour will turn too dark when soaked in collyrium. This simile indicated the mature clouds are heavily loaded with water’’ என்ற குறிப்பினையும் நல்கியுள்ளார்.

மேலும் சில பாடல்களுக்குக் கீழ் வழங்கிய குறிப்பில் அவற்றை சங்கப்பாக்களுடன் ஒப்பிட்டும் காட்டியுள்ளார்.

எனினும் தட்சிணாமூர்த்தியின் மொழிபெயர்ப்பு உரைநடை மொழிபெயர்ப்பாக உள்ளதேயன்றி கவிதை மொழிபெயர்ப்பாக இல்லை.

**ஆய்வு முடிவுகள்**

மேற்கூறியவற்றை நுணுகி ஆராயுங்கால் வ.வே.சு ஐயர் மற்றும் அண்ணாமலை ஆகிய இருவரும் சங்க இலக்கிய பெயர்ப்பாளர்களின் மொழிபெயர்ப்பு முறை மற்றும் சொல்லாட்சிகளைக் கையாளுதல் ஆகிய இரண்டிலும் பெரும்பான்மையும் வேறுபடுகின்றனர். தட்சிணாமூர்த்தி சங்க இலக்கியப் பெயர்ப்பாளர்களுடன் பெரிதும் வேறுபடவில்லை. வரையறுக்கப்பட்ட சொல்லாட்சிகளைத் தொடர்ந்து அனைத்தும் மொழிபெயர்ப்பாளர்களும் பயன்படுத்தும்பொழுது வாசகர்களுக்குப் பொருள் புலப்பாட்டில் சிக்கல் நேர்வது தவிர்க்கப்படும். சான்றாக தோழி, தலைவி, தலைவன் ஆகியவர்களை Companion, Hero, Heroine என்ற சொற்களால் குறித்தல். மேலும் தேவையான இடங்களில் விளக்கம் தருதல் பொருள் மயக்கம் இல்லாது மொழிபெயர்த்தல் ஆகியனவும் சிறந்த மொழிபெயர்ப்பின் இலக்கணங்களாகும்.

தொகுத்துக்கூறின் மொழிபெயர்ப்பு அறிஞர்கள் ஒவ்வொருவரின் மொழிபெயர்ப்பிலும் நிறைகளும் குறைகளும் இணைவரைவாகவே அமைந்துள்ளன. விரிந்த ஆய்வுகள் பல புதிய உண்மைகளைப் பலனாக்கும் புதிய வழித்தடங்களை உருவாக்கும்.

**முதன்மை ஆதாரங்கள்:**

1. The Kural or the maxims of Thiruvalluvar - V.V.S. Aiyar

2. Nalatiyar - Pl.M.Annamalai - Indian Institute of Asian Studies

3. Patinenkikkanakku works on the Akam theme - Dr. A. Dakshinamurthy.

# தொல்காப்பிய மரபில் தொன்னூல் விளக்கம்

***முனைவர்***
***தி.நெல்லையப்பன்***
*உதவிப்பேராசிரியர்,*
*தொலைதூரக் கல்வி இயக்ககம்,*
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,*
*அண்ணாமலைநகர்-608002.*

**த**மிழின் முழுமுதல் இலக்கணநூல் தொல்காப்பியமாகும். ஒரு மொழியின் தனித்துவமிக்க மரபு என்பது தொல்காப்பியத்திலிருந்தே தொடங்குகிறது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணத்தை உள்ளடக்கித் தொல்காப்பியம் இலக்கணம் மொழிந்துள்ளது. தொல்காப்பியத்தைப் பின்பற்றி வழிநூல்கள் பல எழுதப்பட்டுள்ளன. தமிழ் மொழியைத் தாய்மொழியாக இல்லாதவரும் மொழியே தெரியாதவர்களும் தமிழகம் வந்து தமிழ் பயின்று இங்குள்ள இலக்கியங்களைப் போல் இலக்கியங்களையும் இங்குள்ள இலக்கண நூலான தொல்காப்பியத்தைப் பின்பற்றிப் பல அரிய இலக்கண நூல்களையும் படைத்துள்ளனர். அந்த வகையில் இத்தாலி நாட்டில் பிறந்து தமிழகத்திற்கு வந்து சமயப்பணி ஆற்றியதோடு தமிழ்மொழியை வளர்த்தவர் என்ற சிறப்பு வீரமாமுனிவர் அவர்களுக்கு உண்டு. முப்பத்தேழு ஆண்டுகள் தமிழகத்தில் இறைப்பணியோடு தமிழ்ப் பணியையும் செய்தவர். இவர் முப்பதைந்துக்கும் மேற்பட்ட நூல்களை யாத்துள்ளார். அவற்றுள் தேம்பாவணி காப்பியம், திருக்காவலூக் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, அன்னை அழுங்கல்அந்தாதி, சதுரகராதி என்பனவும் தொன்னூல் விளக்கம் என்ற இலக்கண நூலும் குறிப்பிடத்தக்கனவாகும்.

ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கத்தை 1730களில் எழுதியுள்ளார். அதற்கு உரையையும் அவரே எழுதியுள்ளார். இதில் 370 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன. எழுத்து 40, சொல் 102, பொருள் 58, யாப்பு 100, அணி 70 என்னும் எண்ணிக்கையில் பகுப்பாக்கம் செய்துள்ளார். இது 1838இல் முதல் பதிப்பு பெற்றது.

மரபு வழியைப் பின்பற்றி நூல் அமைந்திருப்பதால் இலக்கண நெறிகளை அவர் எவ்வாறு ஏற்பாக்கம் செய்துள்ளார் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. பொது நிலையில் எழுத்து சொல் இலக்கண நெறிகளை இவர் பெரும்பாலும் நன்னூலையும் பொருளுக்கு நம்பியகப் பொருளையும் இலக்கண விளக்கத்தையும் பின்பற்றியுள்ளார். யாப்பு பாட்டியல் நூல்களையும், அணி தண்டியலங்காரத்தையும் பின்பற்றியுள்ளமை அறியத்தக்கனவாகும். இவையாவும் தொல்காப்பியத்தைப் பின்பற்றியவை என்பது கருதத்தக்கதாகும். தொன்னூல் விளக்கத்தின் மூன்றாம் பதிப்பாக மெக்கன்சி பதிப்பு 1891களில் வெளிவந்துள்ளது. அதன்பிறகு 123 ஆண்டுகளாக எப்பதிப்பும் வெளிவரவில்லை. 2014ஆம் ஆண்டுதான் ம.மத்தியாஸ் பதிப்பு திருநெல்வேலியிலிருந்து வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### செய்யுள் மரபியல்

தொன்னூல் விளக்கத்தில் நான்காவதாக அமைவது யாப்பதிகாரமாகும். இது செய்யுள் உறுப்பு, செய்யுளியல், செய்யுள் மரபில் என மூன்று பிரிவுகளில் 201 முதல் 300 வரையிலான நூற்பாக்களில் இலக்கணம் செய்யப்பெற்றுள்ளது. செய்யுள் உறுப்பில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பன ஆறும் அடங்கும் என்று குறிப்பிட்டுள்ளார். இது யாப்பருங்கலக்காரிகை மொழிந்த நெறியை அப்படியே எடுத்தாண்டுள்ளார்.

யாப்பதிகாரத்தில் இடம்பெற்ற இரண்டாம் ஒத்து செய்யுளியல் என்பது. இதில் வெண்பா, அகவல், கலி, வஞ்சி, மருட்பா எனப் பாவகையும் துறை, தாழிசை, விருத்தம் என்பன மருட்பா ஒழிந்த ஏனைய பாவகைகளுக்குரிய பாவினங்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். விருத்தத்துக்குரிய இலக்கண நெறியைத் தனியே தந்துள்ளார். பாவைந்தும் பாவினங்கள் பன்னிரண்டும் சேர்ந்து பதினேழு வகைச் செய்யுளும் பொதுப்பெயராக வடமொழியில் பத்தியம் என்று வழங்குவர் என்ற குறிப்பையும் தந்துள்ளார். பாவகையில் இலக்கணம் சிதையினும் பாவின் நடையோடு ஒப்பவருவன கத்தியம் என்று அழைக்கப்படும். இதற்கு உதாரணமாக ‘கொன்றைவேந்தன்’ என்ற நிலையும் காட்டியுள்ளார்.

இதுமட்டுமல்லாமல் பாவிற்கும் பாவினங்களுக்குமான வண்ணங்கள் இருபது என்று தொல்காப்பியரும் பின்வந்தோர்களும் மொழிந்துள்ள நெறியை ஏற்பாக்கம் செய்து வண்ணங்கள் இருபது என்று குறிப்பிட்டுள்ளார். அவற்றுக்கான உரையில் வீரமாமுனிவர் சுருக்க நெறியைப் பின்பற்றியுள்ளார். அவற்றை பிற்கால இலக்கணியர் விநயனார் நூறாக விரித்துள்ளமையும் எடுத்துக்காட்டியுள்ளார். தூங்கிசை, ஒத்திசை, அடுக்கிசை, பிரிந்திசை, மயங்கிசை என்பன முறையே இருபது இருபது வண்ணங்கள் வளர்ந்து நூறு என்ற எண்ணிக்கையில் விளக்கம் பெற்றுள்ளதையும் விநயனார், கையனார் போன்றோர் பகுத்துள்ள நெறியையும் விளக்கிக் காட்டியுள்ளார். தொல்காப்பியர் சுட்டியுள்ள வண்ணங்களின் வகையையும் எடுத்தாண்டுள்ளார்.

வல்லிசை வண்ணம்-இது எதுகை முதலடியெல்லாம் வல்லினம் மிகுவன, மெல்லிசை வண்ணம் - மெல்லினம் மிகுவன; இடையிசை வண்ணம் - இடையினம் மிகுவன; ஒழுகிசைவண்ணம் - மூவினமும் விரவி வருவன; எண்ணும் வண்ணம் - பலவை எண்ணி வருவன; உருட்டு வண்ணம் - அராகத்தோடு வருவன; முருடு வண்ணம் - அராகத்தோடு அடியின் முதலும் ஈறும் தோன்றாமல் தொடர்ந்து நீண்ட அடியால் வருவன; ஏந்திசை வண்ணம் - நேரீற்ற உரிச்சீர் மிக வந்து ஏந்திய ஓசையில் வருவன; தூங்கிசை வண்ணம்-நிரையீற்ற உரிச்சீர் மிக்கு வருவன; அகைப்பு வண்ணம்-மறுத்து அறுத்து இயல்வன; புறப்பாட்டு வண்ணம்-முகிந்து போல முகியாதியல்வன; அகப்பாட்டு வண்ணம்-முகியாதது போல முகிந்து வருவன; அளவு வண்ணம்-அடிதோறும் அளபெடை எதுகை கொண்டு வருவன்; பாவு வண்ணம்-நூற்பாவால் உரைத்து வருவன; நலிபு வண்ணம்-அடிதோறும் எதுகையாக ஆய்தம் கொண்டு வருவன; தரவு வண்ணம்-ஓரடிக்கோரடி இடைவிட்டு அடி எதுகை ஒன்றி வருவன; ஒரூஉ வண்ணம்-அடிதோறும் ஒன்றாத தொடையொடு வருவன; குறுஞ்சீர் வண்ணம்-குற்றெழுத்து இயைந்து வருவன; நெடுஞ்சீர் வண்ணம்-நெட்டெழுத்து இயைந்து வருவன; சித்திர வண்ணம்-நெடிலும் குறிலும் விரவி வருவன.செய்யுள் வகைகள் முத்தகம்,குளகம், தொகைநிலை, தொடர்நிலை என நான்கு வகைப்படும். தனியே நின்று ஒரு பொருளைப் பாடுவது முத்தகம் என்னும் செய்யுள் வகையாகும். அதனால் முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும். ஒவ்வொரு பாட்டும் தன்வினைக் கொள்ளாமல் பலவே கூடி ஒரு வினை கொண்டு முடிவனவாக வருவது குளகம் என்பதாகும். பொருள், இடம், காலம், தொழில் ஆகிய நான்கு வகைப் பாகுபாடுகளால் கூறியவற்றையோ பாட்டு வகையாலோ அளவு வகையாலோ கூறியவற்றைத் தொகுத்துக் கூறுவது தொகைநிலைச் செய்யுள் எனப்படும். இந்த வகைக்கு, திருக்குறள், நெடுந்தொகை, புறநானூறு, களவழி நாற்பது என்பனவற்றைக் கூறலாம்.

தொடர்நிலைச் செய்யுள் என்பது பொருள் தொடர்நிலை என்றும் சொல் தொடர்நிலை என்றும் இருவகைப்படும். ஒரு பொருளை

விளக்கத் தம்முன் பற்பல பாட்டாய் தொடர்ந்து வரும் பல பாட்டுகளால் இயற்றப் பெறுவது பொருள் தொடர்நிலையாகும். இந்த வகைக்கு இராமாயணம், சிந்தாமணி போன்ற காப்பியங்களை சொல்லவியலும்.

சொல் தொடர்நிலை என்பது ஒரு செய்யுளின் இறுதி மற்றொரு செய்யுளுக்கு ஆதியாகச் செய்யுள் அந்தாதியோடு தொகுத்து வருவன. இதில் கலம்பகம், அந்தாதி போன்ற செய்யுள் வகைகளைக் கூறலாம்.

செய்யுள் வகைகளை வீரமாமுனிவர் வகைப்படுத்திய தன்மை தண்டியலங்காரத்தையே பெரிதும் ஏற்பாக்கம் செய்துள்ளார்.

காப்பியம் புராணம் குறித்த நெறிகளையும் வீரமாமுனிவர் தண்டியலங்காரத்தையே பெரிதும் பின்பற்றியுள்ளார். காப்பியம் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்கள் அமையப் பாடப்பெறுவது காப்பியமே. பல கதைகளைப் புனைந்து வருவது புராணம் என்னும் வகையாகும்.

பெருங்காப்பியம் என்பது தெய்வ வணக்கம், செய்பொருள் உரைத்தல், இருவகைச் சிறப்பாயிரம் கொண்டு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பொருள்களும் விளைவதற்கு ஏதுவாகி, தன்னிகரில்லாத் தலைவனைப் பாநாயகனாகக் கொண்டு பாடவேண்டும். மலை, கடல், நாடு, நகர், பருவம், சூரிய உதயம், சந்திர உதயம் ஆகிய வருணனைகள் இடம்பெற்று நன்மணம் புணர்தல், பொன்முடி சூடல், பொழில், நீர் விளையாட்டுக்கள் அமைத்தல்,தேன் இனிமையும் மது மயக்கமும் தரும் மக்களைப் பெறுதல், புலவியில் புலத்தல் கலவியில் கலத்தல் போன்ற நிகழ்வுகளை வெளிப்படுத்தல், நல்ல நடையில் உருவாக்குதல், மந்திரம், தூது, செலவு, போர், வெற்றி ஆகியவற்றைத் தொடர்ந்து கூறுதல், சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் போன்ற காப்பிய அங்கங்கள் கொண்டு இயற்றுதல், மிகுந்த சுவை, பாவம் விரும்பும்படி கற்றறிந்தோர் புனையும் தன்மையும் உடையனவாகப் படைத்தல் இவற்றுள் சில குறைந்தும் கூடியும் பாடும் நெறி காப்பியமாகும்.

இவ்வாறே பிள்ளைக் கவி (விருத்தம்), கலம்பகம் (ஒருபோகு, வெண்பா, கலித்துறை பரணி (ஈரடி ப∴றொழிசை) உலா (கலிவெண்பா), மடல் (கலிவெண்பா) அங்கமாலை (கலிவெண்பா (அ) வெளிவிருத்தம்) சின்னப்பூ (தெளிந்த நேரிசை வெண்பா) தசாங்கம் (கலம்பக விதி) ஒருபா ஒருபது (வெண்பா (அ) ஆசிரியம் (அ) கலித்துறை) இருபா இருபது (வெண்பா + ஆசிரியம்) ஆற்றுப்படை-(ஆசிரியம்) வருக்கமாலை-கசதகபமவ என்றும் எழுத்துக்களை முதற்கண் வைத்து எட்டு அகவலை எப்பொருள் மீதும் பாடும் செய்யுள். மாலை மூன்று – படை, போர், வெற்றியை அகவற்பாவால் பாடும் நெறி. இது, தானை, வஞ்சி, வாகை என மூவகைப்படும். புகழ்ச்சி மாலை, (மாதரை வஞ்சிப்பாவால் பாடுவது) நாமமாலை (ஆடவரைப் பாடுவது)

செருக்களவஞ்சி, வரலாற்று வஞ்சி, நான்மணி மாலை, விருத்தம், அட்டமங்கலம், நவமணிமாலை, பலசந்தமாலை, ஊசல், கோவை, இரட்டை மாலை, மணிமாலை, பன்மணிமாலை, மும்மணிக் கோவை, மும்மணி மாலை, அலங்கார பஞ்சகம் போன்ற பிரபந்தங்களுக்குரிய பாநெறிகளும் பாட்டியல் நூல்களாகக் கொண்டே இலக்கணப்படுத்தியுள்ளார்.

பிரபந்தங்கள் பாவாலும், பொருளாலும், அளவாலும் பெயர் பெற்றுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஐந்திணைச் செய்யுள் முதலாக பெருமங்கலம் இறுதியாக உள்ள ஐம்பத்தாறு பிரபந்தங்களில் இலக்கண நெறியையும் மொழிந்துள்ளார். பிறகு ஒரு செய்யுள் இயற்றுங்கால் அச்செய்யுளில் அமையும் முதல் மொழி குறித்தும் பேசுகின்றார். அந்த முதல்மொழியில் பல பொருத்தங்கள் உள்ளன என்றும் அவை மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உணவு, வருணம், நாள், கதி, கணம் ஆகிய பத்தும் எண்ணத்தக்கன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இப்பொருத்தங்கள் அமைத்துதான் செய்யுள் இயற்றப்பட வேண்டும் என்பது மூடநம்பிக்கை என்றும் இப்பொருத்தங்கள்

இல்லாமலும் செய்யுள் இயற்றலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். எனது இலக்கியங்களில் இப்பொருத்தங்களை வைத்துநான் இயற்றியிருக்கின்றேன் என்றால் அவற்றை எனக்கும் பயன்படுத்திச் செய்யுள் இயற்றமுடியும் என்பதைக் காட்டுவதற்கே என்றும் குறிப்பிட்டுள்ளார். (தொன்னூல் விளக்கம், ப.457).

வெண்பா, ஆரியம், கலி, வஞ்சிப்பாக்களுக்குரிய சில இயல்புகள் பாட்டியல்நூல்களில் இடம்பெற்றுள்ளன. அவற்றையும் நூற்பாக்களாக்கியுள்ளார்.

வெண்பாக்குரியன: அந்தணர் சாதி, முல்லை நிலம், வெண்நிறம், கார்த்திகை, பூராடம், உத்திராடம், திருவோணம், திருவாதிரை, புனர்பூசம், பூசம் என்ற ஏழு நாட்களும் கடகம், விருச்சிகம், மீனம் ஆகிய மூன்று ராசிகளும் திங்கள், வியாழன் ஆகிய இருகோள்களும் இதற்குரியன.

ஆசிரியப்பாவிற்குரியன: அரசர் குலம், குறிஞ்சி நிலம், சிவப்பு நிறம், மகம், பூரம்,உத்தரம், அத்தம், சித்திரை, சோதி, விசாகம் ஆகிய ஏழு நாட்கள்,மேடம், சிங்கம், தனுசு என மூன்று இராசிகள், செவ்வாய், ஞாயிறு ஆகிய இரு கோள்கள்.

கலிப்பாவிற்குரியன: வணிகர், மருத நிலம், நிறம் பொன்நிறம், அனுடம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம் ஆகிய ஆறு நாட்கள், கும்பம், மிதுனம்,துலாம் இராசிகள். புதன், சனி ஆகிய கிரகங்கள்.

வஞ்சிப்பாவுக்குரியன: சூத்திரர், நிலம் நெய்தல், கரிய நிறம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி ரேவதி, அசுவதி, பரணி ஆகிய நாள்கள், இயம், கன்னி, மகரம் ஆகிய ராசிகள். சுக்கிரன், பாம்பு ஆகிய இரு கிரகங்கள்.

இவையும் தொல்காப்பியக் காலத்தில் மொழியப்படவில்லை. பின்வந்த பிரபந்தங்களின் இலக்கண நெறிகளில்தான் சொல்லப்-பட்டுள்ளன என்பதும் கருதற்குரியன.

நாற்கவியின் இயல்பு நெறியில் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் குறித்தும் யாப்பியல் நூல்களை அடியொற்றியே விதி கூறியுள்ளார்.

யாப்பு நெறியின் தொகுப்பாக அசைகள், இரண்டு வகைப்படும். சீர்கள் ஐந்து வகைப்படும். தளைகள் ஏழு வகைப்படும். அடிகள் ஐந்து வகைப்படும் எனவும் தொடை வகைகள் 43 என்றும் ஐம்பால்கள் என்றும் மூவினங்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். செய்யுள் வகை நான்கு என்றும் இவற்றோடு செய்யுள் விகற்பங்களும், பத்து பொருத்தங்களும் அமைந்து இயற்றப்படுவது யாப்பு என்று குறிப்பிட்டுள்ளமையும் யாப்பருங்கலக்காரிகை நெறியாக்கத்தையே வெளிப்படுத்தும் மரபு பின்பற்றலாகக் கொள்ளலாம். தொல்காப்பியருக்குப் பின்வந்தோர் பல எளிய நெறிகளையும் ஏற்பமையையும் கொண்டு இலக்கணப்படுத்தியிருந்தாலும் அடித்தளமாகப் பல நெறிகள் தொல்காப்பிய செய்யுளியல் நெறிகள்தான் பின்பற்றப்பட்டு சில மாற்றங்களையும் விளக்கங்களையும் காலந்தோறும் பெற்று வருகின்றன என்பதற்குத் தொன்னூல் விளக்கமும் விதிவிலக்காது.

# சிலப்பதிகாரம் காட்டும் இந்திரவிழா

**முனைவர் ச.செந்தில்குமார்**
உதவிப்பேராசிரியர்,
தமிழியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்.

மணிமேகலையின் தொடக்கத்தில் அமைந்த விழாவறை காதையிலும் சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூரெடுத்த காதையிலும் பண்டைக்காலத்தில் பூம்புகார் நகரத்தில் கொண்டாடப்பட்ட பெருவிழாவாகிய இந்திர விழாவைப் பற்றிய குறிப்புக்கள் அமைந்துள்ளன. இவ்விழாவின் இயல்புகளையும் சிறப்புக்களையும் சுட்டுதலே இவண் நோக்கம்.

**திருவிழாவின் பெருநோக்கம்**

நாட்டில் கொண்டாடப்படும் விழா ஒவ்வொன்றுக்கும் நல்ல நோக்கம் ஒன்று அடிப்படையாக அமைந்திருத்தல் இயல்பு. இந்நோக்கம் பெரும்பாலும் சமுதாயத்தின் உயர் வாழ்வு பற்றியதாகவே இருக்கும். இம்முறையில் பண்டைத் திருவிழாவாகிய இந்திரவிழாவுக்கும் சமுதாய நல்வாழ்வு என்னும் உயரிய நோக்கமே அடித்தளமாக அமைந்துள்ளது.

**உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு.**[1]

என வள்ளுவர் நாட்டின் நல்லிலக்கணத்தை நவில்வர். இம்முறையில் நாட்டில் பசியும் பிணியும் பகையும் நீங்குதல் வேண்டும் என்பதையும் வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி[2] மகிழ்தல் வேண்டும் என்பதனையும் இருபெருங்காப்பியங்களும் இயம்புகின்றன.

**தொண்மைத் திருவிழா**

இந்திரவிழா தமிழகத்திற்குரிய பெருவிழாவாக இரட்டைக் காப்பியங்களில் கூறப்பட்டுள்ளது. மேலும், இவ்விழா பழமைச் சிறப்புடைய திருவிழாவாக விளங்கியதென்பதற்கும் சான்றுகள் உள. வான்மீகி, காளிதாசர், ஆகியோரும் இந்திரவிழாவைப் பற்றிய குறிப்புக்களைத் தம் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர் என்பதை டாக்டர் உ.வே.சா. குறிப்பால் அறியலாம்[3].

தொல்லிலக்கணியாகிய தொல்காப்பியர் 'வேந்தன் மேய தீம்புனல் உலகமும்'[4] என இந்திரனாகிய கடவுளைக் குறிப்பிட்டுள்ளதும் இந்திர வழிபாட்டின் தொன்மையை விளக்கும் சான்றாகும். இப்பகுதிக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியரும் இவ்விழாவைப் பற்றிய குறிப்புக்களைக் குறிப்பாகச் சுட்டியுள்ளார். 'இன்குரல் எழிலிக்கும் இறைவனாகிய இந்திரனை ஆண்டையோர் விழவுசெய்து அழைத்தலின் அவன் வெளிப்படும்' என்றார்[5] எனவரும் உரைப்பகுதியும் இதனைத் தெளிவிக்கும்.

**திணை ஒருமைப்பாட்டு விழா**

தமிழில் நிலங்களை நான்கு வகைகளாகவும், ஐந்திணைகளாகவும் பிரித்துக் கூறுதல் மரபு. ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய வழிபடு கடவுளர்களும் உளர். இம்முறையில் கடலும் கடல்சார்ந்த இடமுமாகிய பூம்புகார் நகரம் நெய்தல் திணைப்பகுதியாக விளங்குவது, இந்நிலத்திற்கு வருணன் வழிபடு

கடவுளாவான். இதனை 'வருணன் மேய பெருமணல் உலகம்' எனவரும் தொல்காப்பியத் தொடர் விளக்கும். இந்திரன் மருதநிலத்திற்குரிய கடவுள் என்பதை 'வேந்தன் மேய தீம்புனல் உலகமும்' எனவரும் தொடர் தெளிவுபடுத்தும்.

பூம்புகார் நகரத்தில் கொண்டாடப்பட்ட விழா, திணை ஒருமைப்பாட்டு விழாவாகவும் விளங்கும் சிறப்பைக் காணலாம். நெய்தல் நிலத்துக்குரிய பூம்புகார் நகரத்து மக்கள் மருதநிலத்திற்குரிய கடவுளாகிய இந்திரனுக்கு விழாச் செய்கின்றனர். மருதமும் நெய்தலும் மயங்கி நின்று நிகழ்த்தப்படும் இந்திரவிழா இம்முறையல் திணை ஒருமைப்பாட்டு விழாவாகவும் திகழ்கின்றது.

இந்திரன் மேகத்திற்குத் தலைவனாக விளங்குபவன். இந்திரவிழாவாகிய சமுதாய விழாவின் நோக்கம் நாட்டின் நல்வாழ்வே ஆதலால் இத்தகைய நல்வாழ்விற்கு அடிப்படையாக விளங்கும் மழையைப் பெறுதற்காக மழைக்கடவுளாகிய இந்திரனை நோக்கி இவ்விழா நிகழ்த்தப்பட்டது எனக் கொள்ளலாம்.

**தலைமைச் சிறப்புடைய விழா**

இந்திரவிழா கொண்டாடப்பட்ட பூம்புகார் நகரத்தில் பல்வேறு கடவுளருக்கும் கோயில்கள் விளங்கின. பிறவாயாக்கைப் பெரியோனுக்கும், அறுமுகச் செவ்வேளுக்கும், வால்வளை மேனிவாலியோனுக்கும், நீலமேனி நெடியோனுக்கும் கோயில்கள் விளங்கின என்பதைச் சிலப்பதிகாரம் கூறும்.[6] மணிமேகலையும் நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாகப் பதிவாழ் சதுக்கத்து தெய்வம் ஈறாகக் கோயில்கள் இருந்ததைச் சுட்டும்.[7] தேவர்களையும் மூவர்களையும் விட இந்திரனுக்கே இவ்விழா நிகழ்த்தப்பட்டதை நோக்க, இக்கடவுளரை விட மழைக்கடவுளாகிய இந்திரனே இரட்டைக் காப்பியக் காலத்தில் முதற் கடவுளாகப் போற்றப்பட்டிருத்தல் வேண்டும் என முடிவினைக் கொள்ளவியலும். அல்லது பிற கடவுளர் இருப்பினும் இந்திரனே மழைக்கடவுளாதலால், மழைபெறுவதற்காக நிகழ்த்தப்பட்ட இவ்விழாவில் இந்திரன் ஏத்தப்பட்டான் எனக்கொள்ளிலும் தவறாகாது. இம்முறையில் இந்திரவிழா தலைமைச் சிறப்புடைய விழாவாகவும் விளங்கக் காணலாம். இளங்கோவடிகள் 'மாமழை போற்றதும் மாமழை போற்றதும்' எனக்[8] கூறியிருப்பதும் இதனை அரண்செய்யும் சான்றாகக் கொள்ளலாம்.

**சாந்தி விழா**

தீமைகள் நிகழ்தற்குரிய குறிப்புக்களைக் காண்புழி மக்கள் தங்கள் வழிபடு கடவுளருக்கு விழாச் செய்தல் இயல்பு. இதற்கு ஆய்ச்சியர் குரவையுள் நிகழ்த்தப்பட்ட வழிபாடு சான்று பகரும். 'குரவையாடுதும் யாமென்றாள் கறவைகன்று துயர்நீங்குக எனவே' எனவரும் பகுதி.[9] இதனை உணர்த்தும். இம்முறையில் இந்திரவிழாவும் ஒருவகைச் சாந்திவிழாவாகவே கொண்டாடப்பட்டதை உணரலாம்.

இந்திரவிழாவிற்குத் தீவகச் சாந்தி என்பதும் தீபசாந்தி என்பதும் வேறு பெயர்கள். நாவலந்தீவு, சம்புத்தீவு என்பவை இந்நாட்டிற்குப் பழமையாக விளங்கும் பெயர்கள். நாவல் மரங்கள் மிகுதியாய் இருந்தமையால் இப்பெயர் எய்திற்று என்பர். இந்தீவில் உள்ளார்க்கு அசுரரால் வரும் தீங்கைப் போக்குதற்காகச் சம்பாபதி என்னும் காவல் தெய்வத்தால் இந்திரனுக்குச் செய்யப்பட்டமையால் தீவகச்சாந்தி அல்லது தீபசாந்தி என்னும் பெயர் இவ்விழாவிற்கு வழங்கிற்று. இதனை மணிமேகலை கூறுகின்றது.[10]

இந்திரவிழாச் செய்தலை மறுப்பின் நாளங்காடியில் நரகரைப் புடைத்து உண்ணும் பூதம்பொருந்தாதாயிடும்.[11] என்றும் நாட்டுக்குக் கேடுகள் பல சூழும் என்றும் கருதப்பட்டது. இக்குறிப்புக்களால் இந்திரவிழாவானது நாட்டின் துன்பத்தை நீக்குதற்காகச் செய்யப்படும் சாந்தி விழாவாகத் திகழ்ந்தது என்னும் குறிப்பை அறியலாம்.

**விழா முறைகள்:**

**விழாத்தொடக்கம்**

இந்திரவிழா தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் காலம் முதலாகப் பூம்புகாரில் கொண்டாடப்பட்டது. இம்மன்னன், இந்திரன் அவுணரோடு செய்தபோரில் இந்திரனுக்குத் துணைசெய்தான் என்றும் அவன் வேண்டுகோளுக்கு ஏற்ப இந்திரனும் ஆண்டுதோறும் நிகழ்த்தப்படும் இவ்விழாவில் கலந்துகொண்டான் என்றும் மணிமேகலை கூறுகின்றது.[12] இக்குறிப்பால் பூம்புகார் நகரில் சோழர்குலத் தோன்றலாகிய தொடித்தோட் செம்பியன் காலம் முதலாக இவ்விழா கொண்டாடப்பட்டது என அறியலாம்.

ஆனால், மணிமேகலையிலேயே காவல் தெய்வமாகிய சம்பாபதியால் இந்திரனுக்குச் செய்யப்பட்டது. இவ்விழா என்ற குறிப்பும் இடம் பெற்றுள்ளதை முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. இக்குறிப்பு, இவ்விழா காவல் தெய்வமாகிய சம்பாபதியில் தொடங்கப்பட்டது என்பதை விளக்கி நின்றது.

இவ்விரு குறிப்புக்களும் முரணுவதுபோல் அமைந்துள. ஆயினும் முசுகுந்தன் இந்திரனை வேண்டிய பின்னர் தந்நகரத்திற்குரிய காவல் தெய்வமாகிய சம்பாபதியை முன்நிறுத்தி

இவ்விழாவைச் செய்திருக்கலாம் என இரண்டு குறிப்புகளையும் இணைத்துக் கொள்வது இம்முரண்பாட்டைப் போக்குவதாகும்.

**விழாநாள்**

இந்திரவிழா சித்திரை மாதத்தில் சித்திரை விண்மீனும் நிறைமதியும் சேர்ந்த நன்னாளில் தொடங்கப்படும். 'இதனைச் சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென' என வரும் சிலப்பதிகாரத்தொடரால் அறியலாம்.[13] மேலும் இவ்விழா தொடர்ந்து இருபத்தெட்டு நாட்கள் நடைபெறும் என்பதை,

**'விழாக்கோ ளெடுத்த,**

**நாலேழ்நாளிலும்'என்றும்[14]**

**'நாவேழ் நாளினு நன்கறிந்தீரென' என்றும்[15]**

வரும் தொடர்களால் அறியலாம்.

**பூதத்திற்குப் பலி**

மருவூர்ப்பாக்கத்திற்கும் பட்டினப் பாக்கத்திற்கும் இடையில் அமைந்தது நாளங்காடி. இங்கு இந்திரன் ஏவலால் அனுப்பப்பட்ட சதுக்கப்பூதத்தின் வாழ்விடம் அமைந்துள்ளது. இப்பூதத்திற்கு மறக்குடிப் பெண்டிரும் மறவரும் பலிகொடுத்து, புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும், பூவும், புகையும், பொங்கலும், படைத்து, துணங்கைக் கூத்தும் குரவைக்கூத்தும் ஆடி விழாவைத் தொடங்குவர்[16].

**மன்றங்களில் பலி**

பூம்புகார் நகரத்தில் வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் நின்ற மன்றம், பூதசதுக்கம், பாவை மன்றம் முதலாய மன்றங்கள் நிறைந்திருந்தன. இம்மன்றங்களில் அமைந்த தெய்வங்களுக்குப் பலியூட்டுதல் என்பதும் விழா நிகழ்ச்சிகளில் ஒன்று[17].

**முரசறைதல்**

விழா நிகழ்ச்சியின் தொடக்கத்தையும் விழாவின்போது மக்கள் ஒழுகவேண்டிய நெறிகளையும் ஊராருக்கு முரசறைந்து அறிவிப்பர். இதற்காக இந்திரனது வச்சிரப்படைக்கு அமைந்த கோட்டத்தில் உள்ள மங்கல முரசினைக் கச்சையணிந்த யானையின் பிடர்த்தலையில் ஏற்றுவர்[18]. ஐராவதக் கோயிலினின்று விழாச் செய்தியை முரசறைவர்[19]. கற்பகத் தருவிற்கு அமைக்கப்பட்ட தருக்கோட்டத்தின் முன்னர் அட்டமங்கலத்தோடு ஐராவதம் உருவத்தை எழுதிய கொடியைத் துறக்கத்தே செல்ல ஏற்றுவர்[20].

வானம் மும்மாரி பொழிக, மன்னவன் செங்கோலனாகுக, வீதிகளையும் வீடுகளையும் அணிசெய்மின், பூரணகும்பத்தையும் பாவைவிளக்கையும் பரப்புமின், பழமணல் மாற்றிப் புது மணல் பரப்புமின், கோயில்களில் விழாச் செய்மின், பட்டி மண்டபத்தில் பாங்கறிந்து ஏறுமின், செற்றமும் கலாமும் செய்யாது ஒழிமின் எனவரும் செய்திகள் முரசறையுங்கால் மொழியப்படுவனவாகும்.

**பலரும் கலந்து கொள்ளுதல்**

இவ்விழாக் காலத்தில் பூம்புகார் நகரம் முழுவதும் பொலிவோடும் மகிழ்வோடும் விளங்கும். ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும், அரசகுமரரும்,பரதகுமரரும் கலந்து உருவெய்திய கடவுளரும் கரந்து, ஒருங்கீண்டிய பாடைமாக்களும் மண்ணவரும் விண்ணவரும் மகிழ்வோடு கலந்து கொள்வர். கங்குலும் பகலும் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு இவ்விழா நடக்கும்.

**மஞ்சனமாட்டுதல்**

இந்திரவிழாவில் மழைக்கடவுளாகிய இந்திரனுக்குத் திருமஞ்சனம் ஆட்டுதலே இன்றியமையா நிகழ்ச்சி. தண்ணறுங் காவிரியின் தாதுமலந்த பெருந்துறையில் புண்ணிய நன்னீரைப் பொற்குடத்தில் ஏந்தி வருவா். மண்ணகம் மருள வானகம் வியப்ப விண்ணவர் தலைவனுக்கு அரசகுமரரும் பரதகுமரரும் விழுநீர் ஆட்டுவர். விழாவையொட்டிப் பல்வேறு கடவுள் கோயில்களிலும் பூசனைகள் நிகழும்.

இவையே இந்திரவிழாவைப் பற்றி இருகாப்பியங்கள் கூறும் செய்திகளாகும்.

இங்ஙனம் சமுதாயநல்வாழ்வை உயா்நோக்கமாகக் கொண்டு செய்யப்பட்ட பெரு விழாவாக, பழமைச் சிறப்புடைய தொன்மைத் திருவிழாவாக, திணைமக்களின் ஒருமைப் பாட்டு நல்விழாவாக, தலைமைச் சிறப்புடைய விழாவாக, துன்பத்தை, நீக்கும் சாந்தி விழாவாகத் திகழ்ந்த சிறப்புடையது இந்திரவிழா.

**மேற்கோள்**


1. திருக்குறள் -738

2. சிலப்பதிகாரம்-இந்திரவிழாவூரெடுத்த காதை 72-73

மணிமேகலை – விழாவறைகாதை 70-71

3. சிலப்பதிகாரம் - இந்திரவிழாவூரெடுத்த காதை – உ.வே.சா.அடிக்குறிப்பு விளக்கம்

4. தொல்காப்பியம் - அகத்தினை – நூற்பா 5

5. தொல்காப்பியம்-அகத்தினை–நச்சினார்க்கினியர் உரை

6. சிலப்பதிகாரம் - இந்திரவிழாவூரெடுத்து காதை 169-172

7. மணிமேகலை – விழாவறைகாதை 54-55

8. சிலப்பதிகாரம் - மங்கலவாழ்த்துப் பாடல் 7-8

9. சிலப்பதிகாரம் - ஆய்ச்சியர் குரவை – கருப்பம்

10.மணிமேகலை – ஊரலர் உரைத்த காதை – 1-3

11.மணிமேகலை விழாவறைகாதை – 20-24

12.மணிமேகலை விழாவறைகாதை – 4-9

13.சிலப்பதிகாரம் -இந்திரவிழாவூரெடுத்த காதை – 64

14.மணிமேகலை விழாவறைகாதை 7-8

15.மணிமேகலை விழாவறைகாதை 67

16.சிலப்பதிகாரம் -இந்திரவிழாவூரெடுத்த காதை 66-70

17.சிலப்பதிகாரம்-இந்திரவிழாவூரெடுத்த காதை139-140

18.சிலப்பதிகாரம்-இந்திரவிழாவூரெடுத்த காதை141-142

19.மணிமேகலை–விழாவறைகாதை – 27-28

20.சிலப்பதிகாரம்-இந்திரவிழாவூரெடுத்த காதை143-144

21.சிலப்பதிகாரம்-இந்திரவிழாவூரெடுத்த காதை145-146.

# தங்க.செந்தில்குமார் கவிதைகளில் பெண்ணீயம்

**முனைவர் அரங்க.அன்பில்நாதன்**

உதவிப்பேராசிரியர்

தமிழியல் துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைநகர்

**முன்னுரை**

ஆண் பெண் இருவராலும் ஆனது தான் உலகம். இயற்கையின் படைப்பில் இருவரும் சமமே. ஆனால் சமூகம் ஆண்களை உயர்வாகவும் பெண்களை தாழ்வாகவும் பார்க்கிறது. பெண்களுக்கு பேசவும் படிக்கவும் உரிமைகள் மறுக்கப்பட்டன. இக்காலகட்டத்தில் தான் பெண்களின் அடிமைத் தனத்தைப் போக்குவதற்கு தந்தைப் பெரியார், இராஜாராம் மோகன்ராய், பாரதியார், பாரதிதாசன் போன்ற தலைவர்கள் குரல் எழுப்பினர். அவ்வரிசையில் கவிஞர் தங்க. செந்தில் குமார் அவர்களும் பெண்களுக்காக எழுப்பிய குரலை அவர் கவிதையின் வரிகள் மூலம் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அடிமை வாழ்க்கை**

உலகம் தோன்றிய காலந்தொட்டு இன்று வரையில் பெண்கள் அடிமை வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சுயமாக சிந்திக்கும் உரிமையற்று ஆண்களுக்க அடங்கியே வாழ்ந்தனர். ஆண்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வாழ்கின்றர். இதனை,

**"நான் முழுக்க உழைப்பான்**

**இந்த வேலை தான் என்றில்லை**

**நாற்று பறிக்க நடவு நட கடலை ஆய**

**எஞ்சிய நேரத்துல கரீம்பாய்**

**வீட்டுக்குக் கறிவாங்கிக் கொடுப்பது**

**ஜெயராமய்யர்**

**வீட்டுக்குக் காய் வாங்கிக் கொடுப்பது**

**பழனிவேல் வீட்டில் பாத்திரம் தேய்ப்பது**

**எதுவாயினும் செய்யார்**

**எல்லாம் அப்பாவுக்காகத் தான்"**

என்ற வரிகளில் பெண்கள் ஆண்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு எந்திரமாக கருதப்படுகிறார் என்பதைக் கூறியுள்ளார்.

மது பல பெண்களின் வாழ்க்கையைப் பாலைவனமாக மாற்றியுள்ளது. குடிகார கணவனுக்கு வாழ்ந்து கொண்டிருக்கும் பலர். கீழ்வரும் இக்கவிதையில் கூட கவிஞர் அவர்கள் குடிக்க பணம் தராத மனைவியின் நிலையை எடுத்துக்கூறியுள்ளார்.

**"உரிய தொகை கொடுத்து**

**உதவாத போது எல்லாம்**

**அதிகமாய் உதைபடுவாள்**

**அம்மா"**

பெண்களுக்கு கல்வி அளிக்கப்படவில்லை வீட்டிற்குள்ளேயே படி தாண்டாப் பத்தினிகளாக முடங்கிக் கிடக்கிறார்கள். அறியாமை மூடநம்பிக்கை தீவிர சமய நம்பிக்கை பகுத்தறிவின்மை போன்றவை பெண்களைச் சுய சிந்தனையே செய்ய விடாமல் தடுக்கிறது. மொத்தத்துல பெண்கள் தங்கள் உரிமையை முழுமையாக உணராமல் வாழ்கின்றனர். 'ஓஷோ' அவர்களும் பெண்கள் தாங்கள் என்ன இழந்து கொண்டிருக்கிறோம் என்று தெரியாமலே வாழ்கின்றனர் என்கிறார். உரிமையில்லாத பெண்களின் வாழ்வானது ஒருவகையில் அடிமை வாழ்க்கை என்று கருதத்தக்கது. நாகரீகம் அடைந்த எல்லா நாடுகளிலும் முன்னேற்றம் பெற்ற நாடுகளிலும் கூட மனிதர்களின் நிலை இவ்வாறு தான் காணப்படுகிறது என்கிறார் லெனின்.

இன்னும் பல பெண்கள் கணவன் எவ்வளவுதான் கொடுமைகள் செய்தாலும் அவனைத் தெய்வமாக நினைத்தே வாழ்கின்றனர். அவன்தான் உலகம் என்று நினைக்கின்றனர். 'தங்க. செந்தில்குமார்' அவர்களும் தம் கவிதையின் மூலம் இதனை, கீழ்வரும் கவிதையில் வெளிப்படுத்துள்ளார்.

**"அம்மாலைப் பொறுத்தவரை**

**அவளுக்கு உலகம் அப்பா தான்"**

பெண்களின் அடிமைத்தனம் இன்று கொஞ்சம் மாறிவிடுகிறது. எனினும் முழுமையாக இன்னும் சம உரிமை பெறவில்லை என்பது வேதனைக்குரிய ஒன்றாக கருதியே மேற்குறித்த கவிதையைப் பதிவுசெய்துள்ளார்.

**திருமணம்**

வாழ்க்கையில் ஒரு வசந்தம் திருமணம், திருமணங்கள் பல வகைப்படும் அவை, காதல் திருமணம் சடங்கு திருமணம், சுய மரியாதைத்திருமணம் எனவாகும். குழந்தைத் திருமணம், முன்பு இருந்தது. அதனால் பல வகைத் துன்பமடைந்தனர். குழந்தை மன ஒழிப்புச் சட்டம் அரசால் கொண்டுவரப்பட்டது, முற்றிலும் ஒழிக்கப்பெற்றது. திருமணம் இன்பத்தைத் தர வேண்டும். ஆனால் பெண்களுக்கு அடிமை வாழ்வைத் தருகிறது. திருமணத்தால் பெண் அடிமையாகிறாள். தந்தைப் பெரியார் பெண்களுக்கு கர்ப்பப்பை நீக்காத வரை விடுதலை இல்லை எனக் கருதுகிறார். தங்க. செந்தில்குமார் அவர்களும் இதனை,

**"நம்மை அடிமைகள் ஆக்கிவிடும்**

**கலியாணக் கும்பி**

**வழங்கோடி தலை நாணிக்**

**கும்மி வழங்கோடி"**

என்று பெண்களே கும்மியடித்து பாடுவதாக கவிதை படைத்துள்ளார். திருமணத்தில் பெண்களுக்கு சம உரிமை உள்ளது. என்பதை பெற்றோர்கள் பொருட்படுத்துவதில்லை. பெண்ணிடம் சம்மதம் கேட்காமலே அவளின் விருப்பத்திற்கு மாறாகவே திருமணம் செய்து வருகின்றனர். அதே போன்று ஆண்களும் தனக்கு மனைவியாக வர அவளுக்கு விருப்பம் உள்ளதா என அறியாமல் தனக்குப் பிடித்திருந்தால் போதும் என அறியாமல் நினைக்கின்றனர். இதற்கு விதிவிலக்காக சில பெற்றோர்களும் உண்டு என்பது கவனம் கொள்ளத்தக்கது.

**வரதட்சனை**

முற்காலத்தில் திருமணம் செய்து வைக்கும் போது மணமகன் மணமகளுக்கு நகை, பணம் பண்பு போன்ற பொருட்களை தட்சனை கொடுத்து திருமணம் செய்வர். ஆனால் தற்போது அப்படியே மாறிவிட்டது. ஏழைப் பெண்களுக்கு திருமணம் என்பது காணல் நீராகிவிட்டது. பல பெண்கள் வரதட்சனை கொடுக்கமுடியாமல் இன்றும் முதிர் கன்னிகளாக உள்ளனர்.

**"மாத விடாயே நிற்கப் போகிறது**

**மாமன் வந்தால் என்ன**

**வரவிட்டால் என்ன"**

என்று மது செய்கிறது.

வரதட்சனைக் கேட்பதை பலர் பெருமையாக நினைக்கின்றனர். பெண்ணைப் பெற்றோரும் வேறு வழியில்லாமல் தலையை அடகு வைத்தாவது பெண்ணைத் திருமணம் செய்து வைக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இந்நிலையை எதிர்த்து பலரும் குரல் கொடுத்து வருகின்றனர். அரசாங்கமும் சட்டம் இயற்றியுள்ளது. எனினும் இது குறைந்த பாடில்லை. தங்க. செல்வகுமார் அவர்களும் ஒரு பெண் தன்னிலை குறித்து வருந்துவதாக கவிதை படைத்துள்ளார். இதனை,

**"சமஞ்சு பல வருசமம்**

**சந்தனம் நாளிருக்க**

**நறைக்க கல்லில்லை**

**ஒருவனும் எனக்கில்லை**

**எட்டு வைகாசி**

**எங்க முத்து பாத்தாவது"**

என்கிறார்.

மேலும் பெண்களுக்கு எவ்வளவுதான் கனவுகள் ஆசைகள் இருந்தாலும் அதை தனக்குள்ளே மறைத்து வைக்கும் நிலையில் தள்ளப்பட்டுள்ளார். அதை எடுத்துயம் கூட அதற்கும் இல்லை. எங்கே என்று எண்ணி தனக்குள்ளே வைத்து புதைத்து விடுகின்றனர்.

**இதனை,**

**“ஏக்கம் ஒரு கோடி**

**எனக்குள்ள இருந்தாலும்**

**தேக்கி வைக்காட்டி**

**தெரு பூரா நாறிவிடும்”**

என்று கூறியுள்ளார்.

**தாய்மை**

தாய் என்ற சொல் தமிழில் தனிச்சிறப்பு மிக்க சொல். இச்சொல்லுக்கு இணையாகக் கூறுவதற்கு வேறு சொற்களே இல்லை. இவ்வுலகத்தில் தாய்க்கு ஈடாக வேறு எதையும் கூற முடியாது உன்னதமான ஒன்று. தாயின் பெருமை எல்லா இலக்கியங்களிலும் பேசப்பெறுகிறது. குழந்தையைப் பெற்றவர் மட்டுமே தாய் என்று அழைக்கப்பெறுவதில்லை. யார் குழந்தையாக இருந்தாலும் தன் கழந்தையாக எண்ணிப் போற்றிருப்பவரையும் குழந்தையை வளர்த்து அன்புகாட்டி அருள் நிறைந்த நெஞ்சால் போற்றுகின்றவரையும் தாய் என்று கூறுவது பிழையல்ல. ஆனால் அவர்களை சமூகம் வளர்ப்புத்தாய் என்கிறது.

உலகில் உள்ள உயிர்கள் அமைத்திற்கும் இலக்கணம் வகுத்த தொல்காப்பியம் தாய்மையை பெரிதாக மதிப்பதைக் காணலாம்.

தாயின் மேன்மையான அன்பினை வெளிப்படுத்த

**“தாய் போல் கழற்த் தழீஇக் கோடல்**

**ஆய்வினைக் கிழத்துக்கம் உரித்தென மொழிய**

**குவவொடு மயங்கிய காலையான”**

எனக் குறிப்பிடுகிறார்.

தாயை மிகவும் மதிப்பதால் தான் தாய் நாடு தாய்மொழி என்றும் நதிகளுக்கும் பெண்கள் பெயரிட்டு காவிரித்தாய், கங்கைத்தாய் என்று மதித்துப்பேசுகின்றோம். தாய் என்பவள் தன் உயிரைப் பணயம் வைத்து குழந்தையை பெற்றெடுத்து இரவு பகல் பாராமல் குழந்தையை கவனித்து குழந்தை நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வளக்கிறார் தங்க. செந்தில்குமார் அவர்களும் வாயிற்படியில் வழுக்கி விழுந்தவரை மற்ற உறவுகள் பெயருக்கு விசாரித்து விட்டு போக இறந்து புதைப் பட மாய உள்ள அம்மா ஆறுதல் சொல்வதாக கீழ்வரும் கவிதையில் படைத்துள்ளார்.

**“ஓர வழியில்**

**நீர் திரள**

**நிமிர்ந்த போது**

**எதுமர இருந்த**

**புகைப்படத்தில்**

**ஆறுதல் சொன்னால்**

**அம்மா”**

எனும் வரிகளில் தாய்மை அன்பை வெளிக்காட்டும் விதமாக மேலே கண்ட வரிகள் திகழ்கிறது.